www.tamilarangam.net

# மனிதம்

16



PAYA
UE DE COLOMBES
ASNIERE SUR -
FRAN

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சத்யஜித் ரே !!

வணிக நோக்கத்தையே முதன்மையாகக் கொண்டு பெரும்பான்மையான சினிமாவை உற்பத்தி செய்து வருகின்ற இந்திய திரைப்படத்துறையில் எதிர்நீச்சல் போட்டவர்களில் றிக்விக்கட்டத், சத்யஜித்ரே, **மிர்ணால்சன்** ஆகிய முன்னோடிகளில் ரே முதன்மையானவர். சமூகப்பிரக்ஞை கொண்ட, உணர்வுடன் கூடிய ஜதார்த்தையே குறிக்கோளாகக் கொண்டு சினிமாக்களை இயக்கிய 71 வயதான வங்கக் கலைஞர் சத்யஜித்ரேயின் இதயத்துடிப்பு 23. 4. 92 வியாழன் அன்று நின்றுவிட்டது.

1955 ம் ஆண்டு பதேர் பாஞ்சாலி யுடன் சினிமா உலகில் அறிமுகமானார். 1991 வரை சுமார் 35 வருட சினிமா வாழ்வில் கிட்டத்தட்ட 30 - 35 படங்கள் வரை இவர் இயற்றியுள்ளார்.

இந்தியாவில் மட்டுமன்றி உலகப் புகழ் மிக்க ஜதார்த்த சினிமாப்படைப்பாளியாகவே இவர் திகழ்ந்துள்ளார். இவரது சினிமா வழிமுறைகள் பற்றி பல நுல்கள் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. யப்பானிய சினிமா இயக்குனர் அக்ரோசயா, சத்யஜித்ரேயை தமது சினிமா வழிகாட்டியாக கருதுகின்றார். பிரான்சிய சினிமா உலகில் இவருக்கென்று தனியான மதிப்புண்டு. பிரஞ்சு நாட்டின் சினிமாக்கான **லைஜன்டிகேனர்** எனும் உயர் விருதை பிரான்சிய ஜனாதிபதி மித்ரன் இந்தியாவிற்கு நேரில் சென்று சத்யஜித்ரேயிடம் கையளித்தார். அதே போல் அவரது சினிமா சேவைக்காக வழங்கப் பட இருந்த ஒஸ்கார் பரிசினை இறுதியாக நோய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் இருந்த போது ஒஸ்கார் குழுவினால் நேரடியாகச் சென்று வழங்கப்பட்டது. சத்யஜித்ரேயின் இழப்பு முழு சினிமா உலகுக்கும் கலையுலகுக்குமான பேரிழப்பே.

## நூல் அறிமுகம்

உயிர்ப்பு 1
UYIRPPU

UYIRPPU
BM BOX 4002
London
WC1N 3XX

www.tamilarangam.net

# மனிதம்



**வைகாசி**

**+**

**ஆனி**

***1992***

**(இருமாதத்திற்கு ஒருமுறை)**

**வாசகர்களே!**

**விமர்சனங்களையும்**

**ஆக்கங்களையும்**

**வரவேற்கிறோம்**

***Nur für Freundkreise***

**தொடர்புகளிற்கு: -**

MANITHAM
POSTFACH 12
3000 BERN 11
SWITZERLAND

## முசுலீம்கள் மீண்டும் படுகொலை

பொலநறுவை மாவட்டத்தில் அழிஞ்சிப்பத்தன் கிராமத்தில் 28.4.92 நள்ளிரவு 25 முசுலீம் குடும்பத்தினைச் சேர்ந்த குழந்தைகள், பெண்கள், பெரியவர்கள் என்று சுமார் 58 பேர் கோரமாக படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதற்குப் பழி தீர்க்கும் செயலாக அருகில் உள்ள கரபொல முத்துகல எனும் தமிழர் கிராமத்தில் சுமார் 54 தமிழர்களும் கோரமாக படுகொலை செய்யப்பட்டு உள்ளனர்.

1985 இல் அனுராதபுரப் படுகொலை, 90 இல் காத்தான்குடிப் பள்ளிவாசல் படுகொலை, ஆகியவற்றின் தொடராகவும் அண்மைக்கால முசுலீம் எதிர்ப்பு நடவடிக்கைகளின் விளைவாகவும் அழிஞ்சிப்பத்தன் படுகொலையும் புலிகள் தான் செய்திருக்கலாம் என்று பலமான கருத்து அடிபடுகிறது.

சுமார் 400 பேர் வசிக்கும் இக்கிராமத்தில் 26 பொலீசார், ஒரு சப் இன்சுபெக்ரர், 12 ஊர்காவலர் கொண்ட ஒரு பொலீசு நிலையமும் உண்டு. கூடவே 45 துப்பாக்கிகள் வரை ஊர்மக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இப் பொலீசு நிலையத்தை புலிகள் தாக்கி விட்டு சென்றதாகவும் கூறப்படுகிறது. நள்ளிரவு சுமார் 2 மணி நேரம் படுகொலை சம்பவங்கள் நிகழ்ந்ததாகவும் கிராமத்தில் இருந்து 6,7 km தூரத்தில் இருக்கும் இராணுவ முகாமிற்கு காலை 6 1/2 மணியளவில் தான் தகவல் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இன்னும் முசுலீம் கிராமத்திற்கு இராணுவ பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கும் அதே வேளை தமிழ் கிராமங்களுக்கு இது வரை எதுவித பாதுகாப்பும் கொடுக்கப்படவில்லை. பத்திரிகைகளில் குறிப்பாக வெளிப்படுத்தப்படும் இத் தகவல்கள் புலிகள் அல்லாத வடக்கு கிழக்கு இணைப்பை விரும்பாத பேரினவாத குழுக்கள் அல்லது இராணுவம், சிங்கள ஊர்காவற்படையினரும் இப்படுகொலைகளை செய்வதற்கான சாத்தியப்பாட்டை வெளிப்படுத்துகின்றன.

கடந்த வருடம் தேசிய இனப்பிரச்சினை சார்பான அமைச்சர் தொண்டமானின் தீர்வாலோசனைகளை தொடர்ந்து, தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வின் அவசியம் முடுக்கி விடப்பட்டிருக்கிறது. சென்ற மாதம் கத்தோலிக்க ஆயர்கள் குழுவொன்று யாழ்ப்பாணம் சென்று, "அரசுடன் பேச்சு வார்த்தை நடாத்த விரும்புகின்றோம் - சமாதானமே எமது விருப்பம் " என்ற புலிகளின் கருத்தைப் பெற்று கொழும்பு திரும்பியுள்ளது.

தொடர்ந்து பௌத்த குருமார்களின் நல்லெண்ணக் குழுவொன்று ஏப்ரல் 22 ல் யாழ் சென்று 5 நாட்கள் தங்கி 13 அம்ச தீர்வாலோசனைகளை முன் வைத்து புலிகளுடன் பேச்சை தொடங்கியது. இப் 13 அம்ச தீர்வு யோசனைகளில் காணப்பட்ட "மூன்று இன மக்களினதும் பொதுத்தாயகம் இலங்கை" என்ற

www.tamilarangam.net

*சந்தாவிபரம் *

தனிப்பிரதி 3 Sfr.
ஒருவருடம் 22Sfr.
ஐரோப்பிய நாடுகள்
25 Sfr.
(தபால் செலவு உட்பட)

வங்கிக்கணக்கு
இல: -
Spar Konto
0094-157146-60-1

வங்கி முகவரி: -
Bucher Verkauf
SCHWIZERISCHE
KREDITANSTALT

SWITZERLAND

கோட்பாடு புலிகளால் நிராகரிக்கப்பட்டு, "இது இனப்பிரச்சனையின் மூலாதாரமான அடித்தள அம்சத்தையே நிர்மூலமாக்குகிறது. எனவே ஏனைய 12 அம்ச யோசனைகளையும் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இல்லாமலே போய் விடுகிறது" என்ற கருத்தும் புலிகளினால் தெரிவிக்கப்பட்டது.

அடுத்து ....... சிறீலங்கா சுதந்திரக்கட்சி எம்.பி மங்கள முனசிங்க தலைமையிலான தமிழ் எம்பிக்கள் உட்பட சகல கட்சி எம்பிக்களையும் உள்ளடக்கிய பாராளுமன்ற தெரிவுகுழு தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வொன்றினை முன் வைப்பதற்கான தயாரிப்பில் ஈடுபடுகிறது. இக்குழு தொண்டமானின் யோசனைகளையும், ஆயர்களின் ஆலோசனைகளையும், கூடவே யாழகம் சென்று திரும்பிய பௌத்த குருமார்களின் கருத்துக்களையும் தமது பரிசீலனைக்கு எடுத்து கொள்ளும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

ஆனால் இக்குழுவிற்கு ஏற்பட்டுள்ள சிக்கல்கள் ஏராளம். பாராளுமன்ற குழுவில் இருந்து சிறீலங்கா சுதந்திரக்கட்சி எம்பிக்கள் விலகவேண்டும் என்ற கருத்து அதே கட்சியை சேர்ந்த வேறு சில எம்பிக்களினால் முன் வைக்கப் படுகிறது.

சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளும் தீர்வொன்றை இவர்களால் முன்வைக்க முடியுமா? புலிகள் உட்பட தமிழ் குழுக்கள் அனைத்தும் வடக்கு கிழக்கு இணைப்பையே வலியுறுத்துவதனால் இத் தெரிவு குழுவும் வடக்கு கிழக்கு இணைப்பை ஏற்குமா? இவ்விணைப்பு தென் இலங்கையில் எவ்வித பாதிப்பை உண்டு பண்ணும். வடக்கு கிழக்கு இணைப்பை ஏற்காவிடின் புலிகள் பேச்சுக்கு உடன்படுவாரா? இச்சிக்கல்கள் தான் பாராளுமன்ற தெரிவு குழுவின் தீர்வுகள் தூய்மையாக அமையுமா அல்லது இனப்பிரச்சனைக்கான தீர்வு மீண்டும் ஒரு முறை இழுத்தடிக்கப்படுமா என்பன ஒருபுறம் இருக்க

பாராளுமன்ற தெரிவுக் குழுவிடம் தமிழ் குழுக்களின் இரு முனைத் தீர்வு யோசனைகளையும் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும். " புலிகளின் பிரச்சனைக்கு இராணுவத் தீர்வும் - தமிழ் மக்களின் பிரச்சனைக்கு அரசியல் தீர்வும் வேண்டும் " என்பதே இக் குழுக்களின் கருத்தாகும். புலிகள் மீதான இராணுவத் தீர்வு மணலாறு,கொக்குவாய் - கொக்குத் தொடுவாய்,நாயாறு என்று தமிழ்ப் பிரதேசங்களை அபகரிக்கவும்,தமிழ் மக்களை அழித்தொழிக்கவுமே பிரயோகிக்கப்படுகிறது என்ற உண்மையை இக்குழுக்கள் இன்னும் உணராது இருப்பது அவர்களின் துரோகத் தனங்களை மீண்டும் நினைவுக்கு கொண்டு வருகிறது.

தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வுப் பொறுப்பினை பாராளுமன்ற தெரிவுக் குழுவிடம் ஒப்படைத்து விட்டு, இத்தெரிவு குழுவின் யோசனையை நடைமுறைப்படுத்த தானும்,தன் அரசும் தயாராக இருப்பதாக உறுதியும் அளித்துள்ள சனாதிபதி பிரேமதாசாவும் அவரது கட்சியும் எதுவித தீர்வாலோசனையையும் தெரிவுக் குழுவிடம் முன் வைக்காமை தேசிய இனப்பிரச்சனை சார்பான அவர்களது அக்கறையின்மையை கோடிடுகிறது.இவை ஒரு புறம் இருக்க இனவாதத் தீயை மூட்டும் பல கருத்துகள் - அறிக்கைகள் ,கருத்தரங்குகள் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே கொழும்பு கணிதத்துறை விரிவுரையாளர் கலாநிதி நளின் டி சில்வா வடக்கு கிழக்கு " தமிழர் பிரதேசமே அல்ல " என்றும் " இரணைமடுவிற்கு அப்பால்தான் தமிழர் வாழும் பிரதேசம் ஒன்றினை ஏற்றுக் கொள்ளலாம் " எனவும் கூறியமை பலருக்கு நினைவு இருக்கும்.

www.tamilarangam.net

அண்மையில் மாத்தறையில் இடம் பெற்ற றுகுணு எழுச்சிக் கருத்தரங்கில் முன்னாள் கல்விப் பணிப்பாளர்-பரீட்சை ஆணையாளர் குணபால விக்கிரமரத்தின உட்பட றுகுணு பல்கலைக்கழக பேராசிரியர் சிறிமல் ரணவல்ல, ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக பேராசிரியர் விமலசூரியர் ஆகியோர் வடக்கு கிழக்கு " றுகுணு பகுதியின் பிரதேசங்கள், அது துட்டகைமுனுவின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அவை மீண்டும் றுகுணுவுடன் இணைக்கப்பட வேண்டும்" என்றும் ஒரே கருத்தினைப் பிரதிபலித்துள்ளமை இனவாத தீப்பந்தத்திற்கு நெய் ஊற்றியதாக அமைந்துள்ளது.

இத்தகைய இனவாத கருத்துக்களின் பின்னணியிலேயே அழிஞ்சிப்பத்தன் முசுலீம் மக்களினதும் கரபொல-முத்துக்கல கிராமங்களில் தமிழ் மக்களினதும் படுகொலைகளையும் பரிசீலிப்பதற்கு இடமுண்டு.

கொலைகளைச் செய்தவர்கள் யாராயினும் இத்தகைய படுகொலைகளும்,விடுதலைப்புலிகளின் தொடர்ச்சியான முசுலீம் எதிர்ப்பு நடவடிக்கைகளும் வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிரான,வலுவான காரணிகளே.

**வாசகர்களே!**
**மனிதம் தொடர்பாளர்களே!**
**உங்கள் கடிதங்களிற்கு உரிய நேரத்தில் பதில் அனுப்பாதது எமது பக்க தவறு என்பதை ஏற்றுக் கொள்கின்றோம்.**

*

**உங்கள் தொடர்புகளை தொடர்ந்து பேணுங்கள் பதில்கள் உடன் அளிக்கப்படும் என்பதை உறுதி சொல்கின்றோம்.**

# மே – 1

# மொஸ்கோவில் கம்யூனிஸ்டுகளின் ஊர்வலம்

மே 1ம் நாள். உழைக்கும் மக்களின் மகத்தான எழுச்சிகரமான நாள்.

இராணுவ அணிவகுப்பும் தலைவர்களின் பிரசன்னமுமாய் வரலாறு ரீதியாய் எங்கும் சிவப்பாய் இருக்கும் செஞ்சதுக்கத்தில் இம்முறையும் பிரமாண்டமான ஊர்வலம்.

ஆனால் இந்த ஊர்வலத்தை ஒழுங்கு செய்தது அரசு அல்ல. அதனால் செஞ்சதுக்கத்தில் அரசு தலைவர்கள் இல்லை. இராணுவ அணிவகுப்பும் இல்லை, ஆயினும் தொழிலாளர்கள் மட்டும் ஆயிரமாயிரமாய் திரண்டனர். பொலிசார் கைகட்டி நின்றனர்.

<< தொழிலாளர் தினத்தையும் இளவேனில் நாளையும் >> கொண்டாடுவதற்காய் செஞ்சதுக்கத்தில் கூடிய 50 ஆயிரத்திற்கும் அதிகமானோர் ஜெல்சினின் பொருளாதார திட்டங்களுக்கு கடுமையான எதிர்ப்பையும் வெளிப்படுத்தி நின்றனர்.

Moscow முதல் சைபீரியா வரை ஏசியாவின் பல பகுதிகளில் கொண்டாடப்பட்ட மே தின ஊர்வலங்களில் சோவியத் யூனியனின் கூட்டமைப்பின் தலைவர்களான லெனின், Stanlin உருவப்படங்களையும், சுத்தியல், அரிவாள் பதித்த செங்கொடியையும் ஊர்வலத்தினர் தாங்கி நின்றனர். இங்கே குறிப்பிட்டு சொல்ல வேண்டியது மேற்படி மேதின ஊர்வலங்கள் எல்லாம் சோவியத் யூனியனின் சிதைப்பை தொடர்ந்து ரசியாவில் புதிது புதிதாய் தோன்றி வரும் கம்யூனிச தொழிலாளர் இயக்கங்களால் ஒழுங்கு செய்யப்பட்டது என்பதே.

www.tamilarangam.net

சுவிஸில்

# தமிழ்ப் புத்தாண்டு

## இரு நிகழ்ச்சிகள்

ஐரோப்பாவில் தமிழர் *கலை இலக்கிய கலாச்சாரப் பேணல்* என்று நாடகங்கள் கலை – இசை நிகழ்ச்சிகள் இலக்கியச் சந்திப்புகள் ,புத்தக வெளியீடு கள் என்று ஆங்காங்கே இடைக்கிடை ஆயினும் நடை பெற்று வருவது வழக்கம்.

ஆனால் தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு 12. 4. 92 அன்று சூரிச்சில் சுவிஸ் *தமிழர் கலாச்சார மன்றம்* நடாத்திய ஒரு வித்தியாச மான நிகழ்ச்சி! அந்நிய மொழிப் பரிச்சயத்துக்குட் பட்டுவரும் எம் சிறார்களை தமிழ்மொழிக் கல்வியில் ஊக்குவிக்கும் நோக்கில் . . . .

மாணவர் சிறுவர்க்கான **பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி , வாசித்தல் போட்டி !**

12. 4. 92 நிகழ்ச்சிக்குரிய மண்டபத்தைச் சென்றடைந்தோம். போட்டியில் பங்கெடுப்பதற்கான மாணவர் – சிறுவர்களும், அவர்களின் பெற்றார் – ஆசிரிய ர்களும் இந் நிகழ்ச்சியில் கரிசனை கொண்டவர்களாக மண்டபத்தை நிறைத்திருந்தனர்.

எவ்வித சலனமும் இன்றி நடுவர்கள் முன்னிலையில் போட்டிகள் ஆரம்பமாகியது. சிறுவர்கள் பலரும் உற்சாகத்துடன் போட்டியில் பங்கெடுத்தனர். சிறுவர்கள் தமிழ் மொழியில் அக்கறை இல்லை என்ற கருத்து இங்கு பொய்யாக்கப்பட்டிருந்தமை கண்கூடு. ஆறு வருடங்கள் சுவிஸில் வாழும் எட்டு வயதுச் சிறுமியின் தமிழ்மொழி ஆற்றல் அனைவரையும் வியப்பு க்குள்ளாக்கியது. முப்பது நிமிடங்களில் *புல்ஸ்காப்* பேப்பரில் இரண்டு பக்க **கட்டுரை** யொன்று வரைந்தி ருந்தார். **வாசிப்பு, பேச்சு** ஆகியவற்றிலும் திறமையுடன் முதற் பரிசும் பெற்றிருந்தார். தமிழ் மொழி ஆற்றல் குறைவாக இருந்த சில மாணவர்களின் பெற்றார் " *தமிழ் சொல்லிக் கொடுப்பதற்கான ஒழுங்குகள் எதுவும் எமது இடத்தில் இல்லையே* " என்று தமது வருத்தத்தைத் தெரியப்படுத்தினர்.

*பிரான்ஸ்* மொழி பேசும் பகுதியில் உள்ள சிறார்கள் எவரும் போட்டியில் பங்கு பற்றாவிட்டாலும் – *ஜேர்மன்* மொழி பேசும் எல்லாப் பகுதி யிலிருந்தும் மாணவர்கள் போட்டியில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

போட்டிகள் அனைத்தும் சுமார் இருபது வருடங்களுக்கு முந்திய நெறிமுறைகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. பேச்சுக்கள் எதுவும் அந்தந்தச் சிறுவர்களின் வயதுக்கேற்ப மொழிநடையில் அமைந்திருக்கவில்லை. தொல்காப்பியத்தின் *சிறப்பு* ஆறு, ஏழு வயதுச் சிறுவர்களின் உதடுகளிலும் தவழ்ந்தது.

முதன்முறை என்பதனால் சிறு சிறு தவறுகளைக் கொண்டிருந்தபோதும் , இம் முன்முயற் சியினால் பெற்றோர் பலருடன் கூடவே நானும் ஒருவித உற்சாகத்தை , ஊக்கத்தைப் பெற்றுக் கொண்டேன்.

மேலும் , நடந்தேறிய இப் போட்டி பற்றிய கருத்தை அறியும் நோக்குடன் நிகழ்ச்சியை மிகவும் ஆர்வத்துடன் முன்னின்று நடாத்திய **சுவிஸ் தமிழர் கலாச்சார மன்றத்** தலைவர் *இரத்தினமூர்த்தி அவர்களைச் சந்தித்தபோது – – –*

**நான் :** ஐரோப்பாவில் பலரும் *கலாச்சாரப் பேணல்* என்று வேறு நிகழ்ச்சிகளை நடாத்தும்போது நீங்கள் எப்படி இச் சிறுவர் நிகழ்ச்சிகளை தெரிவு செய்தீர்கள் ?

**இரத்தினமூர்த்தி :** ஏற்கனவே ஊரில் (குரும்பசிட்டி) *சன்மார்க்க சபை* மூலம்இப்படியான நிகழ்ச்சிகளை நடாத்திய அனுபவம் உண்டு. அத்தோடு தமிழ் மொழிக் கல்வியை ஊக்குவிப்பதற்கும் இது ஒரு நல்ல வழி எனக் கருதினோம்.

**நான் :** மாணவர்களை *கீழ்ப்பிரிவு* , *மேற்பிரிவு* என்ற இரு பிரிவுகளில் மட்டும் உட்படுத்தி போட்டிகளை

www.tamilarangam.net

நடாத்தினீர்கள். இதில் சில தவறுகள் ஏற்பட்டுள்ளமை பற்றி சில பெற்றார் குறைப்பட்டுக் கொண்டார்களே.

**இரத்தினமூர்த்தி :** ஆம்! முதன்முறையாக இப் போட்டியை நடாத்துவதனால் , மாணவர்தொகை குறைவாக இருக்கும் என்றுதான் இரு பிரிவுகளாகப் பிரித்திருந்தோம். ஆனால் *கீழ்ப்பிரிவு* , *மத்திய பிரிவு* , *மேற் பிரிவு* என்றுதான் பிரித்திருக்க வேண்டும். ஆரம்பத்தில் இப்போட்டிக்கான விளம்பர நோட்டீஸ் அனுப்பப்பட்டதும் பதினைந்து மாணவர்கள்தான் விண்ணப்பித்திருந்தார்கள். வீரகேசரியில் வந்த விளம்பரத்தின் பின்புதான் பலர் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு தமது பிள்ளைகளும் பங்குபற்ற விரும்புவதாக கூறினார்கள். அனைவர்க்கும் உற்சாகம் கொடுக்கவேண்டும் என்றதனால் அவ் வேண்டுதல்களை ஏற்றுக்கொண்டோம். இதனால் சிறு சிறு தவறுகளும் நேர்ந்துவிட்டது.

**நான் :** பரிசில்களாக *தங்கப் பதக்கம்* , *வெள்ளிப் பதக்கம்* தான் கொடுக்கப்பட வேண்டுமா ? பரிசில்களை வேறு முறைகளில் ( *உதாரணமாக புலமைப் பரிசில்கள் வழங்குதல் போன்ற* ) மாற்றிக்கொண்டால் என்ன ?

**இரத்தினமூர்த்தி :** எம்மவர்களை ஊக்குவிப்பதற்கு இதுதான் சிறந்த பரிசாகக் கருதுகிறோம். நீங்கள் கூறுவதும் சரிதான். ஆனால் அதில் சில சிக்கல்களும் உண்டு.

**நான் :** சின்னப் பிள்ளைகளை ( *குறிப்பாக ஆறு,ஏழு வயதிற்கு உட்பட்டவர்களை* ) ஊக்குவிப்பதற்கு வேறு ஏதாவது முயற்சிகள் பற்றி யோசித்திருக்கிறீர்களா ?

**இரத்தினமூர்த்தி :** ஆம்! யோசித்திருக்கிறோம். சந்தர்ப்பம் வரும்போது விரிவாகக் கூறுவோம்.

**நான் :** உங்களது இம் முயற்சிக்கு எதிர்ப்புகளும் உண்டா ?

**இரத்தினமூர்த்தி :** அப்படிப் பெரிதாகக் கூறுமளவிற்கில்லை. ஆனால் ஒரு சிலர் தமது (இயக்க) அமைப்புக்குள் சேர்ந்து இயங்கும் படி வற்புறுத்துகிறார்கள். ஆனால் அதில் எமக்குச் சுதந்திரம் இருக்காது என்பதே எமது கருத்து.

**நான் :** நீங்கள் *தமிழர் கலாச்சார மன்றத்தின்* மூலம் மொழி வளர்ச்சியுடன் இந்து மதத்தையும் வளர்ப்பது பற்றி யோசிக்கிறீர்களா ?

**இரத்தினமூர்த்தி :** இல்லை ! மொழி வளர்ச்சி பொதுவானது. அதில் பல மதத்தவரும் இணைய வேண்டி இருப்பதனால் அப்படிச் செய்ய முடியாது.

**நான் :** இனிவரும் காலங்களில் ஏனைய பகுதிகளில் உள்ள உற்சாகமுடையவர்களையும் இணைத்து பரவலாக்குவது பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?

**இரத்தினமூர்த்தி :** நிச்சயமாக ! அப்போதுதான் மேலும் பல மாணவர்களை ஊக்குவிக்க முடியும்.

ஒருவித உற்சாகத்துடன் விடைபெற்றுக் கொள்கிறேன்.

வரவேற்கப்பட வேண்டிய நல்ல முயற்சி இது. ஒவ்வொரு பெற்றோரும் கவனத்தில் எடுப்போம். வளர்த்தெடுப்போம் !

---

## மனிதாபிமானம் !!

அமெரிக்காவில் கருக்கலைப்பை சட்டரீதியாக்கக் கோரி 5 இலட்சம் பேர் கலந்து கொண்ட ஊர்வலம் ஒன்று வாசிங்டனில் நிகழ்ந்துள்ளது.

இதுவரையில் அமெரிக்க தலை நகரில் நடந்த ஊர்வலங்களில் மிகப் பெரிய ஊர்வலம் இதுதானும். பொலிசாரின் கணக்கின்படி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை 5 இலட்சமாம். ஆனால் அது பொய். 7 இலட்சம் பேர் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர் என்று அமெரிக்க தேசிய பெண்கள் அமைப்பு சொல்கிறது.

எப்படியோ, அமெரிக்காவில் குழந்தை அழிப்பு சட்டரீதியாக்கப்பட வேண்டுமாம். நியூயோர்க் கவர்னரே இதை ஆதரிக்கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# *Biel* இல்

**11. 4. 92** சனிக்கிழமை. இன்று பெரிய அளவில் அலுவல்கள் ஒன்றுமில்லை. BIEL இல் நடைபெற இருக்கும் *கண்ணதாசன் கலை மன்றத்தின்* புதுவருடக் கலைவிழாவுக்குச் செல்லலாம். மனைவி பிள்ளைகளையும் அபிப்பிராயம் கேட்டாயிற்று. எல்லோருக்கும் பெரும் விருப்பம்தான். வீட்டுக்கு வந்திருந்த விருந்தாளிகளுக்கும் தகவல் தெரிவித்தாயிற்று. அவசர அவசரமாக சமையலை முடித்துச் சாப்பிட்டுவிட்டு, விருந்தாளியாக வந்திருந்த நண்பனின் காரிலேயே புறப்பட்டோம். AUTO BAHN ( பெருந்தெரு ) இனைப் பிடித்து BIEL போய்ச் சேரும்வரை பிரச்சினை எதுவும் இருக்கவில்லை. ஆனால் BIEL இல் நின்றுகொண்டு உரிய இடத்தை அடைவதில் சற்று சிரமம் ஏற்பட்டுப் போய்விட்டது. "றெயினில்" போனால் உரிய பஸ்ஸைப் பிடிச்சு இடத்திற்குப் போய் சேர்றது சுலபம். "காரில போனால் நெடுக இப்பிடித்தான். " நேரம் பிந்துவத னால் ஏற்பட்ட மனஉளைச்சலைக் கொட்டித் தீர்த்துக் கொண்டேன். எப்படியோ, எங்களைப் போல நிகழ்ச்சி க்கென காரில் வந்தருந்த வேறு சில நண்பர்களின் உதவியையும் துணைக்கிழுத்துக் கொண்டு, BLUMEN RAIN இலுள்ள நிகழ்ச்சிக்குரிய மண்டபத்தைச் சென்றடைந்தோம்.

மண்டபத்தை சென்றடைந்ததும் கொடுக்கப்பட்ட வரவேற்பு, *இடம்மாறி வேறு கல்யாண மண்டபத்தை வந்தடைந்து விட்டோமோ* என்ற உணர்வை ஏற்படுத்தியது. ஆம்! பலகார வகைகளும் தேநீரும் அடிக்கடி பரிமாறப்பட்டது. கல்யாண வைப வங்களில் கூடகாணமுடியாத பெரு வரவேற்பு !

நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டவாறு தமிழ் மொழி வாழ்த்து, வரவேற்புரையைத் தொடர்ந்து *பாரதி கலைக் குழுவினரின்* "வசந்தக்கனவுகளுக்காய்" எனும் **கவிதா நிகழ்வு** ஆரம்பமானது. (இக் கவிதா நிகழ்வு ஏற்கனவே சென்ற ஆண்டு BERN இல் *கார்த்திகைத் தீபங்கள்* நிகழ்ச்சியில் இடம்பெற்றது. பலருக்கு நினைவிருக்கலாம். ) - - - - - - - - - - - - - ?

நாம் வசந்தக் கனவுகளை நிறைவேற்றுவதற்காக – ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக வந்து சேர்ந்து கனவுகள் நிறைவேறாமல் புதிய புதிய துன்பங்களுக்கு உட்பட்டு, சொந்த முகமிழந்து நிற்கும் எமது இன்றைய நிலைமைகளை – – –

நடிப்புடனும் இசையுடனும் – கவிதையில் எடுத்துக் கூறியதே இந் நிகழ்ச்சி ! சுமார் இருபதுக்கு மேற்பட்ட ஈழத்துக் கவிஞர்களின் கவிதைகள் கொலாஜ் முறையில் தொகுக்கப்பட்டிருந்தது பெண்கள் இருவரும் ஆண்கள் மூவரும் சேர்ந்து எங்கள் தேசிய உடையில் (வேட்டி, சேலை) மேடையில் காட்சியளித்தமை – பார்வையாளர்களை சில கணம் தாய் மண்ணிற்கு அழைத்தச் செல்ல வைத்தது. இந் நிகழ்ச்சியின்போது சபையில் காணப்பட்ட *நிசப்தம்* பார்வையாளர்களை நிகழ்ச்சியுடன் ஒன்றிக்க வைத்தமை க்கான சாட்சியமாகும்.

தொடர்ந்து – *சுவிஸ் தமிழ் இசைக் குழுவினரின்* இசை நிகழ்ச்சி ! வழக்கம்போல பழைய புதிய சினிமாப் பாடல்களுடன், *ஓசீலா* போன்ற ஈழத்துப் பாடல்களும் இடம்பெற்றன.

எமது தாய் மண்ணின் நிகழ்வுகளையும் – நிகழ்வுகளின் விளைவுகளையும், எங்கள் அகதி வாழ்வையும் எடுத்துக் கூறும் கவிதை களுக்கும் மற்றும் எங்கள் கிராமப்புறப் பாடல்களுக்கும் இசையமைக்கும் முயற்சியில் இவ் இசைக்குழுக்கள் ஈடுபட்டு – எமது மண்ணுக்கென்ற சொந்த இசையை நிர்மாணிக்க முன்வர வேண்டும்.

இசைநிகழ்ச்சியை அடுத்து இடம்பெற்ற **சாண்டில்யன்** எனும் சரித்திர சமூக நாடகம்! இது – சில நல்ல கலைஞர்களை இனம் காட்டியதுதான். ஆனால் இந்நாடகம் *மெட்றாஸ் மசாலா* சினிமாப்பாணியை இம்மியும் வழுவாமல் தழுவியதென்றால் மிகையாகாது. ஆண்களே பெண் வேடம் போட்டு நடித் தார்கள். பெண் வேடம் போட்டு (ஆண்) ஆடிய *ஆபாச நடனம்* ஒன்று பார்வையாளர்களைக் கூச்சப்படுத்தியது. இந் நடனத்தின்போது, பார்வையாளராக இருந்த பெண் ஒருவர் தனது சீலைத் தலைப்பால் முகத்தை

www.tamilarangam.net

மறைத்துக் கொண்டார்.

இயந்திரமயமான இவ் வாழ்வியில் சூழலில் – ஒரு நாடகத்தைத் தயாரிப்பதற்கு இந் நாடகக் குழு எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கும்; எவ்வளவு நேரத்தை உழைப்பை செலவிட்டிருப்பர். இவ்வளவு கஷ்டத்தின் மத்தியில் தயாரிக்கப்படுகின்ற இம் முயற்சிகள் சமூகத்திற்கு எவ்வித பிரயோசனமுமின்றி பார்வையாளர்களால் நிராகரிக்கப் படுகின்றபோது எவ்வளவு கவலையாக இருக்கின்றது.

தமிழ் நாடகத்துறை நியாயமான அளவிற்கு வளர்ச்சியடைந்துவிட்ட இன்றைய நிலையிலும் இத்தகைய சினிமாப்பாணி நாடகங்கள் அவசியந்தானா?

தாய் மண்ணிலும்சரி – அகதி வாழ்விலும்சரி எவ்வளவு துன்ப துயரங்களை நாம் அனுபவிக்கிறோம். இத் துன்ப துயரங்களில் நூறில் – – ஏன் ஆயிரத்தில் ஒரு பங்கையாவது இந் நாடகங்கள் , கலை நிகழ்ச்சிகள் ஊடாக மக்களுக்கு உணர்த்த வேண்டாமா ?

*கண்ணதாசன் கலை மன்றத்தின்* முயற்சிகள் என்றும் வரவேற்கப்பட வேண்டியவையே. இம் முயற்சிகள் தொடர்ந்து , இனிவரும் காலங்களில் மேலும் அர்த்தமுடையதாக பரிணமிக்கும் என எதிர்பார்க்கலாமா ?

**வி. லோகதாஸ் –.**

---

37 ம். . . பக்கத்தின் தொடர்

திக்கத்திற்காக போட்டி போடும் முரண்பாடுகளில் ஒன்றாகும். அந்த முரண்பாட்டின் பண்பையும் அளவையும் குறைத்து மதிப்பிடுவது தவறாகும்.கிழக்கு மாகாணம் என்ற பகுதிப் பிரச்சனையை முழுமையாக்க முனைவது தவறு.அதே வேளை அதற்கே உரிய முக்கியத்துவத்தை கொடுக்க மறுப்பதும் தவறாகும். பகுதிப் பிரச்சனையும் ஒவ்வொரு முரண்பாட்டில் காத்திரமான பங்கை ஆற்ற முடியும்.

"புலிகளின் பாசிசம் பற்றிய விமர்சனங்கள் எதுவும் தமிழ் தேசியத்துள் தோன்றி உள்ள உள்முரண்பாடு என்ற எல்லைக்குள்ளாகவே முன்னெடுக்கப்பட வேண்டும். " என்று குறிப்பிடப்படுகிறது. ஒரு சமுதாயத்தில் நிலவும் முரண்பாடுகளை உள்முரண்பாடு வெளிமுரண்பாடு என்று பார்க்கலாமா? இல்லை மாறாக இந்த முரண்பாடு எந்த வகைப்பட்டது. இது மேலாதிக்கத்திற்காக போட்டி போடும் ஒரு முரண்பாடா? இல்லையா? சமுதாயத்தை முன்னேற்றிச் செல்வதில் இந்த முரண்பாடு எவ்வாறு தடையாக உள்ளது? என்ற அணுகுமுறையே முரண்பாடு பற்றி நாம் ஆய்வு செய்வதற்கு கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறையாகும்.அப்படிப் பார்க்கும் போது பாசிசத்திற்கும்–சனநாயகத்திற்கும் இடையிலான முரண்பாடு எமது சமுதாயத்தின் வளர்ச்சிக்கு தடையாக உள்ளதும் மேலாதிக்கத்திற்காக போட்டி போடுவதுமான ஒரு முரண்பாடாகும். இந்த முரண்பாடு உடைக்கப்படுவதன் மூலமே எமது சமுதாயம் முன் செல்ல முடியும். அந்த வகைப்பட்ட முரண்பாடு ஒன்றுக்கு மேற்படி கருத்தானது மிகக்குறைந்த அழுத்தத்தையே கொடுக்கிறது.

***கரிகாலன்***

## ஊருக்கு உபதேசம் !!

சுதந்திரம் வேண்டி சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து போன உக்கிரைன் மொல்டாலியா போன்ற குடியரசுகளில் வாழும் சிறுபான்மை தேசிய இனங்கள் பிரிந்து போக விரும்பும் போது இன்றைய சுதந்திர நாடுகள் அவற்றை ஒடுக்குகின்றன.

உக்கிரைனில் உள்ள Krim என்ற சுயாட்சிப் பிரதேசம் பிரிந்து போக விரும்புகிறது.இது ரசியர்களை பெரும்பான்மையாக கொண்டது. நடந்த தேர்தலிலும் அதிகப்படியான மக்கள் பிரிந்து போவதையே விரும்புகின்றனர். ஆயினும், உக்கிரைன் அதிபரோ மனித வர்க்கத்தின் படுகொலைக்கான தேர்தல் இது என்று கண்டித்திருக்கிறார்.

## கொர்பசி வேதம் !!

ஜெல்சின் இந்த உலகிற்கு மாபெரும் தவறு இழைத்து விட்டார். இந்த நாடு வேறு வழியில் கிழித்தெறியப்பட்டு விட்டது. இனி, பொருளாதார ஐக்கியம் சிதைந்து போய்விடும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓசோனின் பாடம்
## இயற்கை – மனிதன்

1975ல் முதல்முதலாக ஆராய்ச்சியாளர்கள் வட துருவப்பகுதியில் ஓசோன் மண்டலம் தனது வழமையான அளவிலும் பார்க்க செறிவு குறைந்திருப்பதை அவதானித்தனர். வருடாவருடம் செறிவு குறைந்து கொண்டு வரும் ஓசோன் மண்டலம் துருவப்பகுதியின் இளவேனில் காலத்தில்தான் நடைபெறுகிறது. இவ்வாறான ஓசோன் இழப்பினால் வழமையான செறிவிலும் பார்க்க 50 சதவிதமான செறிவு குறைந்து நலிந்து போய் விட்டது. பெப்ரவரி 92ன் ஆரம்பப்பகுதியில் அமெரிக்க வான்மண்டல ஆய்வகமான நாஸா வினைச் சேர்ந்த விஞ்ஞானிகள் புகோளத்தின் வடபகுதியில் குளோரோமோனோ ஒக்சைட் செறிவு அதிகரித்திருப்பதையும் இதனால் ஏற்கனவே நலிவுற்றிருந்த ஓசோன் மண்டலத்தின் 8 வீதத்தை அழித்துவிட்டதையும் கண்டறிந்தனர். ஆய்வாளர்கள் மீண்டுமொரு பயங்கரத்தினை உலகிற்கு அறிவக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டனர். தீவிரமான சூரியக கதிர்கள் மெல்லியதான ஓசோன் மண்டலத்திற்கூடாக பூ மியை வந்தடைந்தமையால் மீண்டும் நலிவுற்றிருந்த உலகின் வட கோளத்தில் 30 தொடக்கம் 40 வீதமான செறிவை பாதித்திருக்க கூடுமென அஞ்சுகின்றனர்.

ஓசோன் மண்டலம் செறிவு குறைவதனால் உலகத்தின் உயிரினங்களின் மீதான பாதிப்பு எவ்வளவு பாரதூரமானது என்பது பற்றி பலவின ஆக்கங்களும் ஆய்வுகளும் வெளிவந்துள்ளன. இதனால் ஆய்வாளர்களின் கவலையெல்லாம் உலகத்தை இந்தப்பயங்கரத்தில் நின்று முழுமையாகக் காப்பாற்ற முடியாது என்றாலும் இந்தப் பயங்கரத்தின் அளவையாவது குறைத்துக் கொள்ள வேண்டும் என்ற திசையை நோக்கியே இருந்தது. ஆனால் புதிய பெறுமானங்களின் பெறுபேறுகளின் அடிப்படையில் அவர்களது முடிவெல்லாம் " நாங்கள் நினைத்ததிலும் பார்க்க நிலைமை படுமோசமாகவும் பயங்கரமுமாக இருக்கிறது" என்பதுதான்.

மனிதனது கைங்கரியத்தால் வெளிமண்டலத்தில் வருடக்கணக்காக படிந்தேறிய முலகங்கள் வெளிமண்டலத்தின் இரசாயனச் சமநிலையைச் சீர்குலைக்கத் தொடங்கின. உலகினைச் சூழ்ந்துள்ள வெளிமண்டலத்தில் (FCKWS )என்னும் இரசாயனப்பொருள் 18 ஆண்டுகளுக்கு முன்பே 1974ல் அமெரிக்க இரசாயன நிபுணர்களான றோலான்டும் , மொலினாவும் எ FC KWS என்ற இரசாயனப் பொருள் ஓசோன் வெளி மண்டலத்தை மிகக் கடுமையாகப் பாதிக்கக் கூடியதென்பதை அறிவித்தார்கள். 1984ல் வடதுருவப் பகுதியில் ஓசோன் மண்டலச் செறிவு குறைந்து கொண்டு வருவது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இது தொடர்பாக எத்தனையோ ஆய்வுகளும் கொள்கைகளும் பெறுபேறுகளும் வெளிவந்து மேற்சொன்ன இரசாயன நிபுணர்களின் கணிப்பு சரியானதுதான் என்று நிறுவப் பட்டது. இருந்துமென்ன , இப்போது ஓசோன் மண்டலத்தில் ஓட்டைகள் விழுந்துள்ளன. இவ்வோட்டைகள் அமெரிக்காவின் மீதும் ஐரோப்பாவின் மீதும் பரவியிருக்கின்றதென்றவுடன் 3 வருடங்களுக்குள் எல்லா FCKWS உற்பத்தியும் படிப்படியாகக் குறைக்கப்பட்டு 3 வருடத்தின்பின் FC KWS க்கு முற்றான தடைவிதிப்பதென்று முடிவெடுத்துள்ளார்கள் மனிதகுலத்தின் காவலர்களான அமெரிக்க ஐரோப்பிய அரசியல்வாதிகள்.

FCKWS ன் தடைக்கான முயற்சிகள் பல ஆண்டு காலமாகவே நடந்து கொண்டிருக்கிறது. ஸ்பிரேயர்கள், குளிர்பதனச் சாதனங்களில் முக்கியமாக இடம்பெற்றிருக்கும் இவ் இரசாயனப் பொருளை 2000 ஆண்டுக்குள் உற்பத்தி செய்யப்படும் தொகையில் இருந்து 50வீதம் குறைப்பதென்று தொழில் வளர்ந்த நாடுகள் 1987ல் மொன்றியலில் கூடிமுடிவெடுத்தன. ஆனால் இந்த முடிவினால் மாத்திரம் எந்தவிதத்திலும் நிலைமை சீரடையவில்லை. ஆனால மோசமடைந்துவரும் ஓசோன் மண்டலத்தின் செறிவு குறைதல் இருமடங்கு வேகமாக கீழிறங்கியது. மொன்றியல் மகாநாட்டில் பங்கு கொண்ட எல்லா நாடுகளிலும் ஒப்பந்தத்தின் படி தடைகளை எந்த நாடும் தீவிரமாக நடைமுறைப்படுத்தவில்லை. உற்பத்தியை 50 வீதமாக குறைப்பதும் பாவனையைக் கட்டுப்படுத்தி 2000ஆண்டுக்குள் முற்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நும் முழுவதுமாக இந்த கேடான இரசாயனப் பொருட்களை ஒழித்துவிடுவது என்பதில் எந்தக் கவனமும் செலுத்தப் படவில்லை. 1990 ஒக்டோபரில் நடந்த *சுற்றாடல்* மகாநாட்டில் விஞ்ஞானிகளதும் அவதானிகளினதும் கணிப்புபடி ஓசோன் வளிமண்டலத்தில் படிந்துள்ள 30தொடக்கம் 40வீதமான FCKWS இன் தொடர்ச்சியான தாக்கத்தின் மூலம் அடுத்தநூற்றாண்டு வரை கெடுதலை விளைவிக்கக் கூடிய பலம் வாய்ந்ததாக இருக்கும். இவற்றை இலேசாக வளிமண்டலத்திலிருந்து அகற்றமுடியாது. இரசாயனநிபுணர் ரொலான்டின் கருத்துப்படி நாங்கள் என்னதான் மாற்று நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் எவ்வளவு காலம் இந்த அபாயம் நீடிக்குமென்று எங்களால் கணக்கிட முடியாது. ஒன்று மட்டும் திட்டவட்டமாகக கூறமுடியும். வருகின்ற பத்து வருட காலங்களில் நிலமை இன்னும் மோசமடையும் என்பது மட்டும் திட்டவட்டமாகக் கூறமுடியும். 'நாங்கள் என்னதான் தலைகீழாக நின்றாலும் இதனை மாற்ற முடியாது எனக் கூறியுள்ளார்.

ஓசோன் வளிமண்டலத்தை அரிக்கும் வாயுக்கள் பலவுள்ளன. இவை ஓசோன் வளிமண்டலத்தினை அரிப்பதுடன் ' பூ கோளத்தின் காலநிலையிலும் பாரிய மாற்றத்தையும் ஏற்படுத்துகின்றது. பூ மியின் தட்ப வெப்ப நிலையைக் கூடச்செய்வதின் மூலம் இந்தக் 'காலநிலை மாற்றம் ஏற்படுகிறது. இதில் FCKWS இன் பங்கு ஆக 18 வீதம்தான். 50வீதமான பங்கை செய்வது காபனீர் ஓக்சைட்.' இதனை வளிமண்டலத்திற்கு வழங்கும் திருப் பணியைச் செய்யும் நாடுகளாக அதாவது 70வீதம் தொடக்கம் 80வீதமான உற்பத்தியை செய்வது தொழில் வளர்ந்த நாடுகளாகும் அத்துடன் மீதேன், ஓசோன், லாவிங்காஸ் போன்றவையும் காரணிகளாக விளங்கின்றன. இந்தநச்சுவாயுக்களெல்லாம் வாகனப் போக்குவரத்து பிலாஸ்ரிக் 'மூலகங்கள் சேர்ந்த பொருட்களை எரிப்பது, விவசாயத்தில் இரசாயனங்களின் தாக்கம் போன்றவற்றால் ஏற்படுத்தப்படுவன. இந்தஓசோன் பயங்கரத்தால் மனிதஇனத்தினை எதிர்நோக்கும் பயங்கர



விளைவுகள் என்ன ?

30 தொடங்கி 35 கிலோமீற்றர் பருமனில் பூ கோளத்தைச் சுற்றிப் படைபோல் படிந்திருக்கும் ஓசோன் மண்டலம் சூரியக் கதிர்களில் இருக்கும் அல்ராவயலட் கதிர்களை வடிகட்டி அனுப்பும் பணியைச் செய்பவை ஒவ்வொரு ஒரு விகித ஓசோன் அழிவினால் இரண்டு வீதமான அல்ராவயலட் கதிர்கள் பூ மியை வந்தடையும். ஆனால் வடதுருவத்தில் ஏற்பட்டுள்ள ஓசோன் மண்டல அழிவினால் நிச்சயமாகக் அதிகளவு அல்ராவயலட் கதிர்கள் பூ மியை வந்தடையும்.' இவற்றின் விளைவுகள் உடனடியாக இருக்கும் தாக்கத்தை விட நீண்டகாலத் தாக்கத்தைச் செலுத்தவல்லது. மனிதனின் தோல் கண் நோய் எதிர்ப்புச் சக்தி போன்றவற்றை தாக்கக் கூடியதுடன் சந்ததிநிர்ணயம், மனிதனின் மிக முக்கிய தகவல்களை உள்ளடக்கிய குரமோசோமையும் தாக்கும்வலிமை படைத்தவை. ஒருவித ஓசோன் அழிவினால் தோல்புற்று நோய் 4 விகிதம் கூடுதலாக அதிகரிக்கும். தாவரங்கள் தங்கள் வளர்ச்சிக் காலத்திலேயே கருகிப் போய் விடும். தாவரவிருத்தியும் சுருங்கிப்போகும். கண்ணுக்குத்

28ம் . . . பக்கத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை:

# வேரோடு மண்

மூலைச் சுவரில் சாத்தியிருந்தது சையிக்கிள். பெட்டியுக்க கிடந்த ஆட்டுப் புழுக்கைகளை அள்ளிச் சுத்தஞ் செய்து கொண்டிருந்தார் நூர்துக்காக்கா.
போன கிழமை கட்டி வந்த ஆடு நிரம்பவுமே கத்திக் கூப்பாடு போட்டது சினமாக இருந்தது.

சோனக தெருவால இறங்கி சின்னக் கடைப்பக்கமாக வெளிக்கிட்டவர் என்ன நினைத்தாரோ சின்னக்கடை மீன் சந்தையடியில சிறிது நேரம் நின்று பெருமூச்சு விட்டுவிட்டு கெந்தி சையிக்கிளில் ஏறி பெடல அழுத்தி மிதிக்கத் தொடங்கினர்.

வானம் வெளுத்திருந்தது. சூரியன் கடலுக்குள்ளால் வெளிக்கிட இன்னும் கொஞ்சக் கணங்கள் இழுக்கும். வலக்கால் பெடல் கம்பி வழுக்கி காலில் "இடலறடி" அடிக்க " அல்லா " என முனகிக் கொண்டு இந்தக் கம்பிக்கு மரக்கட்டை கட்டாயம் போட வேணும் என்று தனக்குத் தானே கொஞ்சம் பலமாக சொல்லிக் கொண்டு அராலிப்பக்கம் சையிக்கிளை ஒத்தைக் கால் கெத்தல் மிதியுடன் விரைவுபடுத்தினர் நூர்துக்காக்கா.

எனி வள்ளம் பிடிச்சு அராலித்துறைக்கு போய் அந்தப் பெரிய வெளியும் தாண்டினுத் தான் நிம்மதி. பொழுது சாயுறதுக்குள்ள போயிட வேணும் என்ற அவசரம் நூர்துக் காக்காவுக்கு.

ஊர்காவற்றுறையில் இருந்து தெற்கு ரோட்டால இரண்டு இரண்டரைக் கட்டை தொலைவில கடற்கரையோட இருக்கிற அந்தக் கிராம மக்களுக்கு நூர்டீன் முகமது நாற்பது நாற்பத்தஞ்சு வருசப் பழக்கம்.பெரிசுகளில் இருந்து குஞ்சு குருமன்கள் வரைக்கும் நூர்டீன் முகமது நூர்துக் காக்கா தான். அவருக்கும் அந்த ஊரோட அப்படி ஒரு அன்னியோன்யம்.

பெரிய பண்ணையில் இருந்து முந்தியெல்லாம் பதினஞ்சு பதினறு கட்டை தான் ஓடவேணும். இப்ப என்னடாவென்ருல் அராலி வரைக்கும் வந்து வள்ளம் பிடிச்சு பெரிய வெளியும் தாண்ட பொழுது பட்டுப் போகுது. எல்லாம் கலிகாலம் தான். பக்கத்தில வள்ளத்துக்கு காத்துக் கொண்டிருந்த சனத்துக்குள்ள யாரோ ஒருவருக்கு சொல்லிக் கொண்டிருந்தார் நூர்துக்காக்கா.

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறைக்கு பாலம் போடாத காலம் அப்பவெல்லாம் அராலியில் இருந்து வள்ளம், தோணி, கட்டுமரங்களினல் அந்தக் கடல் நீரிணையை தாண்டிப் போக்குவரத்து நடக்கும். அதன் அடையாளமா இப்ப மிஞ்சியிருந்த பழைய கல்லுரோட்டில் அங்கொன்றும் இங்கொன்றுமா தார்க்கறுப்பு. அந்தப் பழைய கால ரோட்டு வாழ்வுக்கு மக்கள் திரும்பியிருந்தனர்.தன்னுடைய தகப்பனேடை சின்ன வயசில வந்த ஞாபகம் மங்கிய நிழல்படம் போல மனக்கண் முன் வந்து நின்றதை துடைத்தெறிந்தவர் போல கண்ணுக்கு மேலால் கையைப் பிடிச்சு தூரத்தே தோணி வருகின்றதா எனப்பார்த்தார் நூர்துக்காக்கா.

" காக்கா..... நூர்துக்காக்கா என்ர கடைக்குட்டி இவள் பூமணி எல்லோ பெரிய பிள்ளையாயிட்டாள். தலைக்குத் தண்ணி வாக்க வேணும் பாழாய்ப் போன இந்தக் காலத்திலயோ இதுகளும் குமருகளாக வேணும். ஒரு தொழிலுக்கு துரவுக்கு எண்டு கடலுக்க இறங்க ஏலுதோ...... இவள் பிள்ளைக்கு வாய்க்கு நல்லதா ஏதும் தின்னக் குடுக்க நல்லெண்ணைப் போத்தலுக்குக் கூட வழியில்லாமல் இருக்கு. நீ அடுத்த கிழமை இங்கால வரேக்க மூத்தனுர் கோவிலடி நல்லெண்ணை ஒரு போத்தல் வாங்கி வாவன் "
இந்தக் கிடாய்க் குட்டி இப்பதான் பால் குடியை மறந்து நிக்குது.அடுத்த முறை வரேக்க ஒரு விலையை கொடுத்துட்டு பிடிச்சிட்டுப் போ .......
என்ன பிள்ளை மூச்சு விடாம ........
இந்தப் பொட்டச்சியள் எல்லாம் இப்படித்தான் இருந்தா இருந்தாப்போல குண்டைத் தூக்கி போடுதுகள்.

ம் ..................
போன வருசம் பெரியவளான அவரது மகள் ஆயிசா இப்படித்தான் பன்னிரண்டு வயதுக்கு ள்ள மொட்டாக்குப் போடத் தொடங்கினது நினைவுகளில் வந்து போனது நூர்துக் காக்காவுக்கு.

பெரியதும் இல்லாமல் அலை என்று சொல்லவும் ஏலாததாய் ஏதோ தாலாட்டுப் பாடுவது போல காலை நனைக்கிறதும்,போவ துமாய் வந்து போய்க் கொண்டிருந்தது கடல் அலை.

பிள்ளை யாரும் இறைச்சிக் கடைக்கா ராரிட்ட கடனுக் கிடனுவது கொஞ்சம் காசு வாங்கி வாறன். வாழும் வளரும் பிள்ளைகள் இந்த நேரத்தில் தாய் வீட்ட கொடுக்கிறது தான் அதுகள் பிள்ளை குட்டி எண்டு பெத்து சீவிக்கிற வரைக்கும் தெம்பைக் கொடுக்கிறது ............

நூர்துக்காக்கா பெட்டியை ஒரு தரம் திரும்பிப் பார்த்தார். முள்முருக்கம் இலைக ளுக்கிடையில் பத்திரமாக கிடந்தது நல்லெ ண்ணைப் போத்தல்.

தூரத்தே தோணி வருவது தெரிந்தது

பூரணம் ஒடியல் கூழை பிளாவிற்குள் ஊத்திக் கொண்டிருந்தாள். நல்ல கைப்பக் குவம் வெய்யில் களைப்புடனும், வெறு வயித் துடனும் வந்தவருக்கு தேனின் ருசியாய் இருந்தது ஒடியற்கூழ்.

பொழுது கொஞ்சம் சாயட்டும்.
கிடாய்க்கு கோழை சீவி வச்சிருக்கிறன் பிடிச்சுக் கொடுக்கிறன் ........
என்ன காக்கா ஏதோ யோசனையில இருக்கி றுப்போல ..........
நான் சொல்லிக் கொண்டே போறன் ..........
இழுத்தாள் பூரணம்.
இல்லைப் புள்ள இண்டைக்கு காலத்தால வெளிக்கிடும் போதே மனசுக்கு என்னமோ சங்கடமாக இருந்தது ........ வீட்டுக்கு போக வேணும் போலக் கிடக்கு ......... பெருமூச்சு விட்டுக் கொண்டே இனி என்ன நாளைக்கு காலையில தான் வள்ளம் விடுவாங்கள் என்றபடி வெளித் திண்ணையில படுத்த மனிசன் கண்ணயர்ந்து போனார் .......

கடலுக்குள் சூரியன் விழுந்து கொண் டிருந்தான்.பூரணம் கரப்புப் பின்னிக் கொண் டிருந்தாள். தொழிலுக்கு என்று வள்ளம் கட்டி வெளிக்கிடாமல் விட்டதிலிருந்து அன்றாட அன்றாட சீவியத்திற்கு கரையில கரப்புக் குத்தி வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் குடும்பங்களில் பூரணத்தினதும் ஒன்று.

தூரத்தே பூரணத்தின் ஆடுகள் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தன.இண்டைக்கு பின்னேரத் தொழுகையையும் மறந்து கண்ண யர்ந்து போனன் பிள்ளை. என்னவோ நெஞ்சு அமைதியில்லாமல் கிடந்து தவிக்குது. விடியக்காலத்தால வெளிக்கிட வேணும் .......
பூரணம் பிள்ளை ............
பிள்ளை பூரணம் ............
குரல் கொடுத்தார் நூர்துக்காக்கா.
தரவைக்குள் நின்று ஆட்டுக் கிடாயுடன் தட்டு மறித்துக் கொண்டு நின்றாள் பூரணம். ஆடுகள் தாய் ஆட்டுடன் அணைந்து அணைந்து ஓடிக் கொண்டிருந்தது. கிடாயை பிடிக்க முடியாதவளாய் சலித்துப் போய் திரும்பி வந்தாள் பூரணம். கையுக்கையும் காலுக்கையும் நிக்கிறதுகள். இண்டைக் கென்று பாழ்பட்டு நிக்குதுகள்.

பெட்டிக்குள் ஆடு கத்திக் கொண்டு இருந்தது. இடது கையால் ஆட்டுக்கிடாயின் மூஞ்சியை தடவிக் கொடுத்தபடி சையிக்கிளை உழக்கிக் கொண்டிருந்தார் நூர்துக்காக்கா.

ஆட்டின் திமிறலும் கத்தலும் நூர்துக் காக்காவுக்கு என்னவோ போல இருந்தது. இன்று நேற்று ? எவ்வளவு காலம் இந்த வியாபாரம் பண்ணியிருக்கிறார். அப்ப எல்லாம் இல்லாதது ...........

என்னவோ இன்று தன் கூட்டத்தை விட்டு வர மறுத்த அந்த ஆட்டின் கத்தல்கள் இவர் நெஞ்சை பாடாய்ப் படுத்தியது.

சோனக தெரு வெறிச் சோடிக் கிடந்தது. பள்ளிவாசலை நோக்கி சையிக் கிளை மிதித்தார் நூர்துக்காக்கா ........
விபரம் புரியாத கலவரம் நெஞ்சைப் பற்றிக் கொள்ள அங்கும் இங்கும் பார்த்தபடி வீட்டை நோக்கிப் போனார்.
யாரும் கண்ணில் புலப்படவில்லை.
பள்ளிவாசலிலும் மயான அமைதி. எவரையும் காணவில்லை.
வீடு அலங்கோலப்பட்டுக் கிடந்தது.
தெருவில் மணல் கிளறிய கோடுகள் ........
அவசரப்பட்டு வேரோடு புடுங்கிய மண்ணின் கிளறல் சுவடுகள் ...........
சையிக்கிள விட்டு இறங்கி தலையில் கை வைத்தபடி உட்கார்ந்தார் நூர்துக் காக்கா.
ஆட்டுக் கிடாய் கத்திக் கொண்டிருந்தது.

**ஜீவன்**

## மே – 1 இல்

# இது தேவைதானா ?

அண்மையில் சூரிக் நகரில் 1.5.92 காலை நடந்த மேதின ஊர்வலத்தில் இரு தமிழ் இயக்கங்கள் கலந்து கொண்டன. இரு அமைப்புகளும் தமது பலத்தைக் காட்டவும், தமது மேலாதிக்கத்தை நிறுவுவதற்காகவும் நடந்து கொண்ட விதம் ஒவ்வொரு தமிழனையும் வெட்கித் தலைகுனிய வைத்தது.

அன்று காலை 10 மணிக்கு ஊர்வலம் நடக்க இருந்தது. ஆனால் 9 மணிக்கே புலிகள் வந்து கூடத்தொடங்கி விட்டனர். நேரம் செல்லச் செல்ல ஊர்வலத்திற்கு மக்கள் (சுவிசு, குர்திசுதான், தமிழ் ) வந்து கூடத் தொடங்கினர். 9.45 மணி போல் புளொட் இயக்கத்தைச் சேர்ந்த சிலர் ( 15–20 வரை) வந்தனர். தமக்கென ஓரிடத்தை (புலிகளுக்கு சில மீற்றர் முன்பாக) தெரிவு செய்து தமது கொடிகள், சுலோகங்களை ஏந்தியவாறு நின்றனர். புலிகள் முன்னோக்கி நகர்ந்து புளொட்டை அண்மித்து நின்றனர். புளொட் இயக்கத்தின் கொடிகள் யாவும் மொத்தத்தடிகளில் ( Bar ) இணைக்கப்பட்டிருந்தது. பின்னே நின்ற புலிகள் இரும்புக் கம்பிகளில் கொடியை ஏந்தி நின்றனர். இவர்களைப் பார்க்கும் போது ஊர்வலத்திற்கு வந்தவர்கள் போல் தெரியவில்லை. ஏதோ குழு மோதல்களுக்கு தயாரான நிலையில் நின்றதை அவர்களது நடவடிக்கைகள் காட்டின.

மேதினத்தை அர்த்தப்படுத்தும் வகையிலான எந்தக் கோசமும் வைக்கப்படவில்லை கோசங்கள் சில தனிமனித வாழ்த்துப்பாடின. சில பரசுபரம் தனிமனித எதிர்ப்புக் கோசங்களாக இருந்தன. ஒருவரை ஒருவர் எவ்வளவு கீழ்த்தரமான வார்த்தைகளால் திட்டலாமோ அவ்வாறே திட்டித் தீர்த்தனர். அப்பொழுது புலிகளிலிருந்து ஒருவர் புளொட்டை தாக்க முற்பட்டார். அவரை புலிகளின் பொறுப்பாளர் தடுத்து "ஓர் அடி"கொடுத்து திருப்பியனுப்பினார். பின்னர் தீயசக்திகள், துரோககும்பல்கள் எட்டப்பன் கூட்டம்,தம்மை குழப்ப முற்படுகிறார்கள் எனக்கூறி ஊர்வலத்தில் நிற்கும் ஏனையவர்களின் (புலிகளின்) உணர்வுகளைத் தூண்டினார்.

ஊர்வலம் நகரத் தொடங்கியது. முதல் சுவிசு மக்கள், அதைத் தொடர்ந்து குர்திசுதான் மக்கள், புளொட், புலிகள், குர்திசுதான் மக்கள் (இன்னோர் பிரிவு) செல்கின்றார்கள். இங்கு கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில் எமது விடுதலை அமைப்புக்களை போல் தான் குர்திசுதானிலும் பல விடுதலை அமைப்புக்கள் ( அதாவது எண்ணிக்கைகள் )அவர்களில் இரு அமைப்புக்கள் ஊர்வலம் செய்தனர். அந்த அமைப்புக்கள் ஒன்றாகவே நின்று ( ஊர்வலம் தொடங்குமிடத்தில் ) பின்பு இரு பிரிவுகளாக பிரிந்து சென்றனர். ஆனால் எம்மவரோ "அது அவங்கள், இதுதான் நாங்கள் " என்பது போல் "போர்க்குணம்" கொண்டனர்.

ஊர்வலம் சில மீற்றர்கள் நகர்ந்திருக்கும் அதற்கிடையில் இவர்களிடம் வாக்கு வாதங்கள் முட்டி மோதின. அப்பொழுது புலிகளின் பொறுப்பாளரும் புளொட் இயக்கத்தில் ஒருவரும் ஏதோ கதைத்துக் கொண்டு நின்றார்கள். அப்பொழுது புலிகளில் இருந்து ஓடி வந்த ஒருவர் புளொட் இயக்கத்தவரை தாக்கினார். புலிகளிடம் "ஆயுத பலமும்" ( கம்பி, தடிகள் ) ஆட்பலமும் கூடுதலாக இருந்தது. தம்மால் இயன்றவரை தாக்கிக் கொண்டே ஒழித்து வைத்திருந்த கண்ணீர்ப் புகையை புலிகளின் மேல் விசிறினர். இதனால் இரு பகுதியினரும் நிலைகுலைந்து இரு குழுக்களுக்கும் இடையே 15 அல்லது 20 மீற்றர் இடைவெளி வந்து விட்டது. இப்போ நேரடித் தாக்குதல் முடிந்து "செல்" தாக்குதல் ஆரம்பமானது.பின் தம்மிடம் இருந்த ஆயுதங்களால் (கம்பி,தடி) எறிந்து தாக்கத் தொடங்கிவிட்டனர். இதற்கிடையில் அருகிலுள்ள மரங்களுக்குப் போடப்பட்டிருந்த மண் கட்டிகளை எடுத்து மாறி மாறி எறிந்தனர். இதனால் சில நிமிடங்கள் ஊர்வலம் தடைப்பட்டது. இவர்களின் வெறித்தனமான மோதலைக் கண்டு மக்கள் ஓடத் தொடங்கினர். சில வயோதிப மாதுக்கள் (சுவிசு) " ஏன் தமிழியன் சண்டை பிடிக்கிறான் ? " என்று கேட்டார்கள் இதற்கு பதிலளிக்க முடியாமல் பலர் (தமிழர்) தலை குனிந்தனர். பல தமிழர்கள் ஊர்வலமும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் தலைதப்பினால் போதும் என்று ஊர்வலத்தை விட்டுவிட்டு ஓடினர். அப்படியிருந்தும் ஒரு பெண் (சுவிசு பத்திரிகை நிருபர் எனச் சொல்லப்படுகிறது ) இவர்களின் மோதலுக்கு முடிவு காணும் விதத்தில் இரு குழுக்களுக்கு மிடையில் நின்று மோதலை நிறுத்தும்படி கத்தினார். செல் ( கம்பி,தடி,மண்கட்டிகள் )

www.tamilarangam.net

தாக்குதல்கள் படிப்படியாக நின்றது. பின்பு புளொட் இயக்கத்தினரை முன்பு (சுவிசு மக்களுக்கிடையில்) அனுப்பினார் அப்பெண்.

பின் ஊர்வலம் நகரத் தொடங்கியது. அதற்கிடையில் " அம்புலன்சு " வண்டி வந்து கத்திக் குத்துக் காயங்களுடன் ஒருவரை ஏற்றிச் சென்றது. ஆனால் பலர் சிறு காயங்களுடனும், உரசல் காயங்களுடனும் சென்றதையும், வளைந்த கம்பிகளையும், முறிந்த தடிகளையும் சிலர் கொண்டு சென்றதையும் காணக்கூடியதாக இருந்தது. ஊர்வலம் அமைதியாக நகரத் தொடங்கியது. ஆனாலும் இந்நாட்டவரின் கேள்விகள் எம்மவரை சங்கடப்படுத்தியது. "குர்திசுதான் மக்களும் இரு ஊர்வலங்கள் நடத்துகிறார்கள். ஆனால் அவர்கள் சண்டை பிடிக்கவில்லை ஏன் நீங்கள் ( தமிழர் ) மட்டும் சண்டை செய்கிறீர்கள் என்று கேட்டார்கள். இவர்களது கேள்வி நியாயமானதுதான் ஆனால் இதற்கு பதில் சொல்லமுடியாமல் பலர் மௌனம் சாதித்தனர் சிலர் " மொழி புரியவில்லை " என மழுப்பி விட்டு சென்றனர்.

ஊர்வலம் முடிவடையும் இடத்தை அண்மித்ததும் புளொட்டைக் காணவில்லை. எங்கோ மறைந்து விட்டனர்.புலிகள் கையில் கம்புகளுடன் புளொட்டைத் தேடி அலைந்து கொண்டிருந்தார்கள்.

இந்த ஊர்வலத்தில் கம்பிகள், தடிகள், கண்ணீர்ப்புகைகள் போன்றவற்றுடன் வந்த இவர்கள் (ஓர் அன்னிய நாட்டில்) இனிவரும் காலங்களில் துப்பாக்கிகள், வெடிகுண்டுகளுடன் வரமாட்டார்கள் என்பதற்கு என்ன உறுதி என்று தமிழ்மக்கள் முணுமுணுத்துக் கொண்டனரே தவிர இவர்களிடம் கேள்வி கேட்கத் துணிவின்றி மௌனியாகினர்.
அதுசரி சென்ற வருடம் கைகலப்பு. இந்த வருடம் அடிதடி, கண்ணீர்ப் புகை.
அடுத்த வருடம் ........?
நல்ல முன்னேற்றம் தான் ?

– கார்மேகன் –

**சபாசு !!**

சீனா, யப்பானிடம் இருந்து பொருளாதாரம், தொழில்நுட்பம் சம்பந்தமாக கற்றுக்கொள்ள வேண்டும். இப்படி தெரிவித்திருப்பவர் வேறு யாருமல்ல. சீன கம்யூனிசு கட்சி தலைவர் **Jiang Zeming** தான்!

# மறையாத்துயரங்கள்

ஆனந்தி

என்ன வாழ்வு
என் ஆத்மா
என்னுள் அடங்கிப் போனது

மீண்டும்
குருதி முளைத்த
இட்லரின் வீதிகள்
கண்களுக்குள் வழிந்தன

ஒவ்வொரு நாட்களும்
பகலை
யன்னல் வழியே
பார்த்து மகிழ்ந்து
ஏக்கம் சொருகிய விழிகளுடன்
மீண்டும்
ஆலை இயந்திரங்களுக்குள்
இறுகிப் போகும் கைகள்

இன்று இரவுடன்
என் வாழ்வின்
ஓரடி
மென்று விழுங்கப்பட்டுவிட்டது.

கூடவே
பதுங்கு குழிக்குள்
பழகிப் போன
மூச்சுக்காற்றும்
பேசுவதை மறந்து
பேனைக்கூரின் குண்டைத் தொலைத்த
முறிந்த பனைமரங்களும்
நினைவில்....

என் மூச்சில் வெப்பமில்லை
அது
குளிருக்குள் குறுகிப் போய்
நீண்ட நாட்கள்

நாளை வேலை
இப்போ
என் கண்களில் தெரிவது
கட்டிலும் போர்வையுமே.

www.tamilarangam.net

# 8 ம் நம்பரும்

## 7 1/2 சனியனும்

"இன்றைக்கு 17 ம் திகதி. நான் காலையிலேயே நினைச்சன் ஏதாவது பிரச்சனைகள் வரும் என்று ....... இன்றைக்கு யார் முகத்திலை முழிச்சனோ" என்று அலுத்துக் கொண்டார் நண்பர். நானும் பிரச்சனை என்னவாக இருக்கும் என்று அறியும் ஆவலில் என்ன விடயத்தைப் பற்றி கூறுகிறீர் என்று என் பங்குக்கு கேட்டேன். முழுவியலம் பாக்கிறபடியால் எங்கடையாக்களுக்கு ஏதோ தலை போகிற பிரச்சனையல்லவோ! இப்படி ஏதாவது சங்கதிகளை சும்மா சொல்லிப்போட்டு விட முடியுமே என்ரை காதுக்குள் முழுக்க விழாவிட்டால் எனக்கு மண்டையே வெடித்து விடும் போல இருக்கும். நண்பரை மேலும் கிண்டினேன். விசயம் இது தான் நண்பர் கொஞ்சம் எண்கணித சாத்திரத்தில ( நியூமோரோலஜி ) நம்பிக்கை வைத்திருப்பவர். காலையில் வேலைக்கு வெளிக்கிடும் போதே இன்றைய திகதியைப் பார்த்துவிட்டு இன்று ஒரு பிரச்சனையிலும் மாட்டக்கூடாது என்ற எண்ணத்தில் பிள்ளையார் தொட்டு யேசு வரை எல்லா சாமிகளுக்கும் ஒரு கும்பிடு போட்டுக் கொண்டு காரை எடுத்தவர்தான் ; மட்டுமட்டாய் வெளிக்கிட்டு 7 மணிக்கிடையில் வேலைக்கு வரவேண்டும் என்று கொஞ்சம் வேகமாய் காரை ஓட்டியிருக்கிறார் இடையில் பொலிசுக்காரர்கள்; நண்பரை பொறுத்த வரை 17 ம் திகதி 8 ம் நம்பர் விடுமா ! வேகமாய் ஓடியதற்கு தண்டமும் கட்டி தமிழர்கள் என்றாலே இப்படித்தான் கள்ள லைசன்சு அது இது என்று பேச்சு வேறை ...... இன்னும் ஒரு படி மேலே போய் நண்பர் என்னிடம் இப்படிச் சொன்னார் " பாரும் இப்ப இரண்டு வருசமாக காரிலை வேலைக்கு வாறன். எத்தனை நாள் இன்றைக்கு வந்ததை விடக் கூட வேகமாக வந்திருப்பன். இன்றைக்கு இந்த 8 ம் நம்பர் சனியன் மாட்டி விட்டது. " இத்தனைக்கும் நண்பர் படிக்காதவர் அல்ல. யாழ் பல்கலைக் கழகத்தில் காலை வைத்தவர். மாணவர்களுக்கு வகுப்புகள் கூட எடுத்தவர். சகோதரிகளுக்கு வழிபண்ண வாத்தி வேலை சரி வராது என்று 6 வருடங்களுக்கு முன்பே சுவீசுக்கு வந்த பழைய காய்.

இது மட்டுமா இன்று இலங்கை, ஐரோப்பா என்று தமிழர்கள் வாழும் இடங்களில் எல்லாம் பழைய ஜாதகக் கட்டுகளையெல்லாம் தள்ளிவிட்டு எம்மவர்களுக்கு ஒரு நம்பிக்கை கீற்றாய், வழிகாட்டியாய், " விஞ்ஞானமாய் " கோலோச்சுகிறது எண்கணித சாத்திரம். பிள்ளைகளுக்கு பெயர் சூட்டுவதாய் இருந்தால் என்ன திருமணம், சுபகாரியங்கள் போன்ற பல தேவைகட்கும் அவரவரின் பிறந்த எண்; திகதி, மாதம் ஆண்டு என்பவற்றை கூட்ட வரும் முழுஎண் ( கூட்டுஎண் ) களுக்கு ஏற்ப நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கிறார்கள். காரணம் அப்போது தான் எண்கணித வடிவில் உரு மாறியுள்ள அதிர்ஷ்டதேவதை அவர்களுக்கு தன் கடைக் கண்ணை திறப்பாள் என்ற ஒரு நம்பிக்கைதான். இப்போதெல்லாம் எம்மவர்கள் மத்தியில் பெயர் விலாசத்தை கேட்டு தெரிந்து கொள்வதைப்போல உமது பிறந்த திகதி என்ன ? கூட்டுஎண் என்ன ? என்று கேட்டு தாங்கள் கேள்விப்பட்ட எண்களுக்குரிய தன்மைகள் குறிப்பிட்ட நபர்களுக்கு பொருந்துதா இல்லையா என்று அபிப்பிராயம் சொல்வது பாசனாகிப் போய்விட்டது.

ஒரு பத்துப் பதினைந்து வருசத்துக்கு முன் எமது நாட்டில் கல்யாணத்திலிருந்து சகல சுபகாரியங்களுக்கும் பழைய சாத்திர வகைகளை நம்பியிருந்த காலம். மத்தியதர குடும்பங்களின் கனவுகளை இலங்கையின் அரசியல் அமைப்பும், பொருளுற்பத்தி முறையும் நனவாக்க முடியாமல் போனதால் எம்மவர்களுக்கு வெள்ளிதிசை என்ற சாதகத்தை நம்புவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை இந்த வெள்ளிதிசை வரும்வரை காத்திருக்க வேண்டும். இது பலருக்கு கவலையையும் சோர்வையும் கொடுத்திருக்க வேண்டும். அது தானோ என்னவோ அவரவரின் பிறந்த எண்களுக்கு ஏற்ப பெயரில் சில மாற்றங்களையும், அதிர்ஷ்ட கற்களையும் தாம் அணியும் உடுப்புக்களும் எண்களுக்கேற்ப அதிர்ஷ்டமான கலரில் அணிந்து வந்தால் நீங்கள் நினைத்த காரியங்கள் நிறைவேறுவதுடன் உங்கள் வாழ்க்கையை வெற்றிப் பாதையில் மாற்றியமைக்க முடியும் என்ற சேதுராமனின் எண்கணித சாத்திரம் பலருக்கு உற்சாகத்தை ஊட்டி விட்டது.

இடையில் எம்மவர்களில் பலருக்கு வெளிநாட்டு வாழ்க்கை. ஒருபுறம் காசு சம்பாதித்தால் மறுபுறம் நாட்டில் சீதன தொகை தம்பி,தங்கச்சியை கூப்பிட ஏஜென்சிக்காரன் இலட்சக்கணக்கில் ரேட், நாட்டில் யுத்த

www.tamilarangam.net

நிலைமையில் பொருளாதார பிரச்சனைகள், கடன்கள், உழைக்க வந்த நாடுகளில் நிம்மதியற்ற வாழ்க்கை என்று பிரச்சனைகள் ஏதோ ஒரு வழியில் பெருகிக் கொண்டு போகின்றதே ஒழிய முடிவுறுவதாய் தோன்றவில்லை. மீண்டும் கனவுகளில் தானோ காலத்தை ஓட்ட வேண்டும் இப்படி மத்தியதர குடும்பங்களின் ஏக்கப் பெருமூச்சு நீள்கிறது. பிரச்சனைகளை முகம் கொடுத்து சரியான வழிகளில் தீர்க்க முடியாமல் எப்பவுமே தப்பியோடல் என்பதே எமது தாரக மந்திரம். இதனால் இருக்கின்ற நிலைமைகளில் மாற்றத்தைக் காணாத போது எதிர்காலம் எப்படியிருக்கும் அதை மட்டும் சரியாக அறிந்து கொண்டால் சிவனே என்று நிம்மதியாக வாழ்க்கையை ஓட்டிவிடலாம். இந்த நிலை இப்போது தோன்றிய ஒன்றல்ல. நீண்ட காலமாகவே மனிதனின் எதிர்காலம் பற்றிய தேடல், குறி சொல்வது, கிளிச்சாத்திரம், கைரேகை, ஜாதகம் என்று இப்போதைக்கு எண்கணித சாத்திரத்தில் நிற்கின்றது.இந்த எண்கள் பற்றிய பிரம்மையும் கலைந்துபோக வேறு ஏதாவது ஒரு சாத்திரத்தில் நம்பிக்கை கொள்ள முனைவார்கள். இந்த நிலை பிரச்சனைகளை தீர்ப்பதற்கு சரியான வழிமுறைகளை மனிதர்கள் கண்டறியும்வரை தொடரத்தான் போகிறது.

ஐரோப்பியர்களைப் பொறுத்த வரை இவர்கள் மத்தியில் எண்கணித சாத்திரம் என்ற ஒன்று இருப்பதே தெரியாது.சிலருக்கு நட்சத்திரங்கள், கோள்களில் நம்பிக்கை உண்டு அவ்வளவு தான். இருப்பினும் தங்கள் திருமணங்கள் போன்ற சுபமான விடயங்களை எம்மவர் போன்று நாள் நட்சத்திரம் எல்லாம் பார்த்து இவர்கள் தீர்மானிப்பது இல்லை. தங்கள் லீவுவசதிகள் என்பவற்றிற்கு ஏற்றவாறுதான் தீர்மானிக்கிறார்கள். இவர்கள் பொருளாதார ரீதியில் மேம்பட்டுள்ளதும் சமுதாய ரீதியில் அறிவுடையவர்களாக இருப்பதுமே இதற்கான காரணமாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்த எண் கணித சாத்திரத்தை நம்புபவர்கள் இதை ஒரு விஞ்ஞானமாக நினைத்துக் கொண்டிருப்பதுதான் பரிதாபத்திற்குரியது. பழைய சாத்திரங்கள் எல்லாம் எங்கோ வெகுதொலைவில் உள்ள கோள், நட்சத்திரத்தைப் பற்றி கதைத்துக் கொண்டிருந்த போது இது நடைமுறையிலுள்ள எண்கள் பற்றி கூறுவதால் விஞ்ஞானமாக இருக்கலாம் என்ற நம்பிக்கை சிலருக்கு வருகிறது. இதில் எதுவித உண்மையும் இல்லை. இன்று நடைமுறையில் உள்ள எண்களும் அவற்றின் வடிவங்களும் விலங்கு நிலையில் இருந்து பகுத்தறிவு ரீதியாக மனிதன் நாகரிகத்தை தொட்ட போது பொருட்களை வகைப்படுத்தி அறிவதற்கும் கணக்கிடுவதற்கும் மனிதர்களால் உருவகிக்கப்பட்டவை தான் இந்த எண்கள். இந்தப் படைப்பின் சொந்தக்காரர்கள் புராதன எகிப்தியர்களும், பபிலோனியர்களும், கிரேக்கர்களுமாவர். இவ் எண்களை மனிதர்களுக்காக யாரும் உருவாக்கி தந்து விடவில்லை. இன்று சர்வதேச ரீதியாக பாவனையில் உள்ள எண் வடிவங்கள் அராபியர்களிடமிருந்து கற்றுக் கொண்டவை தான். இந்த எண்களுக்கு வேறு, வேறு மொழிகள் பேசுவோர் தங்கள் தங்கள் மொழிகளில் அதற்குரிய பெயரையும் வடிவத்தையும் அமைத்துள்ளனர். ஆகவே மனிதர்களின் பிரித்தறியும் தேவையை நோக்காக கொண்டு அறிவுசார் கற்பனையில் உருவகித்து கொண்ட இந்த எண்களை எப்படி விஞ்ஞானம் என்று கூறமுடியும் ?

மற்ற சாத்திரங்களை விட இந்த எண் சாத்திரத்தில் பலர் குழம்புவதற்கு ஒரு காரணமுள்ளது. அதாவது நிகழ்தகவு அடிப்படையில் எண் சாத்திரத்தில் அமைந்தபடி சில நிகழ்வுகள் நடைபெறுவதற்கும் சந்தர்ப்பம் இருக்கின்றது. இதை சுலபமாக இப்படி விளக்கலாம். 40 பேர் கொண்ட ஒரு வகுப்பில் கணித பாடத்தில் விசேடசித்தியடைந்தவர்கள் 5 பேர் இருப்பின் எண் சாத்திரத்தின்படி 1 ம் நம்பர்காரர் படிப்பில் கெட்டிக்காரர்கள் என்று வைத்து கொண்டால் அந்த 5 பேரும் 1 ம் நம்பரில் பிறந்திருக்கக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது. அந்த 5 பேரில் ஒருவர் கூட 1 ம் நம்பரில் பிறக்காமல் இருக்கும் வாய்ப்பும் இருக்கிறது. இது தான் குழப்பத்திற்கு காரணம். 1 ம் நம்பரில் பிறந்த பலர் இருந்தும் அவர்கள் சித்தியடையாமல் போய்விட்டால் எண்ணில் பலருக்கும் நம்பிக்கை இல்லாமல் போய்விடுமே? இங்கே தான் இவ் எண் சாத்திரகாரர்கள் மற்றொரு பசப்பல் விடுகிறார்கள். கூட்டுஎண் சாதகமாக இல்லை என்பார்கள் அதுவும் சரிதான் என்றால் பெயரைக் கூட்டவரும் எண் சரி இல்லை, அதிர்ட்கல் அணிந்த மோதிரம் போடவில்லை, பரீட்சைக்கு அதிர்ட்டமான நிறத்தில் உடுப்பணியவில்லை என்று நியாயப்படுத்தல்களை அடுக்கிக் கொண்டே போவார்கள். இவர்கள் வசம் இப்படி சூத்தையான நியாயம் எப்போதும் இருக்கும். இதுவும் பலருக்கு எண் சாத்திரம் உண்மையாகத்தான் இருக்கும் என்ற போலிநம்பிக்கையை உண்டு பண்ணும்.

கிட்லரும், காந்தியும் 2ம் திகதியில் பிறந்தவர்கள் என்று கூறி 2ம் எண்காரர்கள் உலகப்பிரசித்தி பெறுவார்கள் என்றும் ஆயுட் காலம் குறுகியது என்றும் கூறுவர். வேடிக்கை என்னவென்றால் 2ம் எண்ணில் பிறந்த எத்தனையோ மில்லியன் மக்களில் எவரும் உலகப்பிரசித்தியடையாததையோ, வீரகேசரி மரணஅறிவித்தல் பகுதியில் எத்தனையோ 2ம் எண்காரர்கள் 70, 80 வயதுவரை வாழ்ந்து

www.tamilarangam.net

இயற்கை மரணமெய்தியதையோ எம்மவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. உலகை ஆள நினைத்து வெறிபிடித்தலைந்த சர்வாதிகாரி கிட்லருக்கும், அகிம்சைப் போராட்டம் நடத் திய காந்திக்கும் பண்பளவில் உள்ள வேறு பாடுகளை மறைத்து விட்டு பிரபல்யமடைந்த என்ற ஒன்றை மட்டும் தூக்கிப் பிடித்து முடிச்சுப் போடுவது தான் இவர்களின் விஞ்ஞானம்.

சில வருடங்களுக்கு முன்னால் சுவிசில் தமிழர் ஒருவரால் எண் சாத்திரப் புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டது. அதில் உள்ள முக்கிய விடயம் இன்றைய தமிழர்களின் இன்னல்களுக்கு காரணம் தமிழர்கள் ஆங்கில த்தில் தமிழை Tamil என்று பாவிப்பதனால் தான் என்றும் அதை மாற்றி Thamzh என்று எழுதினால் தமிழர்கள் தங்கள் துன்பங்கள் எல்லாம் நீங்கப்பெற்று பெருவாழ்வு வாழ் வார்கள் என்று கூறுகிறது. இந்த விஞ்(மெய்) ஞான கண்டுபிடிப்பில் இன்னுமொன்று, சில முன்னேறிய நாடுகளின் பெயர் பட்டியல்கள் போட்டு அவர்களின் இந்த முன்னேற்றத் திற்கு காரணம் அந்த நாடுகளின் பெயர் எண்கள் நல்ல நம்பர்களில் அமைந்திருப்பது தான் என்றுரே பார்க்கலாம். என்னே விஞ்ஞானம் !

இந்த ஐரோப்பியர்கள் சிந்தனையையும் அறிவையும் பெருக்கிக் கொள்ளவும், வளர்த் துக் கொள்ளவும் காரணமாய் அமைந்த புவி யியல் காரணிகளையும், இவர்களால் மேற் கொள்ளப்பட்ட வர்த்தகம், பின் ஏனைய நாடு களை காலணியாக்கி செல்வங்களை கொள் ளையடித்துக் கொண்டு வந்தும்,மற்றவர்களின் உழைப்பையும் சுரண்டி எப்படி இந்த முதலாளி த்துவநாடுகள் இன்றைய நிலைமைக்கு வந்த தென்பதை நம்பர்காரர்கள் அறியவில்லை போலும். இவர்கள் அப்பாவித்தனமாக எண்க ளுக்குள் வரலாற்றை மறைத்து தாங்கள் குழம் பியது மட்டுமல்லாமல் தமிழ் மக்களுக்கு " அட்வைசு " வேறு !

இன்றைய ஒவ்வொரு மனிதனும், சமூகமும், தேசமும் எண்களுக்குள் தான் எல்லாம் அடங்கப்பட்டுள்ளன என்றால் இலகுவாக இந்த எண் விஞ்ஞானிகள் கூறியபடி தங்கள் நிலைமைகளை மாற்றிய மைத்து எங்கேயோ ! போயிருக்கலாம்தானே மனிதர்கள் இப்படி இழுபறி வாழ்க்கை வாழ வேண்டும் என்பது என்ன தலைவிதியா !

**வேதனை தன்னை விலை தந்து யாரும்**
**வாங்கிட நினைப்பாரோ !!**

S.வசந்தன்

# மன்றாட்டம்

தயவு செய்து நில்லுங்கள்
சோகம் படர்ந்த
இந்த தெருவை - கொஞ்சம்
திரும்பிப் பாருங்கள்

நேற்று சுடப்பட்ட உடலொன்று
இன்றும் கிடக்கிறது
யாருமே எடுத்துச் செல்லாமல்

யாரோ சாக்கு ஒன்றால் மட்டும்
போர்த்தியுள்ளனர்
போற வழிக்கு
புண்ணியம் தேடியாக்கும்

பார்த்தீர்களா ?
இரத்தக்கறை படிந்த
கால் பெருவிரல் ஒன்று
வெளியே தெரிகிறது
நிமிர்ந்தபடி

அவர்கள் எல்லோரும்
முகத்தை திருப்பிச் செல்கின்றனர்
வாயையும் இறுக
மூடியபடி

அடிமேல் அடிவிழ
முறிந்த கால்களும்
நசிந்த கைகளுமாய்
எழும்ப முயல்கிறேன்
நான் - கொஞ்சம்
திரும்பிப் பாருங்கள்.

க.தீபன்

www.tamilarangam.net

# யாழ்ப்பாண 'அடி' யாருக்கு லாபம்?

பிரம்மா



யாழ்ப்பாணம் அடி எப்போது விழும் என இன்று பலரும் கேட்கிறார்கள். எப்போது அது நடக்கும் என்பதை நோக்குவதை விட யாழ்ப்பாணக் கைப்பற்றலில், சிங்கள-பௌத்த வாதத்திற்கும், பிரேமதாசாவிற்கும், இராணுவத்திற்கும், இந்தியாவிற்கும் உள்ள பல்வேறுபட்ட கருத்தோட்டங்களையும் திரை மறைவிலான இராசதந்திர நாடகங்களையும் அவதானிக்க வேண்டியுள்ளது. பிரேமாவின் இராணுவ ஆலோசகர்கள் யாழ்ப்பாணம் கைப்பற்றப் படுவதைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றனர்.

அ. யாழ்ப்பாணத்தின் மையத்தைக் கைப்பற்றிவிட்டால் வட கிழக்கில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் புலி இயக்க உறுப்பினர்களின் மனோ நிலையில் ஒரு பெரும்பாதிப்பு ஏற்படும். இதனால் ஒரு இராணுவ இயக்கத்திற்கு தேவையான மனோஉறுதி (Morale) குலைந்துவிடும்.

ஆ. புலிக்கெதிரான ஏனைய இயக்கங்கள் யாழ்ப்பாணத்தின் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் கட்டவிழ்த்து விடப்படும்போது (Unleashed என்கிற பதம் பயன் படுத்தப்பட்டது) புலிகள் இலகுவாக இனங்காணப்பட்டு அழிக்கப்படுவார்கள். இதன் காரணமாக 1987 யூலைக்கு முன்பிருந்த நிலை மீண்டும் ஏற்படுவதை இம்முறை தடுக்கலாம். ஓரிரு கெரில்லாத் தாக்குதல்களைத் தவிர புலிகளால் குடாநாட்டினுள் வேறொன்றும் செய்ய முடியாத அளவிற்கு ஏனைய இயக்கங்கள் மக்கள் மத்தியில் பரவி விடுவர். தமிழ் நாட்டிற்குப் புலிகள் செல்ல முடியாமல் உள்ளமை இதற்கு இன்னும் சாதகமாக அமையும்.

இ. புலிகள் இயக்கத்தில் சேருவோரின் வயதெல்லை துரிதமாக வீழ்ச்சி அடைந்து வருகிறது. தற்போது சேருபவர்கள் பெரும்பாலும் சிறுவர், சிறுமியரே. புலிகளின் விசா முறை யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றுவதோடு நீக்கப்படுமானால் இச்சிறுவர் சிறுமியரின் பெற்றோர் அவர்களை குடா நாட்டை விட்டு வெளியே கொண்டு போய்விடுவர். எனவே புலிகளின் ஆட் பலத்தில் மாபெரும் வீழ்ச்சி ஏற்படும். மேலும் புலிகள் யாழ்ப்பாணம் வீழ்ச்சியடைந்த பின்னர் தமது போர் பிரசாரத்தையும், வீரப்பாடல்களை ஒலிபரப்புவதையும் கைவிட வேண்டி வரும். இதனால் தமிழ் ஈழப் போராட்டத்தில் மக்களுக்கு நாட்டம் குறைந்துவிடும்.

இங்ஙனமாகப் பிரேமாவின் இராணுவ ஆலோசகர்கள் கூறுகின்ற கருத்துக்கள் யாவும் புலிகள் இனி 1987க்கு முற்பட்ட ஒரு நிலைக்குத் திரும்பமுடியாது என்பதை அடிப்படையாகக் கொண்டவை யாகும். இன்னொரு முக்கியமான கருத்தையும் கவனிக்க வேண்டும். அதாவது பிரபாகரன் இன்று ராஜீவ் கொலை வழக்கில் முக்கியமான குற்றவாளியாகக் காணப் பட்டுள்ளதால், பிரபாகரன், இனி என்றும் அரசியல் அந்தஸ்துப் பெற முடியாது. ஆகவே பிரபாகரன் புலிகளின் தலைவராக இருக்கும்வரை புலிகள் அரசியல் அங்கீகாரம், அதிகாரம் பெற்று ஒரு நிலைக்கு வருதல் என்பது முடியாத காரியம். சாதாரண புலிகள் போராடுவது, என்றோ ஒரு நாள் தாம் ஆட்சி அதிகாரத்திற்கு வரலாம் என்பதற்காகத்தான். ஆகவே பிரபாகரன் தமக்குத் தலைவராய் இருக்கும் வரை தமக்கு எந்த எதிர்காலமுமில்லை என உணரத் தலைப்படும் போது பிரபாகரனுக்குக் கீழ் உள்ளவர்கள் தங்கள் தலைவரைக் கொன்றுவிடுவார்கள் அல்லது இச்சிக்கலை உணரும் பிரபாகரன் தானே சயனைட்டை உட்கொண்டு 'குளோஸ்' ஆகிவிடலாம். (மேற்கண்ட கருத்தை கூறும் ஒருவர் சில சிங்கள சோதிடர்களும்- பிரபாகரன் இந்த வருட முடிவிற்குள் சயனைட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உட்கொண்டு தற்கொலை செய்து கொள்ளக்கூடும் என்று ஆரூடம் கூறியுள்ளதைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை)

யாழ்ப்பாணம் கைப்பற்றப் படுவது பற்றி மேற்கண்ட கருத்துக்களை பிரேமாவின் இராணுவ ஆலோசகர்கள் சிங்கள பௌத்த இனவாத அமைப்புகளுக்கும் தெரிவிக்கிறார்கள். இன்று இராணுவம் பிரேமாவுடன் கொண்டுள்ள தொடர்பைவிட பௌத்த பீடங்களுடன் கொண்டுள்ள உறவு மிக நெருக்கமாக உள்ளது.(அண்மையில் இராணுவத் தலைமைப்பீடம் சிங்கள பாதுகாவற் பேரணித் தலைவருக்கு சம்பந்தியாகி உள்ளது புறக்கணித்து விடக்கூடிய ஒரு விடயமல்ல) இராணுவத்திற்கும், பௌத்த பீடங்களுக்கும் (குறிப்பாக மல்வத்தை) சிங்கள பௌத்த அமைப்புகளுக்கும் இடையில் உருவாகியுள்ள இறுக்கமான உறவைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் தீவிர முயற்சியில் கொழும்பில் உள்ள இந்திய அதிகாரிகள் இறங்கியுள்ளனர். இந்தியா இன்று ஏற்படுத்தியும், பலப்படுத்தியும் வரும் இந்தப் புதிய உறவு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் பெரும் குந்தகமாக அமையலாம் என்பதைப்பற்றி டெல்லி கவலைப்படுவதாகத் தெரியவில்லை. இந்திய அரசு அதிகாரிகள் இலங்கை அரசிற்கும், புலிகளுக்கும் இடையில் ஒரு யுத்தநிறுத்தம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் குறியாக இருக்கின்றனர். புலிகளுக்கும் பிரேமாவிற்கும் எதிர்பாராத உறவு ஏற்பட்டு விடாமற் தடுப்பதற்குத் தனக்கு இருக்கும் ஒரேவழி இராணுவத்திற்கும் சிங்கள பௌத்த வாதிகளுக்கும் உள்ள உறவை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதேயாகும என இந்தியா கணக்குப்போடுகிறது. இதனால் தமிழரின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது பற்றியும் தமிழரின் உயிர்பாதுகாப்புப் பற்றியும் இந்தியா மூச்சுவிட விரும்பவில்லை. தமிழர் எதிர்காலத்தைப் பற்றி முன்பு மாதந்தவறாமல் அறிக்கை விட்ட டெல்லி இன்று அதைப்பற்றி மௌனம் சாதிப்பதன் மூலம் சிங்கள பௌத்த வாதிகளையும், இராணுவத்தையும் தன்பக்கம் கவர்ந்தெடுத்து இலங்கை அரசியலில் தனக்குச் சாதகமாகக் காய் நகர்த்த முற்படுவது முக்கியமான ஒரு திருப்பமாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மையத்தைக் கைப்பற்றுவதனால் குறைந்தபட்சம் பத்தாயிரம் பொதுமக்களாவது கொல்லப் படலாம் எனவும் இதற்கு இந்தியா ஆட்சேபனை தெரிவித்தால் தமது குடாநாட்டுப் பிரவேசம் பின்னடையலாம் எனவும் இராணுவத் தலைமைப்பீடம் சிலமாதங்களுக்கு முன்னர் (யாழ்ப்பாண 'அடி'க்கான தயாரிப்புகள் ஆரம்பமான வேளையில்) கவலை கொண்டிருந்தது.

இதன்காரணமாக இராணுவத் தளபதிகள் சில தூதர்கள் மூலம் இந்திய அதிகாரிகளின் கருத்தறியும் முயற்சியில் இறங்கினர். இந்த தூதர்களிடம் இந்தியா சூசகமாகத் தெரிவித்தது என்ன? குடாநாட்டில் பொதுமக்கள் உயிரிழப்பைப் பற்றி நாங்கள் குரல் எழுப்பப் போவதில்லை என்றும், யாழ்ப்பாணம் கைப்பற்றப் படுவதற்கான மறைமுகமான அனைத்து உதவிகளும் செய்யலாம என்றும் இந்தியத் தரப்பிலிருந்து எடுத்துரைக்கப் பட்டது. இதன் காரணமாகத் தான் இன்று குடாநாட்டில் பொதுமக்கள் பத்தாயிரம் என்ன, ஒரு லட்சம் அழித்தொழிக்கப் பட்டாலும் காரியத்தை முடிக்கலாம் என இராணுவம் நம்பிக்கை பெற்றுள்ளது. தமிழ் இன அழிப்பிற்கு எதிராக உலகில் எழக்கூடிய ஆட்சேபக் குரலையோ அனுதாபக் குரலையோ, இந்தியா அமுக்கிவிடும் என்கிற நம்பிக்கையை இன்று இராணுவம், பௌத்த பீடம், பேரினவாத இயக்கங்கள் ஆகியவற்றின் மத்தியில் டெல்லி ஏற்படுத்தியுள்ளது. சிங்கள முரட்டுப் பேரினவாதம் இன்று கட்டற்றுப் பீறிட்டெழும் காரணம் இதுதான்.

குடாநாட்டில் நடைபெறக் கூடிய ஒரு இனப்படுகொலையை உலக அரங்கில் மூடிமறைப்பதற்கு இந்தியாவிற்குச் சாதகமாக இன்று புலிகளின் சில நடவடிக்கைகள் அமைந்துள்ளன. புலிகள் ஏனைய இயக்கங்களைக் கொன்றொழிப்பதே தம் நோக்கம் எனப் பிரகடனப் படுத்துவதும், முஸ்லீம்களை கொலை செய்தும், இருப்பிடங்களைவிட்டு விரட்டியடிப்பதும், சர்வதேச அரங்கில் தமிழ் இனப் படுகொலைக்கு எதிராகக் குரல் எழுப்பும் நடுநிலை அமைப்புகளுக்கும் , நாடுகளுக்கும் ஒரு பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளன. தமிழர் மத்தியில் உருவாகக்கூடிய, தமக்கு கண்மூடித்தனமாகத் துதிபடாத அனைத்து சக்திகளையும் கொன்றொழிக்க வேண்டுமெனப் புலிகள் வெளிப்படையாகவே கூறித் திரிவது தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைப் போராட்டத்தையே நசுக்கிவிடக்கூடிய சாதகமான சூழ்நிலையை இந்தியாவிற்கு உருவாக்கிக்கொடுத்துள்ளது.

வீரியமாகவும், தனித்துவமாகவும் இயங்கக்கூடிய தமிழ்த்தேசிய உணர்வு தன் ஒருமைப்பாட்டிற்கு 1916ம் ஆண்டிலிருந்து (தென்னிந்திய நலஉரிமைச் சங்கம்–திராவிட இயக்கத்தின் முன்னோடி தொடங்கப்பட்ட வருடம்) பெரும் ஆபத்தாக இருந்துவருகிறது என்பதை மனதில் கொண்டே டெல்லி செயல்படுகிறது. இதன காரணமாகவே இந்தியா இன்று சிங்களப் பேரினவாதத்தோடு கைகோர்த்தேனும் தமிழ்த் தேசியத்தைக் காயடித்து விடலாம் என எண்ணுகிறது.

பிரேமதாசா இன்று தோன்றியுள்ள சர்வதேச சூழ்நிலையில் தனது ஆட்சியைப் பலப்படுத்து முகமாக ஜனநாயகப்படுத்தல் வேலைகளில் இறங்கி, பத்திரிகைச் சுதந்திரம், ஆட்கடத்தல பற்றிய விசாரணைக் கமிஷன் நியமனம், அரசியற் கொலைகள், கடத்தல்கள ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்ட பொலிஸ் இராணுவ விஷேட பிரிவுகளை கலைத்தமை ஆகிய காரியங்களைத் துரிதமாகச் செய்து அல்லது செய்வதுபோல் காட்டிச் செயல் படுவது கண்கூடு. இதேவேளை புலிகள் சர்வதேசச் சூழலை உணராமல் இயங்குவதும், தாம் கேட்கவிரும்பும் கருத்துக்களை மட்டுமே துதிபாடிகளின் மூலம்

23ம் . . . பக்கத்தில்

www.tamilarangam.net

# சுவிஸ்:

## உள்ளூர புகைந்து கொண்டிருக்கும் சமூகப் பிரச்சனைகளும் அது தோற்றுவிக்கும் ஆபத்தான நிலைமைகளும்.



ஒரு வயதும் நிரம்பாத பிஞ்சுக் குழந்தைக்கு கொலை மிரட்டல். குறிக்கப் படும் நாளுக்குள் இந்த குழந்தையின் பெற்றோர் வீட்டை விட்டு வெளியேறி விட வேண்டும். இல்லையேல் குழந்தை கடத்தப் பட்டு கொலை செய்யப்படும். கொலை மிரட் டலை செய்தவர்கள் தம்மை புதிய நாஜிகள் என்று அழுத்திக் குறிப்பிட்டும் இருந்தனர். கொலை மிரட்டலுக்கான காரணம்; இந்தக் குழந்தையின் பெற்றோர் அதாவது இளம் தமிழ்குடும்பத்தினர் இந்நாட்டில் அகதிகளாக வாழ்வது தான்.

மேற்படி தொலைபேசி மிரட்டலை கேட்டு இந்த குழந்தையின் பெற்றோர் துடித்துப் போயினர். பொலீசிடம் முறையிட் டனர். << இனி இப்படி மீண்டும் ஏதாவது மிரட்டல் வந்தால் கசட்டில் ஒலிப்பதிவு செய்து தரும்படியும் எதற்கும் அவர்கள் கொடுத்த காலக்கேடு வரை வீட்டில் இருக் காமல் விடுவதே நல்லது என்றும் பொலீசிடம் இருந்து பதில் வந்தது. >>

இந்த கொலை மிரட்டல் இந்நாட்டில் ஜேர்மன் மொழி பேசும் பகுதியில் மார்ச்மாத இறுதியில் நிகழ்ந்துள்ளது. இங்கு பிரச்சனை அவர்கள் புதிய நாஜிகள் தானா,குழந்தையை கொலை செய்வார்கள் தானா என்பதல்ல. மாறாக வெளிநாட்டவர்களுக்கும் அகதிக ளுக்கும் எதிராக இனவாத அலை எவ்வளவு ஓங்கியுள்ளது என்பதே.

ஜேர்மனி,பிரான்சு, இத்தாலி, ஒசுரியா என்ற நாடுகளை எல்லைகளாக கொண்டது சுவிசு. இன்று இந்நாடுகளில் கை தூக்கும் இனவாத பழமைவாத சக்திகளது செயற்பாடு கள் சுவிசிலும் பெரும் பாதிப்புக்களை செய்யத் தொடங்கியுள்ளது. குறிப்பாக இந்த சக்திகள் எல்லாம் புதிய நாஜிகள் என்ற தளத்தில் இணைந்து கொள்கின்றனர்.

இந்நாடுகளில் அதிகரித்து வரும் வேலையில்லா பிரச்சனை,வீடின்மை மற்றும் சமூக பொருளாதார நெருக்கடிகளுக்கெல்லாம் வெளிநாட்டவர்களே காரணம் என்ற ஒரு கருத்து இந்நாட்டு மக்களின் மனங்களில் பலமாக பதிய வைக்கப்படுகிறது.

மேலும் Das Boot ist voll என்ற சுலோகம் அதாவது படகு நிரம்பி விட்டது என்று அர்த்தப்படும் சுலோகம் , அகதிகளின் வருகை பெருகி விட்டது இதற்கு எதிரான உடனடி நடவடிக்கை அவசியம் என்று வலியுறுத்துகிறது. அத்தோடு இந்நாட்டின் அழுக்குகள் (சில சந்தர்ப்பங்களில் பன்றிகள்) சுத்தம் செய்யப்பட வேண்டும் என்று நாகரீக மற்றமுறையில் பிரச்சாரமும் செய்யபடுகிறது

சுவீசில் அண்மையில் ஜேர்மன் - பிரான்சு மொழி பேசும் பகுதிகளில் எடுக்க ப்பட்ட கருத்து கணிப்பீட்டில் 59 % மக்கள் Das Boot ist voll க்கு முழு ஆதரவு அளித்துள்ளனர். ஜேர்மனியில் றீப்பப்பிளிக் கான என்ற இனவாத கட்சி Das Boot ist



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

voll என்று புத்தகம் ஒன்றையும் வெளியிட்டு ள்ளமை குறிப்பிடத்தக்கது.


இனவாதத்தை, இனவாதவன்முறைகளை கண்டிக்கும் ஐ. நா வின் ஒப்பந்தத்தில் கைச் சாத்திட்ட 129 உலகநாடுகளில் உள்ளடங்கும் சுவீசிலும், இவ் இனவாத செயல்களில் இறங் கியுள்ள சக்திகளின் கைகளை கட்டிப் போடு வதில் இன்று தீவிர அக்கறை கொண்டு உள்ளது. அதே வேளை சட்ட விரோதமாக நாட்டுள் நுழைபவர்களை (அகதிகளை) கட்டு ப்படுத்துவதற்காக கடுமையான சட்டங்க ளையும் கொண்டு வந்துள்ளது. இது ஒரு வகையில் அரசிற்கு சாதகமான நிலைமைக ளையே கொடுத்துள்ளது. கடந்த காலங்க ளுடன் ஒப்பிடும் போது 91 இறுதியிலும் 92 ஆரம்பத்திலும் நாட்டுக்குள் வந்த அகதி களின் எண்ணிக்கை வரைபடம் பல புள்ளிகள் தாழ்வாய் சென்றுள்ளது. மொத்த த்தில் அகதிகள் வருகைக்கான பல கதவுகள் அடைக்கப்பட்டு விட்டன.

இருந்தும் இனவாத சக்திகளின் செய ல்கள் அதிகரித்து வருகிறதே ஒழிய குறைந் ததாக தெரியவில்லை. உள்ளூர புகைந்து கொண்டிருக்கும் சமூகப் பிரச்சனைகளும் அது தோற்றுவிக்கும் ஆபத்தான நிலைமை களும் என்ற தலைப்பில் கன்ரோன் போர்ணில் இருந்து வரும் தினசரிப் பத்திரிகை ஒன்று (B.Z) பல அதிர்ச்சிகரமான செய்திகளை வெளியிட்டுள்ளது.



அதன் சுருக்கம்: ஒருபுறம் பழமைவா திகளும் இனவாதிகளும் நாட்டில் நிகழும் கலாச்சார பிறழ்வுகள்,பொருளாதார நெருக்கடி கள் எல்லாவற்றிற்கும் வெளிநாட்டவரே காரணம் என்கின்றனர். இவர்களைப் பொறுத் தவரை நல்ல பழமையான சுவீசு நாட்டைக் கட்டிக் காக்க வேண்டுமெனில் வெளிநாட்டவ ர்கள் துடைத்தெறியப்பட வேண்டும். மறுபுறம் கூடுதலான வெளிநாட்டவர்களின் வருகை / அகதிகளின் பெருக்கம், தீவிரமான கலாச்சார பிறழ்வுகளை தோற்றுவிக்கிறது அல்லது பிறழ்வுகளை நோக்கிய பல்லின கலாச்சார சிக்கல்களை உண்டாக்குகிறது. இது ஆபத்தானது ஒருவகையில் வெளிநாட்ட வர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு இது காரணமாகிறதுதான் என்று குறிப்பிடுகிறார் செய்தியாளர்.

மேலும் அரசு உள்நாட்டிலுள்ள இனவாத - பழமைவாத சக்திகளின் கைகளை கட்டிப் போட்டால் மட்டும் போதாது. இங்கிருக்கும் வெளிநாட்டவர்கள் மத்தியிலுள்ள இதே பயங் கரவாத சக்திகளுக்கு எதிராகவும் நடவடிக் கைகள் எடுக்க வேண்டும் என்கிறார்.




குறிப்பாக ;

ஈரானிய அரசு மற்றும் எதிரான மதவாத சக்திகளுக்கிடையே இங்கே நிகழும் கொலைச் சம்பவங்கள். மற்றும் உள்நாட்டுப் போரில் இறங்கியுள்ள யூகோசிலாவியாவுக்கு (தேசியஇன போராட் டசக்திகளுக்கு) இங்குள்ள யூகோசிலாவி யர்கள் பல குழுக்களாக இருந்து கொண்டு நிதியுதவி முதல் ஆயுதக் கடத்தல் வரை செய்கின்றனர். அத்தோடு துருக்கிய குர்டிய ர்களின் விடுதலைக்காக போர் புரியும் குர்திசுதான் தொழிலாளர்கட்சிக்கு (P.K.K.) இங்கிருக்கும் குர்டியர்கள் 2 இலட்சத்தில் இருந்து 3 இலட்சம் பிராங்குகளை மாதம் தோறும் அனுப்புகின்றனர். இது போன்ற பல தகவல்களை ஆதாரப்படுத்தும் ( B.Z ) பத்திரிகை இந்த நடவடிக்கைகளுக்கெல்லாம் கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட வேண்டும் என்கிறது.

மீண்டும் கடந்த ஏப்ரல் மாத ஆரம்ப த்தில் கன்ரோன் சூரிச்சில் Regensdorf என்னும் இடத்திலுள்ள அகதி முகாம் ஒன்றிற்கு தீ வைக்கப்பட்டது. இதில் யூகோ சிலாவிய நாட்டைச் சேர்ந்த 4 அல்பானி யர்கள் படுகாயமுற்றனர். இதே இடத்தின் புகையிரத நிலையத்தில் வைத்துதான் ஒரு வருடத்திற்கு முன்பு தமிழ் இளைஞன் ஒருவன் இனவாதிகளால் குத்திக் கொல்லப் பட்டான்.

www.tamilarangam.net

90 ம் ஆண்டில் வெளிநாட்டவர்களுக்கு எதிராக 41 வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. 91 இல் இது 98 ஆக அதிகரித்து 92 இன் முதல் இரண்டு மாதங்களில் மட்டும் 12 வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளது என்கிறது சுவிசு பொலீசு அறிக்கை.

3 பெற்றோல் குண்டு வீச்சு, 39 தீ வைப்புக்கள், 8 சூட்டுச் சம்பவங்கள், 15 தாக்குதல்கள், 12 கடுமையான தாக்குதல் என்று மொத்தமாக சென்ற வருடத்தில் 77 வன்முறை சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அகதிகளுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் எதிராக இதில் 2 பேர் இறந்து போனதும் 4 பேர் படுகாயமுற்றதும் கொடூரமானது.

வலது தீவிரவாதிகளின் (புதிய நாஜிகளின்) வெளிநாட்டவர் மீதான வன்முறைகள் ஒரு பாரிய இயக்கமாக இன்று பரிணமிக்க தொடங்கியுள்ளது. இந்த இயக்கத்தில் வயது குறைந்த இளைஞர்களும் 56 வயதுக்கு மேற்பட்டவர்களுமே அதிகமாக இணைந்து கொள்வதாய் பொலீசு தலைவர் குறிப்பிடுகிறார்.

அகதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது எல்லாம் வெளிநாட்டவர்கள் மீதான எதிர்ப்பு அலைகள் வன்முறைகளாய் உருவெடுக்கின்றன. இந்நாட்டின் ஒவ்வொரு நாலாவது பிரஜையும் இந்த அலைக்குள் அள்ளுப்படுகின்றான்.

சுவீசு நிலைமைகள் இவ்வாறிருக்க; ஜேர்மனி, பிரான்சு, இத்தாலி, ஒசுத்திரியா போன்ற நாடுகளில் வலதுசாரிகள் இனவாதிகள் (புதிய நாஜிகள்) பலமான அரசியல் கட்சிகளாகவும் வளர்ந்து வருகின்றன.

ஜேர்மனியில் ஏப்ரல் ஆரம்பத்தில் **Baden-Würtemburg, Inschlewig-Hostein** என்ற இரு மாகாணங்களில் நிகழ்ந்த தேர்தலில் வலது சாரிகள் (**Repuplikaner**) திடீர் வளர்ச்சி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பிரான்சிலும் ஒசுத்திரியாவிலும் முறையே **Lepen,Heider** போன்ற இனவாத தலைவர்களின் பலமும் இத்தாலியில் புதிய பாசிசுக்களின் தலையெடுப்பும் ஐரோப்பாவில் வெளிநாட்டவர்களுக்கு எதிராக வளர்ந்து வரும் எதிர்ப்பலைகளின் பெருப்பத்தை வெளிப்படுத்துகிறது.

*சி. அமுதன்*

சுவிசில் வேலையில்லாத் திண்டாட்டம் 53 வருடங்களின் பிற்பாடு தற்போது மிக மோசமாக அதிகரித்து வருகிறது. ஏப்ரல் மாத இறுதியில் அரசின் புள்ளி விபரப்படி 79317 பேர் வேலை இழந்தவர்களாக பதிவு செய்து உள்ளனர். மார்ச் மாதத்தில் மட்டும் 3154 பேர் வேலை இழந்து உள்ளமை குறிப்பிடத்தக்கது. பிந்திய செய்திகளின்படி நாள் ஒன்றுக்கு 60 பேர் வேலை இழந்து வருகிறார்கள்.

20 ம். . . பக்கத்தின் தொடர்

கேட்பதும், தமிழர் தேசிய உரிமைப் போராட்டத்தை கூண்டோடு கைலாசம் அனுப்பக்கூடிய நிலைமையைத் தோற்றுவிக்கிறது என்பதைப் புலிகள் உணரவில்லை. எனவே இந்தியாவின் ஆசீர்வாதத்தோடு நிகழப்போகும் குடாநாட்டின் மையத்தை நோக்கிய இராணுவத் தாக்குதலையும் அங்கு பொதுமக்கள் அழிவையும் உலக சமூகம் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப் பட்டிருக்கிறது. புலிகள் நசுக்கப்படவேண்டிய ஒரு பயங்கரவாத இயக்கம். அவர்கள் ஒரு இராணுவ இயக்கமல்ல என்றும் அவர்கள் இன்றும் ஏனைய இயக்கங்களை நசுக்கும் தனிநபர் கொலைகள், முஸ்லீம்களுக்கு எதிரான இனஅழிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஈடுபடுவதால் அவர்கள் ஒரு சமூக விரோதக் கும்பல் என்றும் ஆகவே தமிழர் பெருவாரியாக அழிந்தொழிந்தாலும் புலிகள் அழிக்கப்படவேண்டும் என டெல்லி சர்வதேச சமூகத்தினர் மத்தியில் பிரச்சாரம் செய்கிறது. புலிகள் சில ஜனநாயகப் பண்புகளையேனும் வெளிப் படுத்தும் வரை இந்தியாவின் இப்பிரச்சாரத்தை தம் நாடுகளால் எதிர்க்கவோ, குடாநாட்டில் நிகழக்கூடிய இனப்படு கொலையைத் தடுக்கும் வகையில் குரல் எழுப்பவோ முடியா திருப்பதாக கொழும்பில் உள்ள சில மேற்கு நாட்டு இராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர்.

இயக்கங்கள் அழிந்தபின் மீண்டும் தாமே அரசோச்சலாம் என கொழும்பில் தமது குளிரூட்டப்பட்ட காரியாலயங்களில் இருந்துகொண்டு கனாக்காணும் கூட்டணி வக்கீல்களும் அவர்களது கையாட்களும் ஒன்றைக் கவனிக்கத் தவறுகின்றனர். இந்தியாவும் சிங்கள இராணுவமும், பௌத்த பீடங்களும், சிங்கள இனவாதக்குழுக்களும் இன்று தம்மிடையே ஏற்படுத்தியுள்ள கூட்டு யாழ்ப்பாணம் வீழ்ந்த பின்னர் தமிழ்த்தேசியத்துக்கே குழிதோண்ட முற்படும் என்பதே அது.

பெரியாரும், அண்ணாவும், தந்தை செல்வாவும், இயக்கங்களின் ஆரம்பகால இலட்சியங்களும் கட்டிவளர்த்த பகுத்தறிவு வாதத்தையும், தமிழ்த் தேசிய பண்பாட்டையும், உரிமைப்போரையும் இந்திய உபகண்டத்தின் தென் கோடியிலிருந்து அழித்தொழிக்க இந்தியா செய்யும் சதிகளை யாழ்குடாநாட்டில் நிகழப்போகும் பாரிய உயிரழிவின் பின்னராவது தமிழர் உணர்ந்து கொள்வார்களா?

**நன்றி சரிநிகர்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுவிஸில்:

# தமிழ்ப் பிஞ்சுகளின் வேதனை

**வசந்தன்:** Sali குமார். கனகாலமாக வீட்டுப் பக்கம் உங்களை காணல்ல Busy யோ ?

**குமார்:** ஓம் வசந்தன் நீரும் family க்காரன் தானே உமக்கு தெரியாததா ? நானும் வர வேணும் எண்டு நினைக்கிறது. எங்க ......... நானும் அவவும் வேலைக்குப் போய் வந்தா பிறகு மல்லிகா வீட்டு வேலையில் மூழ்கிடுவா. சனி ஞாயிறு கலியாணவீடு. Birthday என்று பொழுது போகுது.

**வசந்தன்:** என்ர பிள்ளைகள் இரண்டையும் இந்தியாவிற்கு அனுப்பிப் படிப்பிக்கவா ? இலண்டனிற்கு அனுப்பிப் படிப்பிக்கவா ? எண்டு யோசிக்கிறன். என்ர மனுசிக்கு இலண்டனிற்கு அனுப்ப விருப்பமில்லை. பொம்பிளை பிள்ளைகளை இந்நாடுகளில் வைச்சுப் படிப்பித்தால் பழக்கவழக்கங்கள் சரியில்லாமல் போய் விடும் எண்டு.

**குமார்:** நீர் ஏன் பிள்ளைகளை இலண்டன், இந்தியா எண்டு தனியே அனுப்ப யோசிக்கி றீர்? கஜன் இப்ப Kinder garten இற்கு போகிறான். கொஞ்ச காசை உழைத்துக் கொண்டு கனடா போகலாம் எண்டிருக்கிறன். அங்க எண்டால் பிள்ளையை இங்கிலிசிலை யும் படிப்பிக்கலாம். உந்த டொச்சை படிப்பி த்து என்ன பிரயோசனம்.

ஐரோப்பிய நாடுகளில் இவ்வாறான உரையாடல்களை எம்மவர் மத்தியில் அன்றா டம் கேட்கக் கூடியதாக உள்ளது. இவ்விட யத்தை நடுத்தர வர்க்கம் இவ்வாறு தான் இங்கும் அங்கும் அலை மோதும் என ஒதுக் கிவிடக்கூடியதல்ல. ஐரோப்பிய நாடுகளிலும் சரி ஏனைய நாடுகளிலும் சரி நிரந்தரமற்ற வாழ்வை நடாத்திக் கொண்டிருக்கும் ஓர் சமூகக் கூட்டத்தின் அடுத்த சந்ததியின் தலைவிதியை கேள்விக்குள்ளாக்கியுள்ளது என்றே பார்க்க வேண்டியுள்ளது.

அதே வேளை நாட்டில் வடகிழக்கில் தமிழ் மாணவர்களின் கல்வி சீர்குலைக்கப் பட்டும் பல புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறியதும் இளைஞர்கள் பலர் நாட்டை விட்டு வெளியேறி அன்னிய நாடுகளில் தஞ்சமடைந்து கூலிவேலைகளில் மட்டும் தம்மை ஈடுபடுத்தி வருவதால் ஓர் சமூகம் எதிர்கால புத்திஜீவிகளையும், தொழில்நுட்ப வல்லுனர்களையும் இழந்துள்ளது. நாட்டில் பிரச்சனை தீர்ந்து விட்டால் திரும்பிச் செல்ல வேண்டுமென பலர் எண்ணுகின்றனர். இவ்வாறு எண்ணுவது உண்மையாயின் எமது பிள்ளைகளை எம் நாட்டிற்கு தேவையான தொழில் கல்விகளில் பயில ஊக்குவிக்க வேண்டும். மாறாக யாழ் சமூகத்தினர் அல்லது தமிழ் சமூகத்தினர் பொதுவாக தமது பிள்ளைகள் டொக்ரர் ஆக வேண்டும் அல்லது எஞ்சினியர் ஆக வேண்டும் என எதிர்பார்ப்பவர்கள். இம்மனோநிலையை மாற் றல் வேண்டும். தொழில் கல்வி என்றவுடன் இழிவான தொழில் என ஒதுக்கி வைக்கும் வழமையுண்டு.

சுவிற்சலாந்தைப் பொறுத்த வரை இங்குள்ள மாணவர்களே வறியவர்கள். இவர்க ளுக்கு அரசு போதிய கல்வி மானியங்களை வழங்குவதில்லை. இதனால் இவர்கள் ஓர் கூட்டு வாழ்வை வாழ்வதற்கான நிர்ப்பந்தம் உள்ளது. மாறாக வசதி படைத்த குடும்பங் களில் இருக்கும் பிள்ளைகளிற்கு பெற்றோர் அவர்களிற்கு தேவையான வசதிகளை அள்ளி வழங்க கூடிய தரத்தில் உள்ளனர். இதேபோல் வெளிநாட்டு மாணவர்களுக்கு அதாவது "C" காட் கிடைத்த மாணவர்களிற்கு மானிய வசதியுண்டு. இதனால் இந்நாட்டு நடுத்தர வர்க்க மாணவர்கள் உயர் கல்வி கற்போராயி னும் சரி 8,9,10 ம் வகுப்புக்கள் படிப்போரா யினும் சரி விடுமுறை காலங்களில் குறிப்பி ட்ட காலத்தை விடுமுறைக்கு ஒதுக்கிவிட்டு மிகுதி நேரம் பகுதி நேர வேலைக்கு செல் கின்றனர். பேப்பர் போடுவது, துப்பரவு செய்வது, Super market களில் சாமான்கள் அடுக்குவது போன்ற அனைத்து உதவி வேலைகளில் ஈடுபடுகின்றனர். இவ்வருமானத் தைக் கொண்டே தமது சிறிய தேவைகளை பூர்த்தி செய்கின்றனர். இதனால் டாக்ரருக்கு படிக்கும் மாணவர்கள் கூட இவ்வேலைகளை செய்கின்றனர். ஆதலால் இவர்கள் மத்தியில் தொழில்ரீதியாக உயர்வு தாழ்வு பார்க்கும் பழக்கம் அருகி வருகின்றது.

இந்நிலையில் இங்கு பிறந்து வளரும் எமது குழந்தைகள் எதிர் நோக்கும் பிரச்ச னைகள் ஏராளம்.இதனை இங்குள்ள பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் தமது குழந்தையை எம் மொழியில் எங்கு படிப்பிக்கப்போகின்றோம் என முடிவுகள் எடுக்கும் போது ஏற்படும் தவறுகளை சுட்டிக்

www.tamilarangam.net

காட்டுவதற்காகவுமே இக்கட்டுரை வரையப் படுகின்றது.

**முதலில் ஐரோப்பிய மொழியில் குழந்தையை ஏன் படிப்பிக்கக் கூடாது என்பதை பார்ப்போம்.**

எமது நாடு ஆங்கில காலனி ஆட்சியின் கீழ் இருந்ததால் எமக்கு ஆங்கில மோகம் அதிகம். ஊரிலேயே ஒருவருக்கு ஆங்கிலம் பேச வாசிக்க தெரிந்தால் அவர் படித்தவர், அறிவாளி, பெரியவர் என ஏற்றுக் கொள்ளும் பழக்கம் எம்மவரிடம் உள்ளது. ஒரு சிலர் ஆங்கிலம் ஓர் சர்வதேச மொழி ஆதலால் இம்மொழியில் கல்வி கற்றல் நாடு மாறி வாழ்க்கை நடாத்தும் எமக்கு உதவும் என கருதுகின்றனர். இவ்வகையான புரிதலில் ஓரளவு நியாயம் இருந்தாலும் அம் மொழியிலேயே கல்வி கற்க அவசியம் இல்லை. ஐரோப்பிய நாடுகளில் கல்வி கற்கும் ஒருவர் இரண்டாவது மொழியை ஆங்கிலமாக தெரிந்தெடுப்பதற்கு வாய்ப்பு உண்டு. ஆதலால் ஆங்கில மொழியில் இங்கிலாந்திலோ, கனடாவிலோ கற்பிக்க வேண்டிய அவசியம் கிடையாது.

இன்னும் சிலர் தமிழிலேயே படிப்பிக்க வேண்டும் அத்துடன் ஆங்கிலத்தையும் கற்பிக்க வேண்டும் என்பதற்காக பிள்ளைகளை இந்தியாவிற்கு அனுப்புகின்றனர். பிள்ளைகளை இந்தியாவிற்கு அனுப்புவதில் இன்னுமோர் நோக்கமும் உண்டு. இந்நாட்டு கலாச்சாரத்தில் மூழ்கி எமது " கலாச்சாரத்தை " மறந்து விடுவார்கள். இந்தியா என்றால் தமிழ் கலாச்சாரத்திலேயே வளருவார்கள் என எண்ணி ஐரோப்பிய நாடுகளில் உள்ள பெற்றோர் தமது பெற்றோருக்கு வசிப்பிட வசதி செய்து அங்கு பிள்ளைகள் தங்கி நின்று படிக்கும் வசதி ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். அல்லது விடுதிகளில் தங்கி நின்று படிக்கும் வசதி ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். ஐரோப்பாவில் உள்ள பெற்றோர் தெரிவு செய்யும் பாடசாலைகளில் சாதாரண இந்தியர்கள் கல்வி கற்க இயலாது. மேல் தட்டு இந்தியர்களே இப்பாடசாலைக்குள் நுழைய முடியும்.அத்துடன் இந்தியாவில் மேல் நாட்டு மோகத்தின் விளைவால் Disco போதைமருந்து பாவனை அனைத்திலும் பாடசாலை மாணவர்கள் ஈடுபடுகின்றனர்.எந்த கலாச்சாரத்திலிருந்து மீட்பதற்காக பிள்ளைகளை அனுப்புகின்றோமோ அதே கலாச்சாரப் பரவல் அங்கும் காணப்படுகின்றது. மேலும் பெற்றோரை விட்டு தனியே பிள்ளை வளர்வதால் பிள்ளைகளிடம் மனோவியல் ரீதியான தாக்கம் ஏற்பட வாய்ப்பு உண்டு.

அப்படியாயின் இந்நாடுகளில் வளரும் பிள்ளைகள் இந்நாட்டு கலாச்சாரத்தில் மூழ்கி விடும் அபாயம் இருக்காதா ? என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

இங்கு தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பும் பெற்றோர் கட்டாயமாக இந்நாட்டுமொழியை கற்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. ஏனெனில் அப்போது தான் பிள்ளைகளை கண்காணிக்கவும் பிள்ளையைப் பற்றி தெரிந்து கொள்ள பெற்றோர் ஆசிரியர் சங்க கூட்டங்களிற்கு சென்று ஆசிரியர்களுடன் கலந்தாலோசிக்கவும் முடியும். இந்நாட்டு மொழியை கற்காமல் இருப்போமாயின் எமது பிள்ளைகளின் ஒரு கட்ட வளர்ச்சியின் பின்னர் எமக்கு தெரியாத மொழியை சாதகமாக வைத்துக் கொண்டு தவறான வழியில் தம்மை ஈடுபடுத்த முனையலாம்.

இந்நாடுகளில் கல்வி கற்கும் பிள்ளைகள் எதிர்நோக்கும் மனோவியல் பிரச்சனைகள் ஏராளம். ஆண் பிள்ளைகளை விட பெண் பிள்ளைகளே கூடுதலான மனோவியல் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர். அனேகமான பெற்றோர் பெண்பிள்ளைகளை ஓர் குறிப்பிட்ட வயதிற்கு பின்னர் நீச்சலிற்கு அனுப்புவதில்லை, சுற்றுலாவிற்கு அனுப்புவதில்லை. இதனால் ஏனைய சக மாணவர்களிடமிருந்து அன்னியப்பட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஏற்கனவே தமிழர்கள் என்ற ரீதியில் ஒதுக்கப்படும் போது மேற்கூறிய நிகழ்வுகள் இரட்டிப்பு அன்னியப்படுத்தலாக இருக்கும். சாதாரணமாக எமது பெற்றோர், பாடசாலையில் இந்நாட்டுப் பிள்ளைகள் இனத்தை கூறி விளையாட்டுக்களில் இருந்து எமது பிள்ளைகளை ஒதுக்கினாலோ அடித்தாலோ " பொறுத்துப் போ " என்று சமாதானப் படுத்தலாகாது.அதற்கெதிராக குழந்தைகளை போராட கற்றுக் கொடுக்க வேண்டும். எல்லா ஒடுக்குமுறைகளையும் சமாளித்து போக கற்றுக் கொடுத்தால் அக்குழந்தை மனதில் உறுதியற்றதாகவே வளர்ந்து வரும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

" கலாச்சாரம் " என்ற போர்வையுள் பெண்பிள்ளைகளிற்கு ஏராளமான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. எம்மவர் நடாத்தும் பூப்புனித நீராட்டு விழாக்களை இங்கு வளர்ந்து வரும் எமது பெண்குழந்தைகள் விரும்புவதில்லை. ஏனெனில் தன் சக நண்பிகள் பூப்பெய்வதை பெரிது படுத்தாத போது ஏன் தன் பெற்றோர் விழா எடுக்கின்றனர் என்ற தவிப்பு ஏற்படுகிறது.

இவ்வாறு வேற்று நாடுகளில் வாழும் போது கலாச்சார கலப்பு ஏற்படுவது வழமை. எமது கலாச்சாரத்தில் இருக்கும் பிற்போக்கம்சங்களை தூக்கியெறிந்து நல்லவற்றை சிறப்பாக பேணுதல் மூலமும் மேல்நாட்டு சமூகத்தில் காணப்படும் நல்ல கலாச்சாரப் பண்புகளை உட்கொள்வதன் மூலமுமே இங்கு வளரும் எமது குழந்தைகளை எமது சமூகத்துடன் இணைக்க முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்குள்ள பிள்ளைகளின் பெற்றோர் பிள்ளைகளுக்கு இரண்டு வழிகளில் தமிழ் கற்றுக் கொடுக்கின்றனர். குழந்தைகள் மொழிகளை இனம் கண்டு கொள்ளும் வயது வரும் போது மொழியை இலக்கணரீதியில் கற்பிக்கலாம் என்று ஒரு சாராரும், தமிழ் மொழியின் எழுத்து வடிவம் சிக்கலானது என்பதால் சிறு வயதிலேயே தமிழ் எழுத்துக் களை கற்பிப்பது சிறந்தது, வளர்ந்த பின் பிள்ளைகள் தமிழை எழுதப் பழக விரும்பாத தால் சிறு வயதில் கற்பிக்கலாம் என்று ஒரு சாராரும் கருதுகின்றனர். ஆயினும் இவற்றில் எந்த வழி சிறந்தது என்பது சிந்திக்க வேண்டியதும் விவாதத்திற்குரியது மாகும். குழந்தைகள் மொழியை விரைவாக இனங்கண்டு கொள்கின்றனர் என்பதும் இங்கு கவனத்துக்குரியது.

மேலும் தமிழ் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் இந்நாட்டில் வளரும் குழந்தைகளிற்கு எவ்வாறு தமிழ் கற்பிக்க வேண்டுமென்பதை நன்கு கலந்தாலோசித்தல் அவசியமாகும். இலங்கையில் கற்பித்த அதே பாணியை இக்குழந்தைகளிற்கும் கடைப்பிடிக்கும் போது குழந்தைகள் வெறுப்படைய வாய்ப்பு உண்டு என்பதை ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முக்கிய விடயம் மொழியை கற்பித்த லுடன் வீட்டில் பிள்ளைகளுடன் கட்டாயம் தமிழில் கதைத்தல் வேண்டும். அவ்வாறு தமிழில் கதைக்காது இந்நாட்டு மொழியில் வீட்டில் உரையாடுவது இந்நாட்டவர் போல் வாழ முற்படுதலாகும். இதுவே இலண்டன் வாழ் தமிழர்களின் நிலை.

மேலும் எமது சமூகத்தினது ஒன்று கூடல் வைபவங்களிற்கு குழந்தைகளை அழை த்துச் செல்வதும் கூடுதலாக தமிழர்களுடன் தொடர்புகளை பேண வாய்ப்பளித்தலும் அவசியமாகின்றது. ( இங்கு குறிப்பிடும் ஒன்று கூடல் களியாட்டங்களையோ, இந்திய நடிக நடிகைகளின் நிகழ்ச்சிகளையோ அல்ல. )

வெளிநாட்டவர் என்று பார்க்கும் போது இத்தாலியர், **Spanier**, போர்த்துக்கேயர் வேறு ஓர் ஐரோப்பிய நாடுகளில் வாழும் போதும் தமக்குள் ஓர் இறுக்கமான தொடர் பினை வைத்துள்ளனர். தாம் சந்திப்பதற்கான சந்திப்பு நிலையங்களை ஏற்படுத்தியுள்ளனர். பல சிறுவர் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து வருகின்றனர். எம்மவர் மத்தியில் ஒன்று கூடல் சந்திப்பு நிலையங்கள் ஏற்படுத்தும் வழக்கம் கிடையாது. இவற்றை கவனத்தில் கொள்ளாவிட்டால் குழந்தைகளைப் பிரிந்து நாம் மட்டுமே நாட்டிற்கு திரும்ப வேண்டிய நிலை ஏற்படும்.

***ம. நரேந்திரன்***

# ரண களம்

ரண களம்
ரண களம்

இனியும் என்ன
பேரம் முறிந்தாயிற்று

ஒவ்வொரு நிமிடமும்
கனமாகிக் கொண்டே
நகர்கிறது

இருட்டுக் குடிசைக்குள்
கண்களை நனைத்தபடி

கனவிசம்
துப்பாக்கி
கவச வாகனம்

சுடு நிலத்தில்
விளைந்த பயிர்
உலர்ந்து போகும்
கோர்த்துக் கட்டிய
செம்புக் கூட்டுக்குள்
குற்றுயிர் வதைக்கும்

கூரை ஓட்டை
ஒவ்வொன்றும்
குறி பார்க்கும்

செவிப் பாறை
ஓசை இழக்கும்
கைகள் பற்ற
மறுக்கும்
கால்கள் எட்டி
உதைக்கும்

குறுக்கும்
நெடுக்கும்
குருதி வந்து
குளமாய் நிக்கும்
குற்றுயிர் பறக்கும்.

**இரா.கலாநேசன்**

சிறுகதை:

# மன உணர்வுகள்



**வி**டிந்து விட்டிருந்தது. எழுந்து போய் யன்னலைத் திறந்து பார்க்க மனமில்லை. ஒரே அலுப்பாக இருந்தது. இரவு முழுவதும் நடந்தது. ஆசையால் யன்னலைத் திறந்தேன். "சரியாக் குளிருது..... இது தான் சுவீசா..." குளிரையும் அடக்கிக் கொண்டு பார்த்தேன். அது குளிர்காலம் எங்கும் ஒரே பனிக்கொட்டி வெள்ளையாக பூமியையே மூடியிருந்தது. மர மெல்லாம் பட்டுப் போயிருந்தது. " இதவிட எங்கட ஊர் எவ்வளவு வடிவு " ஒரே இரைச்ச லாக இருந்தது.எங்கோ அவசரமாக போவது போல் கார்கள் வேகமாக இயங்கிக் கொண்டி ருந்தன. ஆண், பெண் சோடிகளாக, கை கோர்த்தபடி தங்களுக்குள் ஏதோ பேசிச் சிரி த்தபடி..... " எவ்வளவு சந்தோசமாக இருக்கி னம், வெளிநாட்டில எல்லாம் பப்பிளிக்கா திரிவினம்.. எங்கோ கேட்டது ஞாபகத்திற்கு வந்தது.

கதவு தட்டப்படும் ஓசை கேட்டது.

" வாங்கோ "

கதவைத் திறந்து வந்தவர் எங்களைக் கூட்டி வந்தவர்.

"Hello வளர்மதி உமக்கு ரெலிபோன் வந்தது. உம்மட ஆள் இன்னும் 2 மணித்தி யாலத்தால வருவார் நீர் வெளிக்கிடுமன் " சொல்லி விட்டுப் போய் விட்டார்.

" உம்முடைய ஆள் "அவர் சொன்னதும் எனக்கு ஏதோ மாதிரியிருந்தது. அந்த ஆள் எப்படி இருப்பார். போட்டோவில பார்த்ததிற் கும் நேர பார்க்கிறதிற்கும் எப்படி இருப்பார் வந்தா என்ன கதைக்கிறது. நல்லா கதைப்பா ரோ என்னவோ ரெலிபோனில நல்லாக் கதை ச்சவர்,எனக்கு எப்பவும் கதைச்சுக் கொண்டே இருக்க வேண்டும். " வெளிநாட்டில கதைக் கவே நேரம் இருக்காது ஒரே வேலை தான் " சித்தப்பாவின் கடிதம் ஞாபகத்திற்கு வந்தது. ஓ... நானும் வேலை செய்து தம்பியை படிப் பிக்க வேணும். ஆனால் அவர் வேலை செய்ய விடுவாரோ ... சீ... விடுவார். ரெலிபோனில சொன்னவர் இங்க இரண்டு பேர் வேலை செய்ய வேணுமென்று. வேலை செய்தாலும் எங்கட வீட்ட காசு அனுப்ப விடுவாரோ என்னவோ அவரிட்ட கேட்டுச் செய்வம்....

" குடும்பத்தில சண்டை சச்சரவு வரும் நீ எதிர்த்துக் கதைக்கக் கூடாது. சமாளிச்சு போக வேணும்." அம்மா சொன்னது ஞாபகத் திற்கு வந்தது. மீண்டும் யாரோ கதவைத் தட்டினார்கள்.

"வாருங்கோ ......."

முதல் வந்தவர் தான் ரீயை வைத்து விட்டுப் போனார்.

தனியே இருக்க விசராக இருந்தது. இவர் எப்ப வரப் போறார் வந்தவுடனே இரவு நடந்ததைச் சொல்ல வேண்டும். அதை நினைச்சா இப்பவும் நெஞ்சு பக்கென்றது.

அன்றிரவு சுவிசிற்குப் போக வேணும் என்றும் 10மணிக்கு எல்லோரும் ஆயத்தமாக இருக்கும்படியும்" போடர்காரன் " சொன்னார் இரவு வெளிக்கிட்டோம் 2-3 மணித்தியாலம் காரில் பிரயாணம். ஓரிடத்தில் இறக்கி விட்டு போய்விட்டது. பயங்கரமான இரவு ஆனாலும் பனிக் கொட்டி இருந்ததால் எல்லோர் முகமும் தெரிந்தது. எல்லோர் முகமும் பேயறைந்தது மாதிரி இருந்தது. என்ன நடக்குமோ என்ற பயம். குளிர் வேறு மலைக்கு மேலால் நடக்க வேணுமாம்.எனக்கு

www.tamilarangam.net

பயமாக இருந்தது.குளிர் காதைக் கிளித்தது நடந்தோம். இலங்கையில் எடுத்த சப்பாத்து கால் விறைத்து விட்டது. இருப்பது எதுவும் தெரியவில்லை. ஒருவருக்கும் சொல்ல முடியாது. கதைக்கக் கூடாது என்று உத்தரவு கண நேரத்தில் என் கா தடுக்கி விட்டது... அம்மா ....... கீழே உருண்டேன்...... யாரோ ஓடி வந்து பிடித்தார்கள் இல்லையேல் .....

கீழே ஆறு அமைதியாக ஓடிக்கொண்டு இருந்தது.

எப்படியோ வந்து சேர்ந்து விட்டோம். எல்லாம் அவருக்கு சொல்ல வேணும். பாலத் திற்கு மேலால தவண்டு வந்ததும் சொல்ல வேணும்...அவருக்கு என்ன ! நாங்க பட்டுவாற பாடு என்ன தெரியும்?ஜாலியா வந்து கூட்டிக் கொண்டு போவினம் சொன்னா இப்படித்தான் எண்டு இழுப்பினம்.

திடீரென்று அம்மாவின் ஞாபகம் வந்தது.

அம்மா நீ என்ன செய்வாய் ? நான் கொழும்பு வந்தவுடன் ஒரு பிள்ளையின்ர கடன் முடிஞ்சுது என்று பெருமூச்சு விட்டிருப் பாய். " போன உடனே இரண்டு பேரும் நின்று போட்டோ எடுத்து அனுப்ப வேணும் அம்மா சொன்னவ." எங்கள வளர்க்க அம்மா என்ன பாடுபட்டவ.... கடைசித் தம்பியின் ஞாபகம் வந்தது. " அக்கா போன உடனே எனக்கு ஒரு சைக்கிள் வாங்கி அனுப்பக்கா அப்ப தான் நல்லா படிப்பன்.... " "ஓமக்கா எனக்கு அத்தாரிட்டைச் சொல்லி சட்டை எல்லாம் எடுத்து அனுப்பக்கா " தங்கச்சியும் சொன்னவள்.

எல்லாவற்றிற்கும் மேலா இதுக்கெல்லாம் காரணமான சித்தப்பாவின் ஞாபகம் வந்தது. அவர்தானே இந்தக் கல்யாணத்தையும் பேசி எனக்கும் வரக் காசு கொடுத்தவர். முதல் சித்தப்பா வீட்ட தான் போக வேணும்.

சண்டை எதுவும் வந்தா அடிப்பாரா ? எனக்கு பயமாக இருந்தது. எப்படி வாழப்போ கிறோம். ஊரில் ஒரு கல்யாணம் என்றால் மாப்பிள்ளையை முதலில் பார்க்கலாம்.ஆனால் இது போட்டோவுடன் எல்லாம் முடிந்துவிட்டது குடிப்பாரா ? இந்தக் குளிருக்கு கொஞ்சம் குடிக்கிறதில என்ன தப்பு.

" என்ன வளர்மதி உமக்கு சமைக்கத் தெரியும் தானே ? இங்க நாங்க சமைச்சுச் சாப்பிட்டு நாக்கு மரத்துப் போச்சு " ரெலி போனில அவர் கேட்டவர் அவருக்கு நல்லா சமைச்சுக் குடுக்க வேணும்.குழந்தை எல்லாம் இப்ப பெறக்கூடாது. இதைப் பற்றி அவர் ரெலிபோனில கதைக்கவேயில்லை. முதன் முதல் எப்படிக் கதைப்பார்.

எப்போ காண்போம் என்று இருந்தது. எப்படி அடையாளம் கண்டுபிடிக்கிறது. போட் டோ "கான்பாய்க் " குள் இருந்தது. எடுத்துப் பார்த்தேன். ஆள் நல்ல வடிவுதான்.

என் மனம் அலைபாய்ந்து கொண்டே இருந்தது. கேள்விகளும் பதில்களும் மாறி மாறி வந்தது. எப்படி வாழப் போகின்றோம். பயமாக இருந்தது. சீ.... என்ன இருந்தாலும் இனி அவரோட தானே வாழப் போகிறோம் என்ன பயம் என்றும் மனம் சொன்னது நேரத் தைப் பார்த்தேன். எனி உடுப்பு மாத்தச் சரி கதவைச் சாத்தி விட்டு உடுப்பு மாத்தத் தொடங்கினேன்.

மேசையில் ரீ ஆறிப்போயிருந்தது. வெளியே மீண்டும் பனி கொட்டத்தொடங்கி இருந்தது.

ஆனந்தி

11ம். . . பக்கத்தின் தொடர்

தெரியாத நுண்ணுயிர்கள் கடலின் உயிரியல் பரப்பு அழி ந்து போகும். இதனால் மனித இனத்திற்கான உணவு உற்பத்தியில் பாரிய தாக்கம் ஏற்படும்.

கடற்பரப்பின் காபனீர் ஒட்சைட்டின் தெறிப்புத் தன்மை குறைவதால் காலநிலையில் பாரிய தாக்கம் ஏற்படும். இந்த காலநிலை மாற்றத்தால் பூ கோளத்தின் வெப்பநிலை சில வருடங்களுக்குள் 3 லிருந்து 5 பாகைவரை உயர்வதால் பின்வரும் விளைவுகளை மனிதன் எதிர்கொள்வான்.

- துருவங்களின் பனிமண்டலம் கரைந்து போகும்
- கடல்மட்டம் உயர்வால் கரையோரப் பகுதிகள் நீரில் மூழ்கும்.
- விவசாய நிலப்பரப்பு தரிசாகிக் குறைந்து போகும்.
- பாலைவன நிலப்பரப்பு அதிகரிக்கும்.

***இயற்கை ஏதோவொரு விதத்தில் நீடித்திருக் கத்தான் போகிறது. மனிதகுலம் என்னவாகப் போகிறது என்பதுதான் பெரிய பெரிய கேள்வி !***

தேவா

www.tamilarangam.net

# எதிர்பாராத முத்தம்

## கார்ல் மாக்ஸுக்கு கிடைத்தது

'கம்யூனிசம் தோற்றுவிட்டது.'

'சோசலிசம் செத்துவிட்டது'.

'லெனின், மார்க்ஸ் ஆகியோரின் உருவத்திற்கே உலகில் இடமில்லை.'

இவையெல்லாம் இன்று பொதுவாக உலகம் முழுவதிலும் கேட்கும் குரல்கள். செத்த பாம்பை அடிப்பது போல் எல்லோரும் ஒட்டு மொத்தமாக வசைபாடிக்கொண்டிருக்கையில் ஒருநாள் எதிர்பாராத ஒரு இடத்தில் எதிர்பார்க்காத ஒரு வகையில் கார்ல் மாக்ஸ் நியாயமான முறையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டார்.

அமெரிக்காவின் முதலாளித்துவ உலகின் வெளியீடான 'வோல் ஸ்ரீற் ஜேர்ணல்'(WALL STREET JOURNAL) அனைத்துலகிலும் பலராலும் மதிக்கப்படும் நிதி, தொழில்துறை நாளேடு. இது அண்மையில் தனது முதற் பக்கத்தில் கார்ல் மார்க்ஸின் படத்தையும் வெளியிட்டு அவரை நினைவு கூர்ந்து கட்டுரை வெளியிட்டிருந்தது. இப்படத்தையும் கட்டுரையையும் அதிகாலையில் கையில் எடுத்து முதற்பக்கத்தைப் பார்த்த உலகத் தொழில்துறைப் பெருமக்களின் கையிலிருந்து கோப்பிக் கப்புகள் தளம்பி பத்திரிகையை ஈரப்படுத்தியிருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சிறந்த சிந்தனையாளர், அற்புதமான ஆய்வாளர் அவரது சேவைக்கு இன்றும் என்றும் ஒரு மதிப்புண்டு என்று கார்ல் மார்க்ஸின் கருத்துக்களைப் பாராட்டிய நாளேடு தொடர்ந்து வெளியிட்ட கருத்துக்கள் சிந்திக்கத்தக்கவை.

மார்க்சின் கொள்கைகளில் சமூக நலத்திற்கு முதன்மையளிக்கும் பாங்கு, உற்பத்தி நியாய முறையில் பகிரப்படுதல் வேண்டும் 'என்ற உத்வேகம், உலகம் மாசடைவதில் நின்று பாதுகாக்கப்படவேண்டும் என்ற எண்ணம், இலாப வேட்டையும், ஒழுக்கமற்ற முறைகளும் தடுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாடுகள் என்பவை மிகவும் போற்றத்தக்கவை. இன்றைய பங்குச் சந்தை உலகம் கொண்டுள்ள ஊழல்கள் (யப்பான், ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளில்) அவரது கொள்கைகளை இன்று நிரூபித்து நிற்கின்றன.

மார்க்ஸின் வரலாற்று, பொருளியல், சமூகவியல் சிந்தனைகள் ஜன்ஸ்டீனின் நவீன பௌதீகச் சிந்தனைகளுக்கும் சிக்மண்ட் பிராய்டின் மனவியல் சிந்தனைகளுக்கும் நிகரான தன்மையைக் கொண்டவை.

மார்க்ஸின் தவறுகள் என்று சொல்லக்கூடியவையும் சில உள்ளன. சந்தைமுறை தானாகவே பல சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளும் தன்மைக்குரியது என்பதை ஏற்க மறுத்ததும் ஜனநாயகத்தில் வாக்காளரின் பங்கு, அரசின் வாய்ப்பு என்பவற்றை கருத்திற் கொள்ளத் தவறியதும் முதன்மையானவை.

நாளேட்டின் கருத்துப்படி பார்க்கையில் தெருமுனைகளில் இருந்து கார்ல் மாக்ஸின் உருவத்தை அகற்றலாம்; ஆனால் பாடப்புத்தகங்களில் இருந்தும் நூலக அடுக்குகளில் இருந்தும் அவரை அகற்ற முடியாதுதான்.

நன்றி பாரிஸ் ஈழநாடு

www.tamilarangam.net

# குணா

" **அ**பிராமி வருவா...................." அநேக சினிமா ரசிகர்களுக்கு தெரிந்த வார்த்தைகள் இவை. "**குணா**" திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் பெரியளவில் எடுபடவில்லை என்றாலும்; குறிப்பிட்ட மட்டத்தினரை ஒரு வகையில் பாதித்தே இருக்கிறது.

**"மனிதர் உணர்ந்து கொள்ள இது மனிதக் காதல் இல்லை"**

தூண்டிலில் பார்த்திபனின் "கனவை மிதித்தவன்" தொடர்கதையில் வரும் கதாபாத்திரங்கள் " பகிடியாக " உரையாடும் அளவுக்கு பாதித்திருக்கிறது. நான் இப்படிச் சொல்கிறேன் என் நண்பனோ " உனக்கும் குணா மாதிரிப் பைத்தியமா ? " என்கிறான் இங்கு " குணா " படம் திரையிடப்பட்ட பொழுது சென்று பார்த்தவன் அவன்.படத்தின் இடையில் சிலர் எழுந்து சென்று விட்டதையும், படம் முடிந்து வெளியேறும் போது " ஒரு மண்ணாங்கட்டியும் விளங்கேல்ல " என்று பலர் சொன்னதையும் காதால் கேட்டவன் அவன். அவனிடம் போய் " குணா ஒரு குறிப்பிட்ட மட்டத்தை எண்டாலும் பாதிச்சிருக்கு " என்றால் விடுவானா ? அந்தக் கோபத்தில் என்னையும் பைத்தியமாக்கி விட்டான்

சரி அவன் தான் குணாவைப் பற்றி என்ன சொல்கிறான். கேட்டேன் அவனிடம் " ரெண்டும் கெட்டான் சொதப்பல் " என்றான் சுருக்கமாக. அவனின் பதிலில் எனக்குத் திருப்தியில்லை. ஆனாலும் அவ்வளவு மோசமான ரசனையுள்ளவன் அல்ல அவன். நல்ல படங்கள் வராதா ? என்று ஏங்குபவன் அவன். கலைத்துவமான படங்கள் என்றால் பேயாய் அலைவான்.அது எந்த மொழியாயிருந்தாலும் சரி.அப்படி ஒரு தாகம் அவனுக்கு.அப்படிப்பட்டவனுக்கும் இந்தப் படம் பிடிக்கவில்லை. சாதாரண தமிழ்பட ரசிகர்களுக்கும் பிடிக்கவில்லை. நானும் ஏதோ வித்தியாசமான படைப்பு என்ற எதிர்பார்ப்பில் இருந்தது உண்மை. ஏனென்றால் " இது ஓர் கலைப் படைப்பு " என "குமுதம்" வார இதழ் எழுத பதறிப் போன கமல்காசன் " இது எல்லா ரசிகர்களுக்குமான படம் தான் "என மறுத்து எழுதிய சங்கதி எனக்குத் தெரியும்.அப்பவே எனக்கு சாதுவா தட்டுப்பட்டது. இருந்தாலும் முதல் இட்டவன் எங்கே " கலைப்படைப்பு " என்று முத்திரை குத்தி வயித்திலடித்து



விடுவாங்களோ என்று பயப்பிடுவதிலும் நியாயம் இருக்கு என்று சமாதானப்படுத்திக் கொண்டேன்.ஆனால் இப்பொழுது எல்லோரும் இப்படிச் சொல்ல எனக்கு இருப்புக் கொள்ளவில்லை.நண்பனிடம் T.V. டெக் இருப்பதால் கொப்பியை வாடகைக்கு எடுத்துக் கொண்டு போவோம் எனக் கடைக்கு சென்றேன்.

" படம் வேல இல்லத் தம்பி,விளங்காது, எண்டாலும் கொண்டு போய்ப் பாருமன் " கடைக்காரர் வியாபார நோக்கத்தையும் மறந்து வெளிப்படையாகச் சொன்னார்.எனக்கு இன்னும் ஆர்வம் கூடியது. கொப்பியை எடுத்துக் கொண்டு நண்பனிடம் சென்றேன். அவனுடன் சேர்ந்து படம் பார்ப்பதே ஒரு அலாதியான மகிழ்ச்சி. முக்கியமான இடங்கில் படத்தை "still" இல் நிறுத்தி விட்டு விவாதம் தொடங்கிவிடும். இது எங்கட பழக்கம்.ஆனால் சிலருக்கு இது பெரியதலைவலி.

படத்தை போட்டு விட்டு ஆவலுடன் அமர்ந்தேன். கதை தொடங்கி மிருதுவாக நகர்ந்தது. கள்ளம், கபடம் நிறைந்த சமூகத்தின் பார்வையில்; அவைகளை அறியாத ஒருவன் "பைத்தியம்". ஆம்! சுற்றம் சூழலால் மனோநிலை குழம்பிய ஒருவனைப் பற்றிய கதை இது.

"நல்ல விசயத்தைதான் தொட்டுஇருக்கிறான்"
"போகப் போக தெரியும் பார்" என்றான் நண்பன்.

அவன் சொன்னது பிழைக்கவில்லை.கற்பனையில் தானே உருவாக்கிக் கொண்ட காதலி அபிராமியை வேறு ஓர் பெண்ணின் உருவில் காணும் " குணா " தெளிவடைய நாமோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழப்பமடைகிறோம்.குழப்பமடைகிறோம் என்பதைவிட ஏமாற்றமடைகிறோம் என்பதே பொருத்தமாயிருக்கும். ஏனெனில் இதுவரை குணா என்ற மனநோயாளியின் பாத்திரப் படைப்பை, அதன் உயிரோட்டமான வாழ்வை ஆர்வமுடன் ரசித்துக் கொண்டிருந்த நமக்கு; இடையில் வழமையான தமிழ் கதாநாயகன் வந்து குதித்தால் எப்படியிருக்கும்? படத்தின் பின்பாதியில் கமலகாசன் வழமையான கதாநாயகனுகி அட்டகாசம் புரிகிறுர்.

நண்பன் என்னை ஒரு மாதிரிப் பார்த்து சிரித்தான். சிரிப்பின் அர்த்தம் எனக்கு புரிந்து விட்டது. தான் சொல்லியும் கேட்காமல் எதிர்பார்த்து ஏமாந்த சந்தோசம் அவனுக்கு.

"படத்தின் பின் பகுதியில் ஒன்றைக் கவனிச்சியா ? பழைய குணாவை ஞாபகப்படுத்த இடைக்கிடை அந்தப் பாத்திரமாய் மாறுகிறுர் கமலகாசன்."

"பழைய பாத்திரத்தை கொலை செய்து விட்டோமே என்ற மன உறுத்தல் இயக்குனருக்கு ஏற்பட்டிருக்கலாம்.அதால இடைக்கிடை ஞாபகப்படுத்துகிறுர்."

"அதுமட்டுமா குணா என்ற பாத்திரம் அதன் இயல்புக்கு மீறின நடவடிக்கைகளிலும்,அற்புதங்களிலும் இறங்குகிறது."

"நீ சொன்னது போல் ஒரு குறிப்பிட்ட மட்டத்தையாவது படம் ஒருவகையில் பாதிச்சிருக்கு எண்டால்; அதுக்கு கமலகாசனின் அற்புதமான நடிப்புத்தான் காரணம்."

கொஞ்சம் இறங்கி வந்தான் நண்பன்.

"நீ சொல்லுறது உண்மைதான் எண்டாலும் பாலகுமாரனின் திரைக்கதை வசனம் சுருக்கமாகவும்,அர்த்தம் பொதிந்ததாகவும் இருக்கிறதும் அதற்கு ஓர் காரணம்"

"நீ பாலகுமாரனை உயர்த்துகிறுய்"

"அப்படியல்ல, இது இண்டைக்கு தமிழ்ப்பட உலகில் ஏற்பட்டுவாற நல்ல மாறுதல். நீட்டி, நீண்ட வசன முழக்கங்களை விட,சுருக்கமாக தெளிவாக,பாத்திரங்களின் இயல்புக்கேற்ப..... இது நல்லதில்லையா ?"

"சரி அதைவிடு வழமையான தமிழ் சினிமாக்களைப் போலவே கதாநாயகன்,நாயகி இந்த படத்திலும் தொடருதுதானே ?"

"ஆனுலும் வழமையான கொலையாக இதைப் பார்த்துவிட முடியாது. சமூகத்தை விட்டு அந்நியப்பட்ட இரண்டு ஜீவன்கள் சமூகத்திஞல் சாக நிர்ப்பந்திக்கப்படுகின்றன."

சுருக்கமாக சொல்வதாஞல் விவாதம் நீண்டு கொண்டிருந்தது. நண்பன் கூறுவது போல் இந்தப்படம் " இரண்டும் கெட்டான் " ரகம் தான்.

குணாவை ஒரு க்ரைம் படமாக எடுக்கத் திட்டமிட்டிருந்த கமலுக்கு அதற்காக பல கதைகளைத் தேடியும் கிடைக்காத சமயத்தில் மலையாளக் கதையாசிரியர் சாப்சான் என்பவர் தன்னிடம் க்ரைம் சம்பந்தப்படாத ஒரு மனநோயாளியின் காதல் கதை ஒன்று இருப்பதாக சொல்ல கமலகாசன் உடனே அதை வாங்கியுள்ளார். ஹொலிவூட் நடிகர் Justin Hofmann னின் ரசிகரென தன்னைக்கூறிக் கொள்ளும் கமலகாசன் அவர் "டூட்சி" படத்தில் அற்புதமாக நடித்து ஒஸ்கார் விருதை தட்டிச் சென்ற அந்தப் பெண் பாத்திரத்தையும்,"Rain Man" படத்தில் Justin நடித்த மனநிலை சரியில்லாத பாத்திரத்தையும், போல் தமிழில் தான் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் இருந்ததாக கூறுகிறுர். அதே போல "அவேக்கினிங்சு" Robert de Nero நடித்ததும் தன்னைக் கவர்ந்ததாக கூறுகிறுர். இது தான் குணாவை எடுக்கத் தூண்டியவை என கூறுகிறுர்.

ஆயினும் மேற்குறிப்பிட்ட படங்களில் கதை சொல்லப்பட்ட நேர்த்தியும், படத்தின்–பாத்திரங்களின்–உயிரோட்டம் கெடாமல் பார்த்துக் கொண்டதிலுமுள்ள நாணயம் குணா படத்தில் இல்லை. மலையாளத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட க்ரைம் சம்பந்தப்படாத மனநோயாளியின் பாத்திரம் தமிழில் கொலை செய்யப்பட்டு விட்டது.கலையம்சத்துடன் எடுக்கப்படும் படங்கள்,அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் படங்கள் "Art film" ( கலைப்படங்கள் ) என முத்திரை குத்தி ஒதுக்கப்படும் சூழலில் குணாவும் அத்தகைய நிலைக்கு ஆளாகலாம் என்ற அச்சம் குணாவை சிதைக்க சொல்லி கமலகாசனை தூண்டியிருக்கிறது. நல்ல கலைப்படைப்புகளின் பாதிப்பிஞல் கமலகாசன் போன்றவர்கள் அத்தகைய படங்களை தமிழில் தர முயன்றுலும், தமது " கஜானா " காலியாகி விடும் என்றுல் அதை சிதைப்பதற்கும் (மசாலாவைப் புகுத்தி) தயங்குவதில்லை.கலையுணர்வையும் காசையும் பேண நினைக்கையில் கலை சறுக்கி விடுகிறது. இதையும் மீறி கலைத்துவமான படங்களைத் தருவதற்கு முதலில் தாம் கொண்ட கலையுணர்வுக்கு நேர்மையாக இருத்தல் அவசியமாகிறது. இத்தகைய போராட்டத்திலேயே சிலர் சாதனையாளர்களாகிறுர்கள்.

மொத்தத்தில் கனவுலகத் தொழிற்சாலையான தமிழ் சினிமாவில் கருவுற்று வியாபார நோக்குக்கும் கலையுணர்வுக்கும் நடந்த யுத்தத்தில் சிதைவுற்று பிறந்த குழந்தைதான் " **குணா** ".

– **ராகவன்** –



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விமர்சனம்;

# உயிர்ப்பு - 1 பற்றி ---

உயிர்ப்பு - 1 என்ற சஞ்சிகை ஒன்று மாசி மாதம் 1992 இல் வெளிவந்தது.இந்த சஞ்சிகையில் பல பிரயோசனமான விடயங்கள் இருந்தன. அதில் வெளிவந்த கட்டுரைகள் இன்றைய எமது போராட்டத்தில் பல விவாதங்களை முன் எடுக்க உதவும்.அந்த பத்திரிகையில் வெளிவந்த கருத்துக்கள் சம்பந்தமாக உள்ள பிரச்சனைகள் கீழே முன்வைக்கப்படுகின்றன.

அ) எதிரிகளும் நண்பர்களும் என்ற கட்டுரை தொடர்பாக..........

" இயற்கையும் சமூகமும் தனிப்பட்ட மனித மனத்திற்கு வெளியே இருந்து அவனது விருப்பு வெறுப்பை சாராது இயங்கிக் கொண்டிருப்பதாகும் " என்ற ஒரு கருத்து கட்டுரையில் கூறப்படுகின்றது. ஆனுல் அதன் பின்பு "இவ்வாறு குறிப்பிடுவதன் மூலம் நாம் தனிப்பட்ட நபர்களுக்கு அவர்களது குண நலன்களுக்கு வரலாற்றில் எந்தப்பாத்திரமும் கிடையாது என்று கூறவில்லை. " என்றும் கூறப்படுகின்றது. இயற்கையுடனும் சமூகத்துடனும் மனிதன் கொண்டுள்ள, அவனது விருப்பு வெறுப்புக்கள் கொண்டுள்ள இயங்கியலை முதல் கருத்து நிராகரிக்க அவனது வரலாற்றுப்பாத்திரத்தை இரண்டாவது கருத்து அங்கீகரிக்க குழப்பமே மிகுதியாகின்றது. ஓர் ஓட்டமான வாசிப்பில் இரண்டாவது கருத்து அடிபட்டு போகின்றது. மேற்படி கட்டுரையில் இயற்கைக்கும் சமூகத்திற்கும் மனிதனுக்கும் இடையிலான உறவில் தனிமனிதனும் அவனது குண நலன்களும் ஆற்றுப் பங்கு இவற்றுக்கு இடையிலான உறவு என்பன சரியாக விளக்கப்படவில்லை. கட்டுரையின் நோக்கம் இதுவல்லாவிடினும் இப்படியான ஒரு கருத்து தெரிவிக்கப்படும் போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும.

தொடர்ந்து அதே கட்டுரையில் "முன்னணிப் பாத்திரம் வகிக்கும் நபர்களுக்கு ஊடாகவன்றி அவர்கள் எந்த சமூகசக்திகளை வர்க்கங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றூர்கள் என்பதை கண்டறிய வேண்டும்." என்று குறிப்பிடப்படுகின்றது. இது மார்க்சியத்தின் சமுதாய ஆய்வு முறையை மிகவும் எளிமையாக புரிந்து கொண்டதன் வெளிப்பாடே இன்றைய உலகப் போக்கை நாம் அவதானித்தால் எந்த ஒரு சமூக சக்திகளையோ அன்றி வர்க்கங்களையோ பிரதிநிதித்துவப் படுத்தாமல் தமது குழுநலன்களை மையமாக வைத்து சமூகத்தில் நிலவும் முரண்பாடுகளை தாமே கையில் எடுத்து அத்துடன் கவர்ச்சி வாதத்தையும் சேர்த்து பல குழுக்கள், கும்பல்கள் மக்களை அடக்கி ஆழ்கின்றது. இதற்கு மூன்ரும் உலக நாடுகளில் பல உதாரணங்களை காட்ட முடியும்.

மேலும் " தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தின் அடிப்படை என்ன?" என்ற கேள்வியைக் கேட்பதன் மூலம் தமது அணுகுமுறையை தொடங்குவது தவறு. மாருக மக்கள் மத்தியில் நிலவும் முரண்பாடுகள் என்ன? என்ற அடிப்படையிலேயே நாம் எமது பிரச்சனைகளை அணுக முற்பட வேண்டும்.

"தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் இந்திய அரசு இவ்வாறு தமது மேலாதிக்கத்தை நிலைநாட்ட படைகளை அனுப்பியதுடன் தமிழ் மக்களுக்கும் சிங்களப் பேரினவாத அரசுக்கும் இடையிலான முரண்பாடானது புதிய முரண்பாட்டால் மாற்றியமைக்கப்படுகின்றது." என்ற கருத்து கூறப்படுகின்றது.இது முரண்பாடுகள் பற்றிய முழுமையற்ற அணுகுமுறையாகும்.புதிய முரண்பாட்டால் மாற்றியமைக்கப்படுகின்றது என்று கூறிய கட்டுரையானது பழைய முரண்பாட்டுக்கு என்ன நடந்தது என்று பார்க்கத் தவறுகின்றது. புதிய முரண்பாட்டை பிரதான முரண்பாடு என்று கூறுவதன் மூலம் மேலாதிக்கத்திற்காக போட்டி போட்டுக் கொண்டிருக்கும் ஒரு "பழைய" முரண்பாட்டை கட்டுரை பார்க்கத்தவறுகிறது. உண்மையில் இலங்கை மக்கள் மத்தியில் ஒரு சில முரண்பாடுகள் அவர்களது, அவர்களது சமுதாயத்தின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கின்றது. அவற்றில் முரண்பாடுகள் ஒரு சில மேல்நிலைக் காக போட்டி போடுகின்றன. இந்த முரண்பாடுகளின் அளவு பண்புகளில் ஏற்படும் மாற்றமானது ஏதாவது ஒரு முரண்பாட்டை குறிப்பிட்ட ஒரு கால கட்டத்தில் மேல்நிலையினை கைப்பற்ற ஏதுவாகின்றது. இதுவும் ஒரு வகை மாற்றியமைப்புத் தான். ஆனுல் இது எந்த வகையான மாற்றியமைப்பு என்பதில் தான் எமது அணுகுமுறை தங்கியுள்ளது. ஏதாவது ஒரு மேல்நிலையில் இருக்கும் முரண்பாட்டை "பிரதான முரண்பாடாக" கூறி ஏனைய மேல்நிலைக்காக போட்டி போடும் முரண்பாடுகளுக்கு உரிய பங்கை

www.tamilarangam.net

கொடுக்காமல் விடுவது தவறான அணுகுமுறையாகும். இது சமுதாயத்தில் நிலவும் முரண்பாடுகள் பற்றிய இயங்கியலுக்கு முரணான அணுகுமுறையாக இருக்கும்.

அதே கட்டுரையில் 14 ம் பக்கத்தில் இறுதிப்பகுதியில் புலிகளை தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஊசலாட்டம் காட்டுபவர்களாக காட்ட முனைவது தவறு. அவர்களை பற்றி விரிவான ஓர் ஆய்வு இல்லாமல் இந்த முடிவை எடுப்பது தவறானது.

ஆ) "தேசிய சக்தி" பற்றிய சில பிரச்சனைகள் என்ற கட்டுரை தொடர்பாக........

20 ம் பக்கத்தில் இறுதியில் முதலாளித்துவ வளர்ச்சியின் போது அதன் "பொருளாதார நிலைக்கு பொருத்தமான சமூக உணர்வாக தேசிய இனங்கள் ஒன்று கலப்பது எனும் நிகழ்வு தோன்றுகிறது." என்று கூறப்படுகின்றது. தேசிய இனங்கள் ஒன்று கலக்கும் நிகழ்வு என்ற பிரச்சனையில் பொருளாதார நிலையின் பங்கு என்ன? என்பது பற்றிய மேற்படி கருத்தானது ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல. ஏன் எனில் அது பொருளாதார நிலைக்கு மிகவும் கூடிய அழுத்தத்தை கொடுக்கின்றது. தேசிய இனங்கள் ஒன்று கலப்பது என்பது அதற்குத் தேவையான அடிப்படையான பொருளாதார நிலையை கோரும் என்பது புரிந்து கொள்ளப்படக் கூடியதே. மாறாக இதற்கு அதிகூடிய அழுத்தம் கொடுப்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது.ஏன் எனில் தேசிய இனங்கள் ஒன்று கலப்பது என்பது உண்மையில் ஒரு கலாச்சாரப் புரட்சி சம்பந்தப்பட்ட பிரச்சனை. கலாச்சாரப் புரட்சி என்றவுடன் சீனக் கலாச்சாரப் புரட்சியை மனதில் நிறுத்த வேண்டிய அவசியம் இல்லை. முதலாளித்துவமானது தேசிய இனங்கள் ஒன்று கலக்கும் நிலையை உருவாக்குவதில்லை, உருவாக்கவில்லை. மாறாக ஏனைய தேசிய இனங்களை ஒடுக்கி ஏனைய தேசிய இனங்களுடன் போட்டி பொறாமையை வளர்த்து ஏகாதிபத்தியமாக வளர்வதையே சாத்தியமாக்குகிறது .அல்லது அதன் திசைவழியில் இயங்குகிறது.அதாவது தேசிய இனங்கள் ஒன்று கலக்கும் இயக்கப்போக்குக்கு எதிராகவே முதலாளித்துவ இயக்கப்போக்கின் திசைவழி இருக்கும். யாராவது பல் நாட்டு நிறுவனங்களையும் உலகளாவிய மூலதனத்தையும் மனதில் வைத்து தேசிய இனங்கள் ஒன்று கலக்கும் திசைவழியில் இயங்குவதாக கூறுவது, தேசிய இனங்கள் ஒன்று கலக்கும் இயக்கப்போக்கை பொருளாதாரவாதத்தின் ஊடாக புரிந்து கொண்டதன் வெளிப்பாடேயாகும்.

முதலாளித்துவத்தின் ஆரம்பக்கட்டத்தில் தேசிய இனங்கள் விழிப்படைவதாகவும், முதலாளித்துவத்தின் முதிர்ந்த நிலையில் தேசிய இனங்கள் ஒன்று கலப்பது பற்றியும் கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியது அல்ல. முதலாளித்துவத்தின் ஆரம்பக் காலகட்டத்தில் இல்லாத தேசிய இனங்கள் இன்றைய உலகில் விழிப்படைவதையும், முதலாளித்துவம் முதிர்ந்த, வளர்ச்சியடைந்த நிலையில் இருக்கும் நாடுகளில் தேசிய இனங்கள் ஒன்று கலக்க தயாராக இல்லாததையும் மேற்படி கருத்தானது விளக்கமாட்டாது. ஐரோப்பிய பொருளாதார சமூகத்தை யாராவது தேசிய இனங்கள் ஒன்று கலப்பாக எடுத்துக் கொண்டால் அவர் தேசிய இனங்கள் ஒன்று கலப்பைப் பற்றி வெறும் பொருளாதாரவாத கண்ணோட்டமுடையவராகவே நாம் பார்க்க வேண்டும்.

22 ம் பக்கத்தில் "ஒரு நாட்டில் தோன்றும் தேசிய இயக்கம் எந்த அளவிற்கு பலம் பெற்றதாக விளங்குகிறது என்பது இரண்டு முக்கிய காரணிகளில் தங்கியிருக்கிறது முதலாவது அந்த நாட்டில் தோன்றும் முதலாளித்துவ பலம் எப்படிப்பட்டது என்பது, பலமான முதலாளித்துவ வளர்ச்சி முற்போக்கான தேசியத்தை தோற்றுவிக்கிறது.பலவீனமான முதலாளித்துவ வளர்ச்சி பிற்போக்கான தேசியத்தை தோற்றுவிக்கின்றது." என்று கூறப்படுகின்றது. இது தவறான கருத்தாகும். நடைமுறையில் மூன்றாம் உலக நாடுகளில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவம் இல்லாத போதும் புரட்சியாளர்களால் சரியான முற்போக்கான தேசியத்தை உருவாக்க முடியும் என்ற உண்மையை இக்கருத்து மறுக்கின்றது.

23 ம் பக்கத்தில் முதல் பந்தியில் தரகுமுதலாளியம் தொழில்படும் முறைபற்றி கூறப்படுகின்றது.கோட்பாட்டளவில் பார்த்தால் தரகுமுதலாளி வர்க்கம் இப்படியே தொழில்படும். ஆனால் இலங்கையில் தரகுமுதலாளி வர்க்கம் ஒரு இயக்கு சக்தி என்று நாம் பார்க்க முடியுமா? தான் திட்டமிட்டு ஏனையவற்றை முன் எடுக்கும் ஒரு சக்தியாக இலங்கையின் தரகுமுதலாளி வர்க்கத்தை பார்க்க முடியுமா? குறிப்பாக தமிழ் தரகுமுதலாளி வர்க்கம் இதைவிட மோசமான நிலையிலேயே உள்ளது. அது திட்டமிட்டு செயல்படும் அளவிற்கு பலம் வாய்ந்தது அல்ல. மேற்படி பந்தியில் குறிப்பிட்ட அளவு பலம் வாய்ந்த ஒரு தரகுமுதலாளி வர்க்கம் இலங்கையில் இல்லை. இன்று ஒரு சிக்கலான கேள்வி ஒன்றுள்ளது. எமது நாட்டில் இருக்கும் பணம் படைத்த வர்க்கங்களான முதலாளி, தரகுமுதலாளி போன்ற வர்க்கங்களுக்கும் இன்று ஆயுதம் தாங்கி மக்களை அடக்கியாளும் பாசிச குழுக்களுக்கும் இடையிலான உறவு என்ன? என்பதே அக்கேள்வியாகும். ஏன் எனில் இலங்கை போன்ற ஒரு நாட்டில் பல பாசிசக் குழுக்கள் மக்களை அடக்கியாளவும் அதிகாரத்திற்கும் போட்டி போடுகின்றன. பழைய மரபுத்தனமான "வர்க்கப்பார்வை" என்று கூற

www.tamilarangam.net

ப்படுவதிலிருந்து விடை காண முடியாது. அதாவது இந்த விதமான குழுக்களை வெறும் வர்க்கங்களின் கருவிகளாக பார்க்க முயல்வது தவறு.

23 ம் பக்கத்தில் 3 வது பந்தியில் வடக்கு-கிழக்கு பாட்டாளிவர்க்கத்தின் பலம் பற்றி ஆராயப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பாட்டாளிவர்க்கக் கட்சி தோன்றுததற்கான காரணத்திற்கு, பாட்டாளிவர்க்கத்தின் பலவீனமான நிலையுடன் இணைத்தே பார்க்க வேண்டும் என்று கூறப்படுகின்றது.இந்த பந்தியில் ஒரு பாட்டாளிவர்க்க தாபனம் தோன்றுதது ஒரு வகை ஆதங்கத்துடன் வெளிப்படுத்தப்படுகிறது.எமது மக்கள் மத்தியில் இருக்கும் பிரச்சனைகளை தீர்ப்பதற்குரிய சரியான தாபன வடிவமாக "பாட்டாளிவர்க்கக்கட்சி" என்ற தாபன வடிவம் தான் சரியானதா? 19 ம் நூற்றாண்டின் இறுதிக்காலங்களிலும் 20 ம் நூற்றாண்டின் தொடக்ககாலங்களிலும் முதலாளித்துவம் வளர்ச்சியை நோக்கி வளர்ந்த நாடுகளில் பாட்டாளிவர்க்கம் புரட்சிகரமானது என்றும்,அது முழு மக்களது விடுதலையை ஈட்டுவதற்கான தலைமையை தாங்கி போராடக்கூடிய ஒரே ஒரு வர்க்கம் என்று இனங்காட்டப்பட்டது. அதனை கருத்தில் கொண்டு சமுதாய மாற்றத்திற்கு ஒரு திட்டம் முன்வைக்கப்பட்டது. அத்திட்டத்தின் அடிப்படையில் வேலை செய்த தாபனங்கள் பாட்டாளிவர்க்க தாபனங்களாக இனங்காணப்பட்டது.இன்று உலகளாவில் எவ்வளவோ மாற்றங்கள் நடைபெற்றுள்ளது. தற்போது மூன்றும் உலகநாட்டுப் போராட்டங்கள் பல பாட்டாளிகள் என்போர் இல்லாமலேயே முற்போக்காக முன் எடுக்கப்படுவதை நாம் அவதானிக்கலாம் அதே நேரத்தில் மூன்றும் உலக நாட்டுப் போராட்டங்களில் பல பிற்போக்கான அனுபவங்கள் இருந்த போதும் அதற்கான காரணம் பாட்டாளிகள் தலைமை தாங்கவில்லை, பாட்டாளிவர்க்க தாபனம் தலைமை தாங்கவில்லை என்பது அல்ல. நடைமுறையில் அந்த பழைய தத்துவங்கள் இன்றைக்கு எந்த மூன்றும் உலகநாட்டின் பிரச்சனைகளை தீர்க்கவல்லன என்பது எம்முன் உள்ள கேள்வியாகும்.

நாம் செய்ய வேண்டியது என்னவென்றால்,எமது சமுதாயத்தில் நிலவும் முரண்பாடுகளை விரிவாக ஆராய்ந்து சரியான ஒரு கோட்பாட்டையும்,இந்த முரண்பாடுகளை இல்லாது ஒழித்து புதிய முரண்பாடுகளை முகங் கொடுக்க முனைவதன் செய்வதன் மூலம் சமுதாயத்தின்
புரட்சிகளை எந்த எந்த சமுதாய சக்திகள் முன்னெடுக்க தயாராக இருக்கின்றன என்பதை கண்டறிந்து,அந்தந்த சமுதாய சக்திகளுக்கு தலைமை தாங்கக் கூடிய வகையில் ஒரு புரட்சிகர தாபனத்தை கட்டுவது தான் நாம் செய்ய வேண்டியது. இதனை நாம் சாதிப்பதற்கு வெறும் சுலோகங்கள்,இலகுவான வாய்ப்பாடான கோட்பாடுகள் என்பவற்றுடன் கட்டிப் பிடித்து கொண்டிருப்பதை நிறுத்த வேண்டும் ஏன் எனில் அவை சமுதாயத்தில் எந்த விதமான மாற்றங்களையும் கொண்டு வந்து விட மாட்டாது.ஒரு புரட்சிகரமான தாபனத்தையும் அதன் தத்துவத்தையும் உருவாக்குவது என்பது இலகுவான காரியம் அல்ல.இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்புடைய போதும் அவை தனிவகைப்பட்ட பணிகளாகும். எமது சமுதாயத்தில் புரட்சியை முன்னெடுப்பதற்குரிய கோட்பாடுகளை வரையறுப்பது என்பது கடந்த காலத்தில் சொல்லப்பட்ட பாட்டாளி வர்க்க தத்துவத்தின் மீதான விமர்சனமாக அமைவது தவிர்க்க முடியாது. அதே போல் ஒரு புரட்சிகர தாபனத்தை எவ்வாறு கட்டமைப்பது என்ற பிரச்சனையும் கடந்த காலத்தில் கூறப்பட்ட லெனினியக் கட்சிக்கோட்பாடு என்பதன் மீதான விமர்சனமாக அமைவதும் தவிர்க்க முடியாது.

" தேசிய இயக்கத்தில் ஏற்படும் முன்னேற்றங்களையும் பின்னடைவுகளையும் அந்தந்த காலகட்டத்தில் போராட்டத்தில் தலைமை கொடுக்கும் வர்க்கங்களை இனங் கண்டு கொள்வதன் மூலமே விளக்க முடியும்" என்று 24 ம் பக்கத்தில் தொடக்கத்தில் கூறப்படுகின்றது. இன்றைய சமுதாயத்தில் காணப்படும் முரண்பாடுகளை குறுகிய வர்க்கப்பார்வைக்குள் எளிமையாக விளக்கிவிட முடியாது. உதாரணமாக தேசிய விடுதலைப் போராட்டத்தில் இராணுவரீதியாக ஏற்படும் முன்னேற்றத்தையோ அன்றி பின்னடைவையோ வர்க்கப்பார்வை என்பதற்கூடாக மட்டும் விளக்க முனைவது, நாம் சரியான முடிவுகள் எடுக்க உதவ மாட்டாது.

மார்க்சியத்தின் தோற்றமானது பாட்டாளி வர்க்கத்தின் தோற்றத்திற்கு முன்பே நடைபெற்றது என்று "தூண்டில்" எழுதியதை மறுத்து சொல்லப்பட்ட கருத்தானது,பாட்டாளி வர்க்க சித்தாந்தம் என்ற ஒன்றை மட்டுமே மார்க்சியமாக குறுக்க முனைந்துள்ளதோ என்று எண்ணத் தோன்றுகிறது. சமுதாயத்தையும் இயற்கையையும் பற்றிய மார்க்சின் இயங்கியல் அணுகுமுறை, அவரது இயக்கவியல் பொருள்முதல்வாதப் பார்வை என்பன மிகவும் வளர்ச்சியடைந்த விஞ்ஞானமாகும். ஒரு சில ஆய்வுகளில் இருந்து பாட்டாளி வர்க்க சித்தாந்தம் ஒன்றையும் அவர் வகுத்தார். பாட்டாளிவர்க்க சித்தாந்தம் ஒன்று மட்டுமே மார்க்சியம் எனக் குறுக்க முனைவது தவறு. மார்க்சியம் என்பது கிழக்கு ஐரோப்பாவின் வீழ்ச்சியின் பின்பும் அதன் வாழ்வை கொண்டிருக்கிறது என்றால் அதன் இயங்கியல் அணுகுமுறையே பிரதான காரணமாகும். ஏன் எனில் மார்க்சியத்தின் விஞ்ஞான பூர்வ

www.tamilarangam.net

மான அணுகுமுறையை இயங்கியல் இனம் காட்டுகிறது. மார்க்சில் சமுதாயத்திலும் இயற்கையிலும் நிகழும் பல முரண்பாடுகளை இயங்கியல் ரீதியாக அணுகியது என்பது மார்க்சியத்தின் அடிப்படை. ஆக மார்க்சியத்தை பாட்டாளி வர்க்கத்தின் தோற்றத்துடன் போட்டுக் குழப்பக் கூடாது. அது ஒரு பிரச்சனையை ஆய்வு செய்யும் முறை. அந்த ஆய்வு செய்யும் முறையில் இருந்து அன்றைய சமுதாயத்தின் முரண்பாடுகளை தகர்த்தெறிந்து மாற்றியமைத்து சமுதாயத்தை முன்னே நோக்கி வழி நடத்தி செல்லக் கூடியவர்கள் பாட்டாளிகள் என்னும் வர்க்கம் என்று மார்க்சு இனங்கண்டார்.இதுவே பாட்டாளி வர்க்க சித்தாந்தம் என்று சொல்லப்படுகிறது. இன்றைக்கு மார்க்சின் இயங்கியல் ஆய்வு முறை இயற்கைக்கும், சமுதாயத்திற்கும் ஏனைய மார்க்சியர்களால் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. இன்னும் திட்டவட்டமாக வளர்த்தெடுக்கப்படும். ஆனால் மார்க்சினால் கூறப்பட்ட பாட்டாளி வர்க்க சித்தாந்தம் என்பது இன்று கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

" ஆகவே எந்த ஒரு அரசியல் கோரிக்கையையும் சரியாக புரிந்து கொள்ள வேண்டுமாயின் எந்த கோரிக்கையின் பின்னால் மறைந்திருப்பது எந்த வர்க்கத்தின் நலன்கள் எனத் தெளிவாக இனங்கண்டு கொள்ள வேண்டும்." என்று 27 ம் பக்கத்தில் 2 ம் பந்தியில் குறிப்பிடப்படுகின்றது. உண்மையில் சில அரசியல் கோரிக்கைகளின் பின்னால் எந்த ஒரு வர்க்கத்தின் நலனும் மறைந்திராமல் ஒரு குழுவின் நலன்களே மறைந்திருக்க முடியும்.புலிகள் போன்று வர்க்கமாகவும் உருவாகாத அதே போல் மிகவும் பலம் வாய்ந்த குழுவாகவும், பாரிய மூலதனத்தையும் கொண்ட ஒரு குழு தனது நலன்களையே அரசியல் கோரிக்கைகள் போல் முன் வைக்க முடியும். கடந்த கால நடைமுறையில் இருந்து புலிகள் எந்த ஒரு வர்க்கத்தினதும் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்த தயாராக இல்லை. தமது குழுநலன்களை மையமாக வைத்தே அவர்கள் செயல்படுகிறார்கள். அதற்கு அவர்கள் எந்த ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் மீது தங்கி நின்றோ அன்றி துணைக்கழைக்கவோ இல்லை. மாறாக தமிழ்ப் பகுதியில் வாழும் தமிழ்மக்களின் நலன்கள் சிலவற்றை தமக்கு சாதகமாக நன்றாகவே பயன்படுத்துகிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட தாபனம் அல்லது அமைப்பானது எந்த வர்க்கத்தை அல்லது எந்த சமூக சக்தியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது என்பதை இனங்காண்பதற்கு மேற்படி கட்டுரையானது இரண்டு அணுகு முறைகளை கையாள்கிறது. ஒன்று அந்த அமைப்பின் வர்க்க மூலத்தை ஆராய்வது. இரண்டாவது சமூகத்தில் உள்ள பிரதான வர்க்கங்களை ஆராய்வது.இந்த இரண்டிலும் இரண்டாவதற்கே அதி கூடிய அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.இதில் இரண்டாவதற்கு கொடுக்கப்பட்டுள்ள மிகையான அழுத்தம் சரியானதாக படவில்லை. ஒரு சமுதாயத்தில் வர்க்கங்கள் அந்த சமுதாயத்தை மாற்றியமைக்கும் பலத்தை பெற்றிருக்காத போது அந்த சமுதாயத்தில் நிலவும் அமைப்புக்கள் அந்த சமுதாயத்தில் காத்திரமான பங்கை வகிக்கும் போது இரண்டாவதற்கு கொடுக்கும் முக்கியத்துவம் எவ்வளவு தூரம் சரியானது என்பது கேள்விக் குறியே.

"இந்த வகைகளில் தமிழ்த் தேசியத்தை பலவித குறைபாடுகளுடன்தான் என்றாலும் முன்னெடுத்து செல்லும் ஒரே அமைப்பாக புலிகள் தான் திகழ்கிறார்கள்." என்று கட்டுரையில் குறிப்பிடப்படுகிறது. இக்கருத்தானது புலிகள் பற்றிய சரியான மதிப்பீடு அல்ல. அத்துடன் புலிகள் தமிழ் மக்களுடன் கொண்டுள்ள உறவையும் சரியாக விளக்கவில்லை. மாறாக மேலே குறிப்பிட்ட வசனமானது " புலிகள் தமது நலன்களுக்காகவும் தமது இருத்தலுக்காகவும் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இந்த ஆயுதப் போராட்டமானது விரும்பியோ விரும்பாமலோ தமிழ் தேசியத்துடன் உறவு கொண்டுள்ளது " என்று குறிப்பிடப்பட்டிருந்தால் சரியானது.

"புலிகள் இந்தப் போராட்டத்தில் ஒப்பீட்டளவில் உறுதியாக நிற்கின்றார்கள்."என்று குறிப்பிடப்படுகின்றது. உண்மையில் இது ஒரு ஆய்வு முறையே அல்ல. புலிகளைப் பற்றிய மதிப்பீட்டுக்கு வருவதற்கு ஓர் அளவுகோலாக முன்பு தவறு இழைத்த இயக்கங்களை நாம் கொள்ளக்கூடாது. மேலே சொன்ன மதிப்பீட்டை நாம் செய்ய வேண்டுமாயின் தமிழ்மக்களின் நலன்களையே அளவுகோலாக கொள்ள வேண்டும். அதாவது தமிழ் மக்களின் தேசிய நலன்களில் புலிகள் எவ்வளவு தூரம் உறுதியாக அதனை மையமாக வைத்து செயல்படுகிறார்கள் என்பதே பிரச்சனை.தமிழ் மக்களின் நலன்களை மையமாக வைத்து செயல்படாத ஓர் அமைப்பை, தமிழ்மக்களின் தேசிய நலன்கள் சிலவற்றை தமக்கு சாதகமாக பயன்படுத்த முனையும் ஓர் அமைப்பை, இந்தப் போராட்டத்தில் உறுதியாக நிற்பதாக ஏற்றுக் கொள்ள முடியாது. 32 ம் பக்கத்தில் இருந்து தொடர்ச்சியாக புலிகளைப் பற்றி மிகவும் எளிமையாகவும் தெளிவாகவும் எமக்கு பிரயோசனப்படக்கூடிய கருத்துக்களை கட்டுரை முன் வைக்கிறது.

" இந்த வகையில் புலிகள் விரும்பியோ விரும்பாமலோ முழுமனதுடனோ அரைகுறைமனதுடனோ இந்திய இராணுவத்துடன் மோதியதன் மூலம் தமிழ் தேசியத்தை பிரதிநிதித்துவம் செய்தார்கள்.இப்படி

ப்பட்ட யுத்தம் நடைபெறும்போது இந்த யுத்தத்தில் யார் பக்கத்தில் நியாயம் இருக்கிறது என்ற பொதுப்படையான கேள்விக்கு பதிலாக புலிகள் ஒரு தேசிய சக்தியென்று குறிப்பிடுவது சரியானதே. " என்று கட்டுரையில் குறிப்பிடப்படுகிறது.இந்திய இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடையிலான மோதல் என்ற ஒன்றை வைத்துக் கொண்டே புலிகளை தேசிய சக்தியாக பார்ப்பது தவறு. இது இயங்கியலுக்கு முரணான அணுகுமுறை முரண்பாடு என்பது இரண்டு சக்திகளுக்கு இடையே மட்டுமே நடைபெற முடியுமென்ற தவறான அணுகுமுறையை அடிப்படையாக கொண்டது.ஒவ்வொரு பிரச்சனையிலும் பல முரண்பாடுகள் நிலவ முடியும்.இந்திய ஆதிக்கத்திற்கும் - தமிழ்மக்களுக்கும் , இந்திய இராணுவத்திற்கும் - தமிழ்மக்களுக்கும், இந்திய ஆதிக்கத்திற்கும் - இலங்கையில் உள்ள முழுமக்களுக்கும், இந்திய இராணுவத்திற்கும் - புலிகளுக்கும்... இவ்வாறாக இந்திய இராணுவம் இலங்கையில் இருந்த காலத்தில் பல முரண்பாடுகள் நிலவின.இந்திய இராணுவத்திற்கும்,இந்திய அரசுக்கும்,புலிகளுக்கும் இடையிலான முரண்பாடானது மேல்நிலைக்கு வந்ததே யுத்தம் தொடங்குவதற்கு காரணமாக அமைந்தது.அந்த யுத்தத்தில் தமிழ்மக்களின் எந்த நலன்களையும் மையமாக வைத்து புலிகள் செயற்படவில்லை.ஆனால் அந்த யுத்தத்தில் தமிழ்மக்களின் நலன்களும் உறவு கொண்டிருந்தது. தமிழ்மக்களுக்கும்-இந்திய ஆதிக்கத்திற்கும்,இந்திய அரசுக்கும்,இந்திய இராணுவத்திற்கும் இடையிலான எந்த ஒரு முரண்பாடும் மேல்நிலைக்கு வருவதற்கு முன்பே புலிகளுக்கும் - இந்திய அரசுக்கும், இந்திய இராணுவத்திற்கும் இடையிலான முரண்பாடு மேல்நிலைக்கு வந்து யுத்தம் தொடங்கியது.அதன் பின்பாவது தமிழ்மக்களின் எந்த ஒரு தேசிய நலன்களையும் மையமாக வைத்து செயல்படாமல் தமிழ் மக்களின் நலன்களை பயன்படுத்தும் போக்கே புலிகளிடம் காணப்பட்டது.அந்த யுத்தத்தில் புலிகள் தமிழ்மக்களின் பிரதிநிதிகளாக இந்திய இராணுவத்துடன் மோதியதாக கூறுவது தவறானது. இது ஒவ்வொரு பிரச்சனையில் நிலவும் பன்முகப்பட்ட பல முரண்பாடுகளை மறுப்பதாகும்.ஆக புலிகள் இந்திய இராணுவத்துடன் மோதிய போதும் தமிழ்தேசியத்தை பிரதிநிதித்துவம் செய்யவில்லை.

இக்கட்டுரையானது தமிழ்த் தேசியத்தின் நலன்களுக்கும் புலிகளின் நலன்களுக்கும் இடையிலான பிணைப்பை சரியாக இனங்காணத் தவறியதால் தமிழ்த் தேசியத்தை புலிகள் பிரதிநிதித்துவப் படுத்துவதாகவோ அன்றி புலிகளை ஒரு வகை தேசிய சக்திகளாகவோ காட்ட முனைகிறது. இந்த போராட்டத்தில் புலிகளை தேசிய சக்தி என்று ஏன் வரையறுக்க முனைகின்றார்கள் ? இதனால் இந்தப் போராட்டத்திற்கு விளையும் நன்மை என்ன ? என்று விளங்கவில்லை. "இப்படியான ஒரு யுத்தத்தில் நியாயம் எந்த பக்கத்தில் இருக்கிறது என்ற பொதுப்படையான கேள்விக்கு விடையளிக்கும் வகையில் புலிகளை தேசிய சக்தியாக இனங்காண்பது சரியானதே"என்று கூறப்படுகிறது.இப்படியான ஒரு யுத்தத்தில் நியாயம் எந்தப்பக்கத்தில் இருக்கிறது என்ற பொதுப்படையான கேள்விக்கு தமிழ்மக்களின் போராட்டத்தை நீதியான ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாக நாம் ஏற்றுக் கொள்வதே சரியானது. ஆனால் இந்த யுத்தத்தில் தமிழ்மக்களின் நலன்களுக்கு அப்பாற்பட்டு அந்த நலன்களையே பயன்படுத்தும் வகையில் புலிகளுக்கு என்று குறிப்பிட்ட நலன்கள் இருக்கிறது.அத்துடன் இந்த யுத்தம் என்ற முரண்பாட்டில் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் குறிப்பிட்ட ஒரு முரண்பாடு,தமிழ்மக்களின் தேசியத்திற்கும்-சிங்களப் பேரினவாதத்திற்கும், அரசுக்கும் இடையிலான முரண்பாட்டுக்கு அப்பாற்பட்டு தனக்கே உரிய குறிப்பான தன்மைகளுடன் நிலவுவதால் புலிகளை ஒரு தேசியசக்தியாக ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் தமிழ்மக்களுக்கோ அன்றி புரட்சிகர சக்திகளுக்கோ இல்லை. புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான முரண்பாடானது அந்த சக்திகளது தனிப்பட்ட நலன்களை சார்ந்து இருக்கிறது என்பது பிரதானமானது.

புலிகள் என்ற குழுவின் நலன்களை அடையும் வழிமுறையானது தமிழ்மக்களின் தேசிய நலன்கள் சிலவற்றுடன் பின்னிப் பிணைந்துள்ளதால் இந்தப் போராட்டத்தில் புலிகளின் பாத்திரத்தை இனங்காண்பதில் பலருக்கு குழப்பம் நிலவுகின்றது. மேலும் பலர் ஒரு பிரச்சனையில் நேர் எதிரான இரண்டு முரண்பாடுகளே இருக்க முடியும் என்று கருதுகின்றார்கள். அது தவறு. மாறாக ஒரு பிரச்சனையில் பலதரப்பட்ட முரண்பாடுகள் நிலவ முடியும். பலதரப்பட்ட சக்திகள் தமது நலன்களுக்காக போராட முடியும். இன்று நடக்கும் யுத்தத்திலும் அரசுக்கும், பேரினவாதத்திற்கும் - தமிழ் மக்களுக்கும் இடையில் எவ்வாறு முரண்பாடு நிலவுகின்றதோ,அதே சமயத்தில் புலிகளுக்கும் - அரசுக்கும் அதன் இராணுவத்திற்கும் இடையிலான முரண்பாட்டையும் நாம் பார்க்க வேண்டும்.அரசுடன் முரண்படும் இரண்டு சக்திகளுக்கும் இடையிலான உறவானது, அவற்றை எந்த சந்தர்ப்பத்திலும் ஒன்றாக போட்டு குழப்ப நாம் இடமளிக்கக் கூடாது.அதே நேரத்தில் அரசுடன் மோதும் இந்த இரண்டு சக்திகளும் உடன்பாடு, முரண்பாடு காணக் கூடிய அம்சங்கள் என்ன ? என்றும் பார்க்க வேண்டும். இந்த இரண்டு சக்திகளுக்கும் இடையிலான உறவினை நாம் ஆராயும் போது புலிகள் தமிழ் தேசியத்தின் நலன்க

www.tamilarangam.net

ளை காட்டிக் கொடுக்கத் தயங்க மாட்டார்கள் என்பதையும் தமிழ் தேசியத்தை மையமாக வைத்து அவர்கள் போராடவில்லை என்பதையும் நாம் இனங்காணுவதால் அவர்களை தேசிய சக்தி என்று நாம் ஏன் வரையறுக்க வேண்டும்?

" மக்களைப் பொறுத்த வரையில் சிங்களப் பேரினவாதத்திற்கும் தமிழ் தேசியத்திற்கும் இடையிலான முரண்பாடு பிரதான வடிவம் பெறுவதனால்...." என்று கட்டுரையில் குறிப்பிடப்படுகின்றது.முரண்பாடுகள் பற்றிய இந்த அணுகு முறை தவறானது.சமுதாயத்தில் நிலவும் முரண்பாடுகளில் ஒன்று பிரதான இடம் வகிக்கின்றது என்ற கருத்தானது ஏனைய முரண்பாடுகள் சமுதாய வளர்ச்சியில் செலுத்தும் பங்கை மறைமுகமாக மறுப்பதுடன்,ஏனைய முரண்பாடுகள் பிரதான முரண்பாட்டின் அடிப்படையிலேயே நிலவுகின்றன என்ற ஒரு கருத்து உருவாக்கப்படுகிறது.

சமுதாயத்தினதும், இயற்கையினதும் ஒவ்வொரு நிகழ்விலும் பலதரப்பட்ட முரண்பாடுகள் நிலவுகின்றன. இந்த முரண்பாடுகளில் குறிப்பிட்ட சில முரண்பாடுகள் ஒரே நேரத்தில் மேலாதிக்கத்திற்காக போட்டி போடுகின்றன.இந்த மேலாதிக்கத்திற்காக போட்டி போடும் முரண்பாடுகள் தீர்க்கப்படுவதன் அடிப்படையிலேயே சமுதாயமானது ஒரு பாய்ச்சலை அன்றி முன்னேற்றத்தை காட்டுகிறது மிகவும் குறிப்பானதும் இறுதியானதுமான ஒரு திட்டவட்டமான ஆய்வில் மேலாதிக்கத்திற்காக போட்டி போடும் முரண்பாடுகளில் ஒன்று மேல்நிலையில் இருப்பதை நாம் காணலாம். இந்த மேல்நிலையில் இருக்கும் முரண்பாடானது ஏனைய மேலாதிக்கத்திற்காக போட்டி போடும் முரண்பாடுகளின் மேல் காத்திரமான பங்கை ஆற்ற முடியாது. அதே நேரத்தில் இந்த மேலாதிக்கத்திற்காக போட்டி போடும் முரண்பாடுகளில் பகுதி முரண்பாடுகளும் காணப்படும். இந்த பகுதி முரண்பாடுகளும் மேலாதிக்கத்திற்காக போட்டிபோடும் முரண்பாட்டின் அளவு பண்புகளை தீர்மானிக்கும். ஆகவே தமிழ்மக்கள் மத்தியில் சிங்கள பேரினவாதத்திற்கும் தமிழ் தேசியத்திற்கும் இடையிலான முரண்பாட்டை பிரதான முரண்பாடாக காட்ட முனைவது தவறானது.

இலங்கை மக்கள் மத்தியில் அவர்களது முன்னேற்றத்திற்கு தடையாக பல முரண்பாடுகள் நிலவுகின்றன. அவற்றில் இன்று இலங்கை மக்களின் வாழ்வில் மூன்று முரண்பாடுகள் மேலாதிக்கத்திற்காக போட்டி போடுகின்றன. திட்டவட்டமான ஓர் இறுதி ஆய்வில் குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் ஏதாவது ஒரு முரண்பாடு மேல் நிலையில் இருப்பதை நாம் காணலாம். ஆனால் இது மற்ற இரண்டு முரண்பாடுகளும் தொடர்ச்சியாக மேலாதிக்கத்திற்கு போட்டி போடுவதை மறுக்காது. மேலாதிக்கத்திற்காக போட்டி போடும் இந்த மூன்று முரண்பாடுகளும் மிகவும் சிக்கலான வடிவத்தில் உறவு கொண்டுள்ளன,முரண்படுகின்றன.இந்த மூன்று முரண்பாடுகளையும் ஒரே நேரத்தில் தீர்ப்பதற்குரிய திட்டத்தை புரட்சியாளர்கள் முன் வைக்க வேண்டும். ஏதாவது ஒரு முரண்பாட்டை மட்டும் கணக்கில் எடுத்து அதனை மட்டும் தீர்ப்பதற்குரிய திட்டத்தை முன் வைப்பது சரியான அணுகு முறையாக அமையாது.இலங்கை மக்கள் மத்தியில் மேலாதிக்கத்திற்காக போட்டி போடும் மூன்று முரண்பாடுகள் தான் என்ன?

1) இலங்கையில் வாழும் இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்திற்கும்-ஐக்கியமின்மைக்கும் இடையிலான முரண்பாடு.
2) இலங்கையில் நிலவும் பாசிசத்திற்கும்-சனநாயகத்திற்கும் இடையிலான முரண்பாடு.
3) இலங்கை மக்கள் மேல் ஆதிக்கத்தை நிறுவ முனையும் நிறுவியிருக்கும் ஏகாதிபத்தியத்திற்கும்-இலங்கை மக்களின் சுயாதியத்திற்கும் இடையிலான முரண்பாடு.

இன்னும் பல முரண்பாடுகள் எமது சமுதாயத்தில் நிலவிய போதும் இந்த மூன்று முரண்பாடுகளே மேலாதிக்கத்திற்காக போட்டி போடும் முரண்பாடுகள் ஆகும்.

சிங்களப் பேரினவாதத்திற்கும்-தமிழ் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு உண்மையில் ஒரு பகுதி முரண்பாடாகும்.அதாவது இலங்கையில் வாழும் இனங்களின் ஐக்கியம் -ஐக்கியமின்மை என்ற முரண்பாட்டின் பகுதி முரண்பாடாகும்.இந்த பகுதி முரண்பாட்டின் அளவையும் பண்பையும் குறைத்து மதிப்பிடுவதாக யாரும் கருத வேண்டியதில்லை.சிங்களப் பேரினவாதத்திற்கும் தமிழ்மக்களுக்கும் இடையிலான முரண்பாடு "பிரதானமுரண்பாடாக" இருந்தால்,தமிழ்மக்களுக்கும் -முசலீம்மக்களுக்கும் இடையில் நிலவும் முரண்பாட்டை எவ்வாறு விளக்குவது. அளவில் பெரிதாகவும் தெளிவாக தெரிவதாகவும் இருக்குமிந்த முரண்பாட்டையோ அன்றி எந்த முரண்பாட்டையோ "பிரதானமுரண்பாடு" என்று கருதுவது பிரச்சனையை தீர்க்க உதவாது.

இ) தடுப்பு யுத்தமும் அழிவு யுத்தமும் என்ற தலையங்கத்தின் கீழ் உள்ள கருத்து தொடர்பாக.........

42 ம் பக்கத்தில் 3 வது பந்தியில் பாசிசம் என்பது குறிப்பான பிரச்சனையாகவும் தமிழ் மக்களது தேசிய விடுதலை என்பது பொதுவான பிரச்சனையாகவும் கூறப்படுகிறது.இது ஏற்றுக் கொள்ள முடியாத கருத்தாகும். பாசிசம் என்பது எமது சமுதாயத்தில் மேலா



9 ம். . . பக்கத்தில்

www.tamilarangam.net

# இலக்கிய சந்திப்பு

கடந்த 11.04.92 அன்று ஜேர்மனியில் Reutlingen இல் 12 வது இலக்கிய சந்திப்பு நடைபெற்றது.

இச்சந்திப்பில் Holland, Norway, London, Swiss போன்ற நாடுகளில் இருந்தும் ஜேர்மனில் இருந்தும் ஆக்கதாரர்களும், வாசகர்களும், சஞ்சிகை ஆசிரியர்களும், கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பு சிவரமணியின் நினைவுடன் ஆரம்பமாகியது.சிவரமணி தற்கொலை செய்தது சரியா பிழையா என்ற விவாதம் முளைவிட்டது. இவ்விவாதம் இடைநிறுத்தப்பட்டு முடக்கப்பட்டது.இவ்வகையான சத்தான விவாதம் இடைநிறுத்தப்பட்டது ஆரம்பத்திலேயே பலரது வாய்களை மௌனமாக்கியது.

ஓர் கலைஞனோ, போராளியோ இறந்து விட்டால் வெறுமனே ஒரு நிமிடம் மௌன அஞ்சலியுடன் நிறுத்துவதை விட அவரது கருத்துக்களை நினைவுபடுத்திக் கொள்வது சிறப்பாகும். அப்படிச் செய்யும் போதும் அவரது சிறப்பம்சங்களை மட்டும் எடுத்துக் கூறி விட்டு செல்லாமல் அவர் பற்றிய விமர்சனத்தை மேற்கொள்வதன் மூலமே எதிர்வரும் காலங்களில் வளரும் கலைஞர்கள், போராளிகள் படிப்பினை பெற முடியும்.

இதனைத் தொடர்ந்து " வாசகர் விமர்சனம் " நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு பெயர் மட்டுமே வாசகர் விமர்சனம். வழமை போல் இம்முறையும் சஞ்சிகை ஆசிரியர்களே இந்நிகழ்ச்சியை ஆக்கிரமித்தனர். ஆனால் சிறு வித்தியாசம். ஆசிரியர்கள் ஒருவர் மாறி ஒருவரை புகழ ஆரம்பித்து விட்டனர்.

" இலங்கையில் மனித உரிமை மீறல்களும் பரவலான எதிர்ப்பு நடவடிக்கைகளும் " என்ற தலைப்பில் P. ராஜநாயகம் உரையாற்றினார். சிறிலங்கா சிறையில் இடம் பெற்ற சித்திரவதைகளை விட தமிழீழ சிறைகளில் புலிகளினால் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகள் பன்மடங்கு கொடூரமானது,என்பதனை எடுத்துரைத்தார். மேலும் அவரது உரை கூடிய மனித உரிமை மீறல்களை மட்டும் உயர்த்திப்பிடித்ததால் புரட்சிகர போராட்டங்களின் போது இடம்பெற்ற தன்னிச்சையான எழுச்சிகளில் ஏற்பட்ட தவறுகளையும் இம் மனிதஉரிமை மீறல்களுடன் ஒப்பிட்டு கட்சிகள் திட்டமிட்டு செய்தது போன்று மிகைப் படுத்தி விவரித்தார்.

இதனைத் தொடர்ந்து ஆரம்பித்த தாயகம் மீதான துதிபாடல் பலரின் சகிப்பின் எல்லையை பரிசோதிப்பதாக அமைந்ததுடன் ஒரு நல்ல விளம்பர நிகழ்ச்சி போன்றும் காட்சியளித்தது.

பெண்கள் சந்திப்பு மலர் பற்றிய விமர்சனம் இடம்பெற்றது. இந்நிகழ்சியிலும் பலர் கலந்து கொள்ளவில்லை. மேலும் பெண்கள் இம்மலரில் இடம் பெற்ற கட்டுரைகள் மீதான விமர்சனத் தொகுப்பொன்றை சமர்ப்பித்திருந்தால் சிறப்பாக அமைந்திருக்கும். மொத்தத்தில் பிரார்த்தனை முடிவில் புராணம் பாடுவது போல பெண்கள் நிகழ்ச்சியும் ஒரு சம்பிரதாயமாக மட்டுமே அமைந்து இருந்தது கசப்பான உண்மையாகும்.

சமூகத்தில் பெண்கள் மீதான வன்முறை பற்றிய புள்ளிவிபரத்துடன் கூடிய தகவல்கள் வாசிக்கப்பட்டன.

" ஓர் அகதியின் பாடல் " வ.ஐ.ச ஜெயபாலனின் நூல் அறிமுகமும் விமர்சனமும் இடம் பெற்றது.

இலக்கிய சந்திப்பில் வளர்ந்து வரும் புதிய ஆக்கதாரர்களை அறிமுகப்படுத்தவும் ஊக்கப்படுத்தவும் இந்நிகழ்ச்சி தொடர்ந்து இடம் பெறுவது சிறப்பே.

ஒட்டுமொத்தமாக பார்ப்பின் இவ் இலக்கியச் சந்திப்பு நீண்ட மௌனத்தை சாதிக்கவே தூண்டியது. இலக்கிய சந்திப்பு தனது நிகழ்ச்சிகளை மாற்றிக் கொள்ளல் வேண்டும். சம காலத்தில் வெளியாகும் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் பற்றிய தெரிவு இடம் பெறல் வேண்டும். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட தெரிவுகள் மீது தயாரிக்கப்பட்ட விமர்சனத் தொகுப்பும், கலந்துரையாடலும் இடம்பெறுமாயின் ஆரோக்கியமாக இருக்கும். வாசகர் விமர்சனம், ஆசிரியர் ஆக்கதாரர்களின் பதில்கள் என்ற இரு நிகழ்ச்சிகள் கட்டாயம் நீக்கப்படல் வேண்டும். மேற்கூறியவாறு தெரிவு செய்யும் ஆக்கங்கள் மீது ஆக்கதாரர் பதிலளிப்பது சிறப்பாக இருக்கும். மேலும் இவ்வாறு தெரிவாகும் சிறப்பான ஆக்கங்களை தொகுத்து ( சிறு

9 ம். . . பக்கத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் கடிதம்

அன்புடையீர், வணக்கம் !

தங்கள் "மனிதம்" இரு மாதத்துக்கொரு முறை மலரும் மலரை தொடர்ந்து வாசிக்கமுடியாவிட்டாலும் பெரும்பாலானவை என் கைகளிலே தவழ்ந்திருக்கின்றன. அப்பொழுதிருந்தே "மனிதம்" என்ற தலைப்பும், இயக்க சார்பற்ற பொதுமைத்தன்மையும் என்மனதை பெரிதும் கவர்ந்திருக்கின்றது. ஆனால் இந்த ஈர்ப்புத்தன்மையானது வெகு காலங்களுக்கு நீடிக்கவில்லை. காரணம், பல சம்பவங்கள், புதுக்கவிதைகள், புதினங்கள் என்பன ஒரு இயக்கத்தால் மாற்று இயக்கமொன்றை தாழ்த்தப்படுபவை யாகவே வெளிப்பட்டிருக்கின்றது. உங்கள் மலர் நடுநிலையான முற்போக்குத் தன்மை கொண்டதாக பிரகாசிக்கவில்லை. சீரற்ற சமுதாய ஆய்வுகூடங்களிலே மனித மாமவன் பரிசோதனைக்கு வந்ததால்தான் *மனிதம்* பறிக்கப் பட்டது. அந்த சீரற்ற சமுதாயத்தை சீர்ப்படுத்தும் மனிதமாகத்தாம் மிளிரவேண்டும். நடுநிலை பெற்று நம் மக்களின் ஏடாக மலர வேண்டும்.' உண்மைகள் உங்கள் இதழ்களில் உறக்கம் பெறக்கூடாது. அராஜகம் தலை விரித்தாடும் இடங்களை உங்கள் கூரிய எழுத்தாணிகள் அம்பலப்படுத்தவேண்டும்.' தீமைகளை வெளிப்படுத்தும் அதேநேரம் நன்மைகளை கூறவும் தவறக்கூடாது. அதாவது நன்மை எனும்போது உண்மை களின் வெளிப்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வுகளை ஒருபக்கச்சார்பு நிலையை விட்டு நடுநிலைக்கு உங்கள் "மனிதம்" நடைபயிலத்தொடங்கினால். . . . . . . .
அதன் விடையை நீங்களேயறிந்து கொள்வீர்கள்!

**ப. காண்டீபன்** *BERN*

---

மனிதத்தின் யதார்த்தமான பொதுநல நோக்குடைய சிந்தனைகள், விமர்சனங்கள் எனக்கு மிகவும் பிடித்தவைதான். ஆனாலும் தனி விமர்சனங்கள் மட்டும் எமக்கு சிறந்த விடுதலையைப் பெற்றுத்தரும் என நான் நினைக்கவில்லை.

**ஆனந்தராஜா** *MAMMERN*

---

'தங்களின் மனிதம் வீடியோ கசெட்டை தொடர்ந்தும் பிரசுரித்து எம்மக்களுக்கு உணர்வளிக்க தங்களின் சேவையை ஏங்கி நிற்கும்,

**யோன்சன்** *BASEL*

---

38ம். . . பக்கத்தின் தொடர்

கதைத்தொகுதி, கவிதைத்தொகுதி ) வெளியிடலாம்.

பல்வேறு நாடுகளில் இருந்து இச்சந்திப்புக்கு பலர் வந்து கலந்து கொள்கின்றனர். இச்சந்திப்பு எத்தனையாவது என்பதை கூறி மார்பு தட்டுவதை தவிர்த்து என்னத்தை சாதித்தோம் என்பதை திரும்பிப் பார்ப்பதன் மூலமே இச்சந்திப்புகளை Just ஓர் சந்திப்பு என்ற நிலையிலிருந்து விலகி அதன் அவசியத்தை, தேவையை, நோக்கத்தை நோக்கி நகர்த்த முடியும். இல்லையேல் எதிர்வரும் காலங்களில் இது தேவையற்ற ஒன்றாகவே கருதப்படும்.

**அருண்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## என் பிரிய சோதரி

என் பிரிய சோதரி !
நாம் சென்ற பாதை
அன்றையப்போல் தான்
ஆனாலும் வித்தியாசம்
குத்தி ரணமாக்கும் பார்வைகள்
கொலை வாளுடன்,
ஆதாரமற்ற கதைகள்
அடைக்க விலங்குடன்
நியாத்தின் பக்கங்கள்
அநியாய மாக்கப்பட்ட நிலையில்
அதே பாதையில்– தனிமையில்
மௌனியாக நான் !
கடந்த கால நினைவுகளுடன்
உனது,
மனிதத் தேடலின் முயற்சிகள்
நீ அடைந்த வேதனைகள்
அவற்றை உணர்த்திய
உன் புன்னகையில்
கன்னத்தின் கோடுகளை
எண்ணிய படியே,
அந்தக் கோடுகளற்ற
ஒரு புன்னகைக்காக
அந்தப் பாதையில்
எனது தேடலுடன் இன்னும்
நான்

**றஞ்சி**
**இலங்கை**

## சிசு மரணத்துள் சேர்க்கப் பட்டிருக்கலாம்

பாலைவனமோ பனிப்புயல் தானோ
பூ மி நடுக்கமோ எரிமலை தானோ
எதுவுமற்ற எங்கள் நாட்டில்
என்னதான் நடக்கிறது??

கீரியைக் கண்ட பாம்பது போலே
மனிதனைக் கண்ட இன்னொரு மனிதன்
எப்படி இவனைக் கொல்வது என்று
துப்பாக்கி தூக்கித் துரத்திப்போகிறான்

இனமும் மதமும் மொழியும் இன்று
இழப்புக்கான இறுதி விதிகளாய்
வானம் பார்த்த பூ மி இன்று
மனித இரத்தத்தில் சினந்து போனது. . .

எந்த மதமும் மற்றவன் உயிரை
சொந்தமாக்கச் சொல்லவில்லையே ?
அப்படி இருக்க இப்படி ஒரு விதி
எந்த மதத்தில் இருந்து வந்தது ?

கடலலை கூட செல் கொண்டொழியும்
காற்றும் எதிரியின் வார்த்தை பேசும்
வானமழையும் அமிலத்தூரலாய்
சூரிய ஒளியும் எரிகுண்டாக
காரிருள் கவச வாகனமாக
நட்சத்திரங்கள் சிதறிய செல்களாய்
ஈழத்தில் எரிந்த மனித உடல்களாய்
வானத்து நிறமும் கருமையாய் போனது. .

உலக வீட்டின் மரணப்படுக்கை
எங்கள் நாட்டிலா இடப்படவேண்டும் ?
இதற்கா நாங்கள் இங்கு பிறந்தோம்
இதைவிட நாங்கள். . இறந்து பிறந்து. .

இல்லாவிட்டால் இதயம் இயங்க
மறுத்துத் தாயின் முகத்தைக் காணா
சிசு மரணத்துள் சேர்க்கப்பட்டிருக்கலாம்

**ஆனந்தன்**